

கல்கி
மாயப்பெண்! -வலை விரிக்கும் போலீஸ்!
KALKI
20.6.2004
ரூ.6.00
கல்யாண விருந்து
கூப்பன்
லைலாவின் மஜ்னு!
இலவசம்
கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)

ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி-அலமேலு
ஸதாபிஷேகம்



தி.நகர் ஸ்ரீ ஹாலில் 4.6.2004 அன்று ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அலமேலு தம்பதியாருக்கு ஸதாபிஷேகம் ஸாஸ்த்ரோக்தமாக நடந்தேறியது. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி டில்லியில் கடந்த 50 வருஷ காலமாக வாழ்ந்து மத்திய ஸர்காரில் உப காரியதரிசியாக (Under Secretary) பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். சமூக ஸேவையில் அமோக ஈடுபாடு உண்டு. இவர் வாழ்ந்து வந்த மோதி பாக்கில் டில்லி தமிழ் கல்விச்சங்க (DTEA) ஆதரவின் கீழ் ஒரு ஆரம்ப பள்ளியை துவக்கி வைத்தார். அது இப்பொழுது Senior Secondary School ஆக விளங்கி வருகிறது. மோதி பாக், மந்திர் மார்க் பள்ளிகளுக்கு வருஷாந்திரமாக Best Student மெடல்கள் கொடுப்பதற்குண்டான Endowment கொடுத்து இருக்கிறார். ஏழு ஸீனியர் ஸெகண்டரி ஸ்கூல்களை நடத்தி வரும் DTEA நிர்வாக குழுவில் பல வருஷங்களாக பொக்கிஷதாரராகவும் உப காரியதரிசியாகவும் இருந்து வந்திருக்கிறார். 1961 ல் ஒரு தென் இந்திய கலாசார சங்கம் ஆரம்பித்து, அதில் முதல் காரியதரிசியாகவும் பின்னால் தலைவராகவும் பணி புரிந்திருக்கிறார். நாஸிக் Security Press ல் மேனேஜராக இருந்த போது அங்கேயும் ஒரு கலாசார சங்கம் ஆரம்பித்து வைத்துள்ளார். இத்தம்பதியர் தற்பொழுது அமெரிக்காவில் வாழ்ந்து வந்தாலும் இவர்களுக்கு இந்திய மண் வாசனை அகலவில்லை. அகலவும் செய்யாது. இத்தம்பதியரின் பெண் வழி பேரன் (ஸுஜாதா மஹாலிங்கம் அவர்களின் கனிஷ்ட குமாரன்), சிரஞ்சீவி ஆனந்த் ஷங்கரின் உபநயனமும் அதே ஸ்ரீ ஹாலில் 6.6.2004 அன்று வேத விதிப்படி சிறப்பாக நடை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

வாழ்க ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி-ஸ்ரீமதி அலமேலு





இயற்கை அன்னையிடம் இரக்கம் காட்டுங்கள்!

கோடை விடுமுறைக்கு குடும்பத்துடன் கேரளாவில் உள்ள மூணாறுக்குச் சென்றிருந்தோம். சேதுபார்வதி ஏரி என்ற பெரிய ஏரியைக் காணச் சென்றோம். ஏரியைச் சுற்றிப் பார்க்கப் படகுகள் உள்ளன. எங்கள் படகைச் செலுத்திய இளைஞன், "பக்கத்திலுள்ள மலைகளிலிருந்து யானைகள் அங்கு நீரருந்த வருவதுண்டு" என்றான்.

ஆனால் டூரிஸ்டுகளின் அலட்சியப் போக்கு யானைகளுக்கு ஆபத்தாக முடிகிறது! பிஸ்கெட், சிப்ஸ் இவற்றைச் சாப்பிட்டுவிட்டு, தரையில் பிளாஸ்டிக் பைகளை வீசிவிட்டுச் செல்கிறார்கள். சென்ற மாதம் ஒரு யானைக்குட்டி சில பிளாஸ்டிக் உறைகளைத் தின்றுவிட்டு, வயிற்று வலியால் கஷ்டப்பட்டது. அதைக் காப்பாற்ற முடியவில்லை."

கேட்க மனம் பதைபதைத்தது. தாய் யானையின் பரிதாப நிலைக்கு யார் அழப் போகிறார்கள்? இயற்கை அன்னையைத் தவிர?

- கிருஷ்ணவேணி ரங்கநாதன், சென்னை - 41.

சருமத்துக்கு ஒரு நல்ல சோப்!


சின்னக் குழந்தைகளுக்கு மட்டுமன்றி, மென்மையான சருமம் உள்ளவர்களும் (soft skin) சோப் அலர்ஜி உள்ளவர்களும், சரும நோய் உள்ளவர்களும், பச்சைப் பயறு மாவும், கஸ்தூரி மஞ்சள் பொடியும் தேய்த்து, குளித்தல் சருமத்திற்கு மிகவும் நல்லது. ஆனால் பச்சைப் பயறை, அரவை மிஷினில் எவ்வளவு 'நைஸ்' - ஆக அரைத்தாலும், அரை படாமல் அதன் தோல் சற்று கரகரப்பாகவே இருக்கும். இதனைத் தடுக்க எளிய முறையில் வீட்டிலேயே சுத்தமான பயத்த மாவு தயாரிக்கலாம்.

பச்சைப் பயறை (பாசிப் பயறு) முதல் நாள் இரவே நீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் பயறை மிக்ஸியில் நன்றாக அரைத்து வடிகட்டி (தண்ணீர் சேர்த்து), மீண்டும், மீண்டும் அரைத்து வடிகட்டி, பிறகு நன்றாகத் தெளிய வைத்து நீரைப் பிரித்து விட்டு,

குருத. குருத. வண்டி!

விடுமுறை முடிந்து ஊர் திரும்பிய மனைவியையும் மகனையும் வீட்டுக்கு அழைத்துச் செல்ல பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தேன். வந்தார்கள். நடந்து செல்லும் தூரம்தான் என்றாலும் லக்கேஜ் மிகவும் கனமாக இருந்ததால் ஆட்டோவில் போகலாம் என்று கூப்பிட்டேன். முப்பது ரூபாய் கேட்டார். இருபது ரூபாய் தருவதாகச் சொல்லியும் ஒப்புக் கொள்ளவில்லை. 'குறைந்த பட்சக் கட்டணமே இருபத்தைந்து ரூபாய்' என்றார். 'பிறகு எதற்கு முப்பது ரூபாய் கேட்டீர்கள்?' என்றதற்கு மழுப்பினார்.

என் மனைவியோ "ஆட்டோ வேண்டாம். ஏதாவது ஒரு குதிரை வண்டியிலோ அல்லது மாட்டு வண்டியிலோ போகலாம்" என்றாள். சரியென்று வண்டிக்காரரிடம் பேசினேன். இருபது ரூபாய்



கேட்டார். பதினைந்து ரூபாய் தருவதாகச்

இரண்டு மனது விஷயம்!



விழுதை ஒரு மெல்லிய துணியில் மூட்டையாகக் கட்டித் தொங்க விட வேண்டும். தண்ணீர் வடிந்த பிறகு விழுதை ஒரு தட்டில் பரப்பி, காய வைத்து பொடித்து வைத்துக் கொண்டால் 'நைஸ்' ஆக இருப்பதுடன், சருமத்திற்கு மிக மிக நல்லது.


இம்காப்ஸ் டாக்டர். சேஷாத்ரி சொன்னது.

- சங்கரி வெங்கட்,
சென்னை - 63

கோணிப்பையில் குப்பை!

இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் குடும்பத்துடன் சிம்லா, குளு, மணாலி ஆகிய இடங்களுக்குச் சென்றேன். அப்பொழுது குளுவில் பத்து ரூபாய் பெற்றுக் கொண்டு ஒரு கோணிப் பை கொடுத்தார்கள். பனிச் சறுக்கு இடங்களுக்கோ, அங்கே அருகில் உள்ள பூங்காக்களுக்கோ செல்லும் போது, குப்பைகளை இக்கோணிப்பையில் போட்டுக் கொள்ள வேண்டும். எல்லா இடங்களும் பார்த்து விட்டுத் திரும்பும்போது, குளுவில் அப்பையைக் கொடுத்துவிட்டு, கொடுத்த பத்து ரூபாயைத் திரும்பப் பெறலாம். இதுபோல ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம், ஏற்காடு ஆகிய இடங்களிலும் செய்யலாமே!

- எஸ்.வி.ராஜசேகர்,
சென்னை - 116



சொன்னதும் 'வாங்க' என்றார். ஆட்டோவிற்கு நான் தர ஒப்புக் கொண்டதும் இருபது ரூபாய் அல்லவா... எனக்கு மனம் கேட்கவில்லை. வீடு போய்ச் சேர்ந்ததும் அவர் கேட்ட இருபது ரூபாய் கட்டணத்தையே கொடுத்து அனுப்பினேன். வழக்கமாக ஆட்டோக்களில் மட்டுமே பயணிக்கும் என் மகனுக்கும் குதிரை வண்டியில் போனது மிகவும் சந்தோஷம். 'குருத, குருத' என்று மகிழ்ச்சியில் துள்ளினான். இனி குறுகிய தூரங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தால் வறட்டு கௌரவம் பாராமல் ஆட்டோவைத் தவிர்த்து விட்டு இது போன்ற வண்டிகளையே நாட வேண்டும் என்ற உறுதியினை ஏற்படுத்திக் கொண்டேன்.

- சு. மோகன், சிதம்பரம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு


லைலாவின்

மஜ்னு!

குழந்தைத்தனம், குமரித்தனம் இரண்டின் கச்சிதமான கலவையாக 'பிதாமகன்' படத்து 'மஞ்சு' பாத்திரத்தில் அசத்திய லைலாவுக்கு, அதற்கான ஃபிலிம்ஃபேர் பலன் கிடைத்திருக்கிறது. அதாவது சிறந்த நடிகைக்கான விருதை அள்ளியிருக்கிறார். அர்ஜுனுடன் 'ஜெய்சூர்யா' படத்தில் நடித்துக் கொண்டிருந்த லைலாவை சென்னையில் பிடித்து, விருது கிடைத்த சந்தோஷம் பற்றி வினவினோம். "எனக்குள்ளிருந்து நடிப்பாற்றலை முழுமையாக வெளிக் கொண்டு வந்த இயக்குனர் பாலாவுக்கு இந்த விருதை சமர்ப்பிக்கிறேன்" என்று நெகிழ்ந்தார். "பிதாமகனுக்கு முன்பு அரை டஜன் படங்களில் நடித்திருக்கிறீர்கள். ஆனால் அவற்றிலெல்லாம், மனநிலை குன்றிய சிறுமியைப் போல சதா சிரித்துக் கொண்டே இருப்பது, டூயட் பாடல்களில் பாலே அசைவுகளை வைக்க அடம் பிடிப்பது என்று ஒபி அடித்து விட்டீர்களே" என்றதும் கோபப்படுவதற்குப் பதிலாகக் கன்னக் குழி விழ சிரித்தார்!

"'தினா', 'அள்ளித் தந்த வானம்' படங்களில் எல்லாம் எனது பாத்திரம் என்னவோ நன்றாகத்தான் இருந்தது. ஆனால் இயக்குனர் அல்லவா எனது நடிப்புத் திறமையை வெளிக் கொண்டு வர வேண்டும்?" என்று பெரிய போடாகப் போட்டார். "பாலா நீங்கலாக, இதைப் படிக்கிற மற்ற இயக்குனர்கள் வருத்தப்பட மாட்டார்களா?" என்றால், "அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஒரு பொம்மையைக் கூட திறமையான இயக்குனரால் நடிக்க வைக்க முடியும்" என்று லைலா பின் வாங்க மறுத்தார்.

"தமிழில் கைவசம் ஒரே ஒரு படம். டீ.வி சீரியலில் நடிக்க சம்மதமா? என்று கேட்ட பிரபல நிறுவனத்தின் பொதுமேலாளரை ஒரு பிடி பிடித்தீர்களாமே நிஜமா?" என்றால், இந்த முறை கன்னம் புடைக்கக் கோபப்பட்டார். "சீரியல் நடிக்கிறதுக்கு, கீழே போறோம்ன்னு அர்த்தமில்லை. பாலிவுட்டில் இன்றைக்குக் கொடிகட்டிப் பறக்கிற பல பேர், டீ.வி வழியாக வந்தவங்கதான். நீங்க என்ன கரண்ட் அஃபையர்ஸ்லே வீக்கா?" என்று சமாளித்தார்.



"சரி போகட்டும்! இயக்குனர் பாலாவுக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது! அவரது திருமணத்திற்குச் செல்கிறீர்கள்தானே?" என்றதும் "நிச்சயமாக!" என்று சந்தோஷப்பட்டார். "சரி, உங்களுக்கு எப்போது திருமணம்? இந்த லைலாவின் மஜ்னு எங்கே, மும்பையில்தானே?" என்றதும், குங்குமச்சிவப்பாக லைலாவின் முகம் நிறம் மாறியது.

"லைலா - மஜ்னு காதல் தோல்வியிலே முடிஞ்சது! காதல் தோல்வியிலே முடியுறது எனக்குப் பிடிக்காது. இப்போதைக்குக் காதலிக்க நேரமில்லை" என்று பிடி கொடுக்காமல் நழுவி 'ஷாட்டு'க்கு ஓடினார்!

- ஸ்ரீ

அட்டை, படங்கள்: சங்கர் சத்தியமூர்த்தி

ரேகனுக்கு வந்த நோய்!



* முத்துச்செல்லக்குமார்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்டு ரேகன், அல்ஷைமர் என்ற நோயால் இறந்திருக்கிறார், சமீபத்தில். அதென்ன அல்ஷைமர்? ருக்மணி மருத்துவ தகவல் மைய மருத்துவர், முத்துச் செல்லக்குமாரிடம் கேட்டோம்.

‘அல்ஷைமர்’ நோய் என்பது மூளையிலுள்ள நரம்பு செல்களைப் பாதிக்கக் கூடிய நோய். இந்த நரம்பு செல்களில், ‘அமைய் லாய்ட்’ எனப்படும் பொருள் படிய ஆரம்பிக்கும். பிறகு நரம்பு செல்களில் நாரிழை போன்ற அமைப்புகளும் உருவாகும். இவை இரண்டுமே புரதப் பொருள்கள்தான். இந்த இரண்டின் செயல்பாட்டினால், நரம்பு செல்கள் பாதிப்படைந்து சிதைந்து விடும். இதன் காரணமாக நரம்பு இழைகளில் மின்கடத்தியாகச் செல்லும், பல்வேறு இரசாயனப் பொருள்களின் உற்பத்தியும், செயல்பாடும் குறைந்து மூளை பாதிக்கப் படுகிறது. பல்வேறு காரணங்களினால் இந்த நோய் ஏற்படவும், அதிகரிக்கவும் வாய்ப்புகள் உண்டு. வயதானவர்களுக்கே இந்த நோய் அதிகமாக ஏற்படுகிறது.

உணவு மற்றும் பல்வேறு காரணங்களினால் இரத்தத்தில் உலோகப் பொருள் மிகுந்து மூளையில் படிவதாலும் இந்த நோய் ஏற்படும்.

இந்த நரம்பியல் நோய் நீரிழிவு நோய் உள்ளவர்களையே பெருமளவு பாதிக்கிறது.


இந்த நோய் உள்ளவர்களுக்கு இரண்டு முக்கிய அறிகுறிகள் தோன்றும். 1. அறிவு தொடர்பானது 2. நடத்தை தொடர்பானது

அறிவு தொடர்பானது: இந்த நோயின் முக்கிய முதன்மையான அறிகுறி மறதி தான். ‘ஆட்டோகிராஃப்’ சேரன் போல, ‘ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே’ என்று இவர்கள் அசைபோட முடியாது. நிகழ்காலத்தில் அன்றாடம் பழகும் நபரையே கூட மறந்து விடுவார்கள். இதேபோல பழகிய வீடு, தோட்டம், சுற்றுப் புறத்தையும் கூட மறந்துவிடுவார்கள்.


நடத்தைத் தொடர்பான தொந்தரவுகள்: கூச்சல் போடுவார்கள். தேவையற்றதற்குக் கோபப்படுவார்கள். எப்போதும் எதையோ சிந்திப்பது போல தங்களுக்குத் தாங்களே பகற்கனவு கண்டு கொண்டிருப்பார்கள். மனச் சோர்வு மிகுந்திருக்கும். உறக்கமின்மையால் அவதிப்படுவார்கள். எந்தவித நோக்கமும் இல்லாமல், பல இடங்களுக்கும் அலைந்து கொண்டிருப்பார்கள்.

இந்த நோயை முற்றிலும் குணமாக்க தற்சமயம் மருந்துகள் இல்லை. ஆனால், சில மருந்துகள் இந்த நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தும். மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட ரேகன், உயிர் பிரிவதற்கு முன் ஒரு சில கணங்கள் கண் விழித்து, மனைவியை அடையாளம் தெரிந்து கொண்டது அதியம்தான்.

- ஜெய்



* ரேகன்



கம்யூனிஸ்ட்



''அரசை மிரட்ட உங்களுக்கு நல்ல வாய்ப்பு தானே?'' இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜாவிடம் கேட்டோம்:

"பொறுப்பில்லாமல் (அரசில் பங்கு பெறாமல்) அதிகாரத்தை அனுபவிக்கிறார்கள் கம்யூனிஸ்ட்டுகள்" என்கிறார்கள். இந்தப் பார்வை தவறு. அதிகாரம் இல்லாமல் பொறுப்புகளை எடுத்துக் கொண்டிருக்கிறது இடது சாரி அமைப்புகள் என்பதே உண்மை!

அரசின் மோசமான செயல்பாடுகள் நாளை விமர்சிக்கப்படுமானால், இடது சாரிகளின் நற்பெயரும் பாதிக்கப்படும். எனவே நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கட்டாயம். அதன் காரணமாகவே குறைந்தபட்ச பொதுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. முன்பிருந்ததைவிட காங்கிரஸின் நிலை கொஞ்சம் மாறியிருக்கிறது. "பொருளாதார சீர்திருத்தத்துக்கு மனித முகம் கொடுக்கப்படும்" என்று சொல்லுகிறது காங்கிரஸ். எங்களுக்கும் காங்கிரஸுக்கும் இன்னமும் சில பிரச்னைகளில் கருத்து ஒற்றுமை இல்லை. குறிப்பாக விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியவை தனியார் மயமாவதை எதிர்க்கிறோம்.

அரசின் செயல்பாடுகள் ஏழை, நடுத்தர மக்களுக்கு எதிரானதாக இருந்தால் பாராளுமன்றத்துக்குள்ளேயும், வெளியேயும் விமர்சிப்போம். பட்ஜெட் வர இருக்கிறது. அரசின் எண்ண ஓட்டம் அதில் தெரியும். எங்களுக்குச் சுயநலமோ, சொத்து சேர்க்கும் ஆசையோ கிடையாது. எங்களின் செயல்கள் வெளிப்படையாகவே இருக்கும். எனவே அரசை மிரட்டுவதற்கோ, ரிமோட் கண்ட்ரோலாக செயல்படுவதற்கோ, எந்த முகாந்திரமும் இல்லை, அது போன்ற குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை."

"ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் துவக்கம் எப்படியிருக்கிறது?"

அ.தி.மு.க. முன்னாள் எம்.பி கே.மலைச்சாமியிடம் கேட்டோம்.

"முரண்பட்ட, கொள்கைகள் கொண்ட கட்சிகள் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்திருக்கின்றன. அவசரத்தில் அள்ளித் தெறித்த கோலம் இது. அழியாத கோலமாக இருக்க வாய்ப்பே இல்லை. **இந்தக் கட்சிகளின் தேன் நிலவு, வீண் நிலவாக முடியும். இந்தக் கூட்டணியின் முக்கிய பலமாக இருக்கும் தி.மு.கவுக்கும், காங்கிரஸுக்கும் அடிப்படை வேறுபாடு இருக்கிறது.** காங்கிரஸ் மக்கள் ஆதரவை (mass based) நம்பி இருக்கும் கட்சி. ஆனால் தி.மு.க. தொண்டர் பலத்தை முதுகெலும்பாகக் கொண்ட கட்சி. இவை இரண்டும் நீண்ட காலம் ஒத்துப் போக வாய்ப்பில்லை. கம்யூனிஸ்டுகள் கேரளாவிலும், வங்கத்திலும், திரிபுராவிலும் காங்கிரஸைக் கடுமையாக எதிர்த்து, தேர்தலில் போட்டியிட்டு வென்றிருக்கிறார்கள். மாநிலத்தில் விரோதி, மத்தியில் நண்பனா? இது கள்ள உறவாகத்தான் இருக்கக் கூடும்.


தமிழகக் கட்சிகளான தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவை நேரு குடும்பத்தை எதிர்த்தே அரசியல் செய்பவை. ராஜீவைக் கொன்ற விடுதலைப் புலிகளுக்கு மிக நெருக்கமானவை. இந்தக் கட்சிகளோடு காங்கிரஸ் கொண்டிருக்கும் கூட்டணி, நிலைத்து நீடிக்கவே முடியாது. அடுத்ததாக, கொலை, கொள்ளை போன்ற குற்றங்களில் தொடர்புடையவர்களை அமைச்சர்களாக நியமித்திருப்பது, நாட்டுக்கே அவமானம். கூட்டணிக் குழப்பங்களை விட்டுத் தள்ளுங்கள். காங்கிரஸுக்குள் எத்தனை கோஷ்டிகள்! ஒருவர் காலை ஒருவர் வாரும் தந்திரங்கள், அவர்களுக்குள் முதுகில் குத்துதல், பதவிச் சண்டை.

குறைந்தபட்ச செயல் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் அறிக்கையைத் தொகுத்தது போலிருக்கிறது. இதில் சொல்லியுள்ளவற்றை அமல்படுத்தும் அளவுக்கு அரசியல் பலமோ, நிதி வசதியோ இந்த அரசுக்குக் கிடையாது.

படம்: ராஜன்



அ.தி.மு.க.



• வேல்முருகன்



பா.ம.க.

"சினிமாவை எதிர்த்து தொண்டர் படை அமைச்சிருக்கீங்களே; 'ஜக்குபாயை' எதிர்பார்த்துதானே?"

பா.ம.க. துணைச் செயலாளர் வேல்முருகனுக்குக் கோபம் வராத குறை.

"நமது தமிழ் மொழி, பண்பாடு, கலாசாரம், நாகரிகம் ஆகியவற்றைச் சிதைக்கும் வண்ணம் வெளி வரும் திரைப்படங்களைத் தடுத்து நிறுத்தத்தான் இந்தப் படை. இதற்குப் பெயர் பாட்டாளி இளைஞர் படை. இப்போது வரும் பல படங்கள், ஆபாசக் குப்பையாக இருக்கின்றன. இதனால் நமது இளைஞர்கள் சீரழிகிறார்கள். இந்தப் படையின் மிக முக்கியமான நோக்கம், திரை நட்சத்திரங்களுக்கு ரசிகர் மன்றங்கள் அமைக்கக் கூடாது என்று பிரசாரம் செய்வதுதான்.

நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட பல தலைவர்களை, இளைஞர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் சமூகத்திற்கு எந்த விதத்திலும் பயன்படாத நட்சத்திரங்களுக்கு, உயிரைக் கொடுக்கிறார்கள். **ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து சமுதாயத்திற்குப் பாடுபடுவது என்பது வேறு; ரசிகர் மன்றம் அமைத்து, வெட்டியாக நேரத்தைச் செலவழிப்பது என்பது வேறு.** புதுப்படம் ரிலீஸாகும்போது, தோரணம் கட்டுவதும், பாலாபிஷேகம் செய்வதும் நேரத்தை வீணாக்கும் செயலே. இதனால் அந்த ரசிகரின் பணம் செலவாகிறதே தவிர, வேறு எந்தப் பயனும் கிடையாது. சினிமா என்பது மாயை. நல்ல படங்களை ரசித்துப் பாருங்கள். அதற்கு மேல் ஒருவர் திரைப்படங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

சமுதாய முன்னேற்றம், சமுதாயப் பிரச்னைகள் ஆகியவற்றை கையிலெடுத்துப் போராடுவது அரசியல் கட்சிகள்தான்; நட்சத்திரங்கள் அல்ல. எனது பண்ருட்டி தொகுதியில், இளைஞர்கள் மத்தியில் இது போன்ற கருத்துக்களை எடுத்து வைத்ததில், தொண்ணூற்றி ஐந்து சதம், ரசிகர் மன்றங்கள் கலைக்கப்பட்டு விட்டன. இனி மாவட்டம், மாநிலம் என்று எங்கள் பணி தொடரும்."



முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்
அவர்களின் 60ஆவது திருநட்சத்திரத்தை
முன்னிட்டு வெளிவரும் புதிய நூல்கள்

குறையொன்றுமில்லை

(ஆறாம் பாகம்) விலை: ரூ. 60.00

வேதராமன்

ஆரண்ய காண்டத்தில் அர்த்த விசேஷங்கள். விலை: ரூ. 50.00

முக்கூர் ஸ்வாமிகளின் ஆங்கில நூல் ***Kō Dātā***

Who is the giver?

Translated from Tamil Mattapalliyil Malarnda Maraiporul. **Rs.120.00**

புத்தக விலையுடன் பதிவு தபால் செலவுக்கு ரூ. 20/- சேர்த்து **M.O. or D.D.** அனுப்பவும். வி.பி.பியிலும் பெறலாம். தபால் செலவு தனி.

வானதி பதிப்பகம்

23, (ப. எண்:13), தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி எண்: 24 342 810, 24 310 769

உ



SRI PERUNDEVI THAYAR SENIOR CITIZENS HOME

One who wants orthodox Brahmins Senior Citizen Home please contact us.

We give three times meals, two times coffee, seperate room, cot, light, fan, 24 hours hot and cold water, western type toilets, free medical consultation, T.V., news paper, doctor, attender Facilities Available.

Disabled Allowed.

SPECIAL TREATMENT FOR PATIENTS

SRI PERUNDEVI THAYAR SENIOR CITIZENS HOME
No. 1/36, Kuppam Road, Kottivakkam, Chennai - 600 041.
SRI AHOBILAM SENIOR CITIZENS HOME
No.5, 25th Cross Street, Thillai Ganga Nagar, Nanganallur, Chennai - 61
Phone: 24511023, 22324276. Cell: 9884256232



ம.தி.மு.க.

"ஈழத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசோட அணுகுமுறை எப்படியிருக்கணும்னு நினைக்கிறீங்க?"

ம.தி.மு.க. அவைத் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எல்.கணேசனிடம் கேட்டோம்.

"பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையிலிருந்து ஒரு கருத்தைச் சொல்கிறேன். அதுதான் அரசின் கருத்து. "பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் நட்புறவுடன் இருப்போம். பிரச்னைகள் எதுவானாலும் பேச்சுவார்த்தை மூலமும், பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல் மூலமும் தீர்வு காண்போம். குறிப்பாக இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அமைதிப் பேச்சு வார்த்தையில், மிக ஆக்க பூர்வமாகவும் கூடுதல் பலமாகவும் செயல்படுவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் சுயகௌரவத்துடனும் தன்மானத்துடனும் வாழ வகை செய்வதற்கு இந்தியா தனது பங்களிப்பை நல்கும்."

ஜனாதிபதி வெளியிட்ட இந்தக் கருத்து, ஈழத்தமிழர்களுக்கு மன நிம்மதி அளிக்கும் கருத்துதானே!

ஜே.என். தீக்ஷித், நாராயணன் போன்ற ஓய்வு பெற்ற அதிகாரிகள் தில்லியில் முக்கியமான இடங்களில் அமர்ந்திருப்பதால், ஈழம் விவகாரத்தில் அரசின் பார்வை மாறுபடுமா என்று ஒரு சந்தேகம் பொதுவாக இருக்கிறது. 'இடையறாத மாற்றம்தான், மாறாத இயற்கை நியதி' என்று சொல்வார்கள்.

ஈழத்தமிழர்களுக்கு இந்திராகாந்தி உதவியது போல் யாராலும் உதவியிருக்க முடியாது. ஆனால் ராஜீவின் பார்வை கொஞ்சம் மாறுபட்டிருந்தது. அதனால் தற்போது சோனியா ஈழப் பிரச்னையை அணுகும் முறையிலும், கடந்த காலத்தைவிட வேறுபாடு இருக்க முடியுமே! காலம் சிலரது நோக்கையும் போக்கையும் மாற்றி விடுகிறது. **எப்போதோ இந்த அதிகாரிகள் செயல்பட்ட விதத்தை எண்ணிக் கொண்டு, அவர்கள் ஈழத்தமிழர்கள் நலனுக்கு எதிராகச் செயல்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு தேவையில்லை. அவசியமும் இல்லை.** நாளை என்பதே நம்பிக்கையின் ஒளிதான்! இது தவிர, அதிகாரிகள் என்பவர்கள் ஆலோசகர்கள்தானே தவிர, முடிவெடுப்பவர்கள் அல்ல!

ஈழம் விவகாரத்தைப் பொறுத்த மட்டில் உறுதியான கூட்டணிக் கட்சிகளான தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவற்றின் நிலைப்பாடுகளை நிச்சயமாக மத்திய அரசு புறக்கணிக்காது; நிராகரிக்காது."

சந்திப்பு : ப்ரியன்



கட்சியையும் ஆட்சியையும் குழப்பாதீர்கள்!

புதிய அரசு அமைக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு அதனைக் கடுமையாக விமர்சனம் செய்யக்கூடாது என்பது மரபு. ஆனால், எடுத்த எடுப்பிலேயே அவ்வரசு பெரிய தவறுகளைச் செய்தால் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மிகப் பெரிய குழப்பம், சோனியா காந்தியினுடைய அதிகார எல்லைகளைக் குறித்தது. கட்சித் தலைமை, ஆட்சித் தலைமையாக முடியாது; ஆகக் கூடாது என்பதுதான் ஜனநாயகத்தின் உள்ளீடாக விளங்கும் பாதுகாப்பு அம்சம். நிர்வாகத்திலிருந்து கட்சி அரசியலை ஒதுக்கி வைக்க இந்தப் பாதுகாப்பே உதவும். கூட்டணியின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை உருவாக்குவதிலும், அதனை நிறைவேற்ற வற்புறுத்துவதிலும் மட்டுமே சோனியா கவனம் செலுத்த வேண்டும். அதற்கு மேல் அதனை நடைமுறைப்படுத்துவதில் அவர் நேரடியாக ஈடுபடக் கூடாது. அரசு நிர்வாகத்தில் தலையிடக் கூடாது. மன்மோகன் சிங்கைப் பிரதமராக்கிவிட்டுத் தாம் விலகிக் கொண்டபோது, சோனியா இதனை முழுவதும் உணர்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பலர், தலைவியை மகிழ்விப்பதாகக் கருதி, அவருக்கு ஓர் அமைச்சருக்கு நிகரான அதிகாரமும் உள்ளதாகச் சித்திரித்து வருகிறார்கள். இதனைக் கட்சித் தொண்டர்கள் செய்தால், நாம் பெரிதாகப் பொருட்படுத்த




கல்கி



2004 ஜூன் 20
தாரண ஆனி 6
மலர் : 62
இதழ் : 47

ழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வேண்டிய அவசியம் இராது. ஆனால், சட்ட அமைச்சரே இவ்வாறு கூறுகிறபோது ஏகப்பட்ட சிக்கல் உண்டாகிறது!

சட்ட அமைச்சருக்குச் சில அதிகாரங்கள் உண்டு; மறுப்பதற்கில்லை, ஆனால், காங்கிரஸ் தலைவிக்கு காபினெட் அமைச்சருக்குரிய அதிகாரம் வழங்கும் உரிமை, சர்வ நிச்சயமாக சட்ட அமைச்சருக்கு இல்லை; வேறு யாருக்கும் இல்லை! இவ்வாறிருக்க, பரத்வாஜ் இன்னும் ஒரு படி மேலே போய் "சோனியாவின் காபினெட் அமைச்சர் அந்தஸ்து காரணமாக, அனைத்து அரசாங்கக் கோப்புகளையும் பார்த்து, திருத்தும் உரிமை அவருக்கு உண்டு" என்று சொன்னது, மிதமிஞ்சிய அவசர - அபத்தம்.

அரசாங்கத்தின் கோப்புகளைக் காணும் உரிமை, ரகசிய காப்புப் பிரமாணம் ஏற்காதவர்களுக்குக் கிடையாது என்னும்போது, சோனியா எவ்வாறு விதிவிலக்காக முடியும்!

பரத்வாஜின் அதிரடி அறிக்கையைச் சற்று தண்ணீர் தெளித்து அடக்குவதற்காக, வேறு சில காங்கிரஸ் உறுப்பினர்கள் மாற்று அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். "இல்லையில்லை; பரத்வாஜ் சொன்னதுபோல் இல்லை; சோனியா காந்தி குறைந்தபட்ச பொது செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் குழு உறுப்பினர் - இந்தப் பதவி அவருக்கு காபினெட் அமைச்சருக்குரிய அதிகாரத்தை வழங்காது... பொது செயல் திட்டம் எவ்வளவு தூரம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது பற்றி, அவர் அறிக்கைகள் **(status report)** கேட்டுப் பெறலாமேயொழிய, கோப்புகளையெல்லாம் பார்க்க முடியாது..." என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆனந்த் ஷர்மா நீண்ட விளக்கமளித்துள்ளார்.

இந்த விளக்கத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், "பா.ஜ.க. ஆட்சிக்காலத்தில், ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் எல்லாக் கோப்புகளையும், அரசியல் ஆவணங்களையும் பார்த்தார்கள்; பிரதமரோடு அவற்றைப் பற்றி விவாதித்தார்கள்; பத்திரிகையாளர்களுக்கு அவர்கள் அதிகாரபூர்வமாய் தகவலும் அளித்தார்கள்" என்று பழைய தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் ஆனந்த் ஷர்மா. "இப்போது அந்த மாதிரியெல்லாம் அதிகார



மீறல் நடந்துவிடவில்லையே" என்றும் சமாதானம் சொல்லியிருக்கிறார்.

பழைய தவறுகளைச் சுட்டிக் காட்டி, புதிய தவறுகளை நியாயப்படுத்துவது அபத்தம். மன்மோகன் சிங் வெறும் பொம்மைப் பிரதமர்; சோனியாவிடம்தான் மெய்யான அதிகாரம் உள்ளது என்பதாக ஒரு நிலைமையை உருவாக்குவது அபாயம்.

இந்தக் குழப்பம், கட்சிக்காரர்கள் ஆட்சியில் அடிக்கடி தலையிட இடமளிக்கும்; அரசு இயந்திரத்துக்கு, தங்களை வழி நடத்துவது யார் என்பது குறித்த பலமான சந்தேகத்தை ஏற்படுத்தி, நிர்வாகத்தைச் சீர்குலைக்கும்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கும், எதிரி நாடுகளின் கை ஓங்குவதற்கும் வழி செய்து தரும். கூட்டணி அமைப்பின் இணக்கத்தைச் சோதனைக்கு உட்படுத்தி வலு விழக்கச் செய்யும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் தேர்வு செய்யப்பட்டவர் பிரதமர் மன்மோகன் சிங். சோனியா அவரைப் பிரதமராக முன்னிறுத்தியபோது, இந்தியா பெருமைப்பட்டது; உலகம் வியந்தது. நிர்வாகத் திறனும் பொருளாதார நுட்பமும் வாய்க்கப்பெற்ற ஒரு பிரதமர் பதவியில் இருக்கிறார். அரசியலைப் புகுத்தி அவரது பலத்தைக் குறைக்காமல், கவனமாக ஒத்துழைப்பு நல்கி, அவர் கரத்தைப் பலப்படுத்த வேண்டியது அமைச்சரவையின் பொறுப்பு. காங்கிரஸ் தலைமையும் இதனைத் தெளிவாக்கி, கட்சியினரிடம் அழுத்தமாகச் சொல்லிவிட வேண்டும். 'கட்சியையும் ஆட்சியையும் போட்டுக் குழப்புவதை நிறுத்துங்கள்!' என்று சோனியாவே கேட்டுக் கொள்வது நல்லது. அவர் கவனமெல்லாம் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்துவதிலும், உட்கட்சி ஜனநாயகத்தை வளர்ப்பதிலும் இருக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்குத் தரப்பட்ட வாய்ப்பு, நாட்டின் முன்னேற்றத்துக்கான வாய்ப்பாக உருமாற்றப்படவேண்டும். கட்சி எல்லைகளைக் கடந்து, நாட்டு நலன் என்ற நோக்கில் சிந்தித்து, அமைச்சர்கள் பேசவும் செயல்படவும் வேண்டும். ○

''ஜெ.வைப் பழி வாங்கப் போறதா சொல்றாங்களே?'' என்றதும் கொதித்துப் போனார் தி.மு.க அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன்:

''ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் மூன்றாவது பெரிய கட்சி தி.மு.க. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சாலைப் போக்குவரத்து, தகவல் தொழில் நுட்பம், தொலைத் தொடர்பு போன்ற துறைகள், அடிப்படைக் கட்டுமானத்தை விஸ்தரிக்கப் பாடுபடும் துறைகள். இப்படிப்பட்ட துறைகளைப் பெற்றிருப்பதன் நோக்கம், தமிழகத்துக்கு இன்னமும் நிறைய நன்மைகள் செய்ய வேண்டுமென்ற நோக்கம்தானே தவிர, தனிப்பட்ட நபர்களைப் பழி வாங்குவதல்ல.

1996ல் தமிழகத்தில் நாங்கள் பொறுப்புக்கு வந்தபோது, சமத்துவபுரம், கூட்டுக் குடிநீர்த்திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கான்க்ரீட் சாலைகள் என்று பல்வேறு நலப்பணிகளைச் செய்து முடித்தோம். அப்போதுகூட ஜெயலலிதாவின் மீது இருந்த ஊழல் குற்றச்சாட்டுக்களைத் தோண்டக் காரணம், 'மக்களிடம் வோட்டுக் கேட்கும்போது 'ஜெ.வின் ஊழல்களை விசாரிப்போம்' என்று சொல்லி வாக்குக் கேட்டதுதான். அந்த அடிப்படையில் மட்டுமே ஜெ.வின் மீது ஊழல் வழக்குகள் போடப்பட்டன. இதில் ஒரு வழக்கில் ஜெ.வினுடைய மனசாட்சியைத் தட்டிக் கேட்டது உச்ச நீதிமன்றம். **ஜெயலலிதாவை நாங்கள் பழி வாங்க வேண்டிய அவசியமே இல்லை. மக்களை அவர் தண்டித்த போது, மக்களே அவரைப் பழி வாங்கி விட்டார்கள்.** வரும் சட்டமன்றத் தேர்தலில், இனி எதிர்காலத்தில் அ.இ.அ. தி.மு.க என்ற கட்சியே இல்லாமல் ஒழித்துக் கட்டப் போகிறார்கள் மக்கள்.

தமிழகத்திற்கு முன்னேற்றத்தைக் கொடுக்கக் கூடிய பல நல்ல திட்டங்களைக் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். தமிழ் செம்மொழியாகிறது. தி.மு.க.வின் இத்தனை ஆண்டுக் கால வரலாற்றில், தனி ஒரு நபரைப் பழி வாங்கும் எந்தக் காரியத்தையும் செயல்திட்டமாக வைத்துக் கொண்டது கிடையாது. ஆனால் ஏற்கெனவே நிலுவையில் உள்ள வழக்குகளில் சட்டம் தனது கடமையைச் செய்யும் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''



தி.மு.க.

சந்தா கட்டுங்க; சந்தோஷம் அள்ளுங்க!



படம்: ஸ்ரீஹரி

கல்கி

வழங்கும்

வாழ்க வளமுடன்

உங்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட ஒரு

லைஃப் ஸ்டைல் மலர்

- 'கல்கி' பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா ரூ.330/- மட்டும் செலுத்துங்கள், ரூ.40/- பெறுமானமுள்ள 'வாழ்க வளமுடன்' லைஃப் ஸ்டைல் மலர் **இலவசமாக** அனுப்பி வைக்கப்படும்.
- ஏற்கெனவே சந்தாதாரராக இருப்போரும் ரூ.330/- செலுத்தி தங்கள் சந்தாவை நீடித்துக் கொண்டு, 'வாழ்க வளமுடன்' சிறப்பு மலரை **இலவசமாகப்** பெறலாம்.
- முந்துங்கள்! இந்த அறிவிப்புக்குப் பிறகு வரும் முதல் 500 சந்தாதாரர்களுக்கு மட்டுமே இச்சலுகை!
- **சந்தாதாரர்களுக்கான கடைசி தேதி: 10.07.2004**


உங்கள் முழு விலாசத்தைத் தெளிவாக எழுதி, தொகையை DD / MO / காசோலை மூலம் 'KALKI' என்ற பெயருக்கு அனுப்பவும். வெளியூர் காசோலைகளுக்கு ரூ.30/- சேர்த்து அனுப்பவும்.

கல்கி லைஃப் ஸ்டைல் மலர் தனிப்பிரதியாகவும் கிடைக்கும்.
விலை ரூ. 40. கூரியரில் பெற ரூ. 60 அனுப்புங்கள்.

முகவரி:

சர்குலேஷன் மானேஜர், கல்கி காரியாலயம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097







சதாம், இதுக்கும் மேலே!

ஈராக் சிறைக் கைதிகளை, அமெரிக்க ராணுவம் சித்ரவதை செய்த புகைப்படங்கள் புயலைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

கைதிகளை நிர்வாணப்படுத்தி, வேட்டை நாய்களை நெருங்கவிட்டு கிலிப் படுத்துவதிலிருந்து, தங்கள் மதத்தையே அவர்கள் பழித்துப் பேச வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதுவரை, பல கொடுமைகள் அரங்கேறியுள்ளன.

'நினைத்தாலே உறைய வைக்கிறது' என்பது போன்ற விமர்சனங்களை உலகெங்கும் இந்தச் செயல்கள் எழுப்ப, ஈராக் நாட்டு மக்கள் இதுபோன்ற கொடுமைகள் குறித்து என்ன நினைக்கிறார்கள்?

வியப்பான பதில் காத்திருக்கிறது. ஈராக்கிய மக்கள் இவை குறித்து அப்படியொன்றும் அதிர்ச்சி அடைந்துவிடவில்லையாம். ஈராக் உள்ளூர்ப் பத்திரிகைகளில் தற்போதைய சிறைச்சாலைக் கொடுமைகள், மிகச் சிறிய அளவில்தான் இடம் பெறுகின்றன. சொல்லப் போனால், இந்தச் சித்ரவதைகள் உலகெங்கும் பெரிதாகப் பேசப் படுவதுதான் அவர்களுக்கு வியப்பை அளிக்கிறது.

காரணம் இதுதான். சதாம் உசேன் காலத்தில் கைதிகளுக்கு நடந்த சித்ரவதைகள் இவற்றிற்கு எந்தவிதத்திலும் குறைவானதில்லை. கைதியிடமிருந்து உண்மையை வரவழைக்க, அவர் எதிரிலேயே அவரது மனைவி, மகன் ஆகியோர் கேவலப்படுத்தப் படுவார்கள். பாலியல் சீண்டல்களும், பலாத்காரங்களும்கூட உண்டு.

என்றாலும் ஈராக் மக்கள் வேறொரு விஷயத்துக்காக இப்போது பெரிதும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். "ஆண் சிறைவார்டன்கள், பெண் கைதிகளை உடைகளை நீக்கச் சொல்லி கொடுமைப்படுத்துவதை நாங்கள் அறிந்திருக்கிறோம். அதற்கு நேரெதிராக இப்போது நடப்பது, தாங்க முடியாத வியப்பை அளிப்பதாக இருக்கிறது" என்கிறார்களாம்.

பாக்தாத் நகரில் தற்போதைய கூட்டாட்சி உதவி மையம் ஒன்று உருவாகியிருக்கிறது. ராணுவத்தால் பாதிக்கப்படும் அப்பாவி மக்கள் அங்கே சென்று உரிய நிவாரணம் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் இப்படிப்பட்ட நிவாரணம் பெறுவது, குதிரைக்கொம்பாக இருக்கிறது. காரணம், அப்பாவி மக்கள் சந்திக்கும் பாதிப்புகளை 'இவை கொடுமையானவைதான்' என்று சான்றிதழ் வழங்க அதிகாரிகள் தயாராக இல்லையாம்!

- ஜி.எஸ்.எஸ்.

IIPE LAXMI RAMAN IMPROVEMENT SCHOOL



மீண்டும் சாதனை

மாநில அளவில் 2-ம் இடம்
மாவட்டத்தில் முதல் இடம்

ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் ரேங்குகள்

எண்ணற்ற மாணவர்கள் மருத்துவம்/பொறியியல் கல்லூரிகளில் அனுமதி




D. Hema Malini
State 2nd in Biology Ent. 49.84
Dist. First in Medical Ent. 98.71

M. Sivasankar
District First Engg. Ent. 98.5
District First Maths Ent. 49.80

K. Jerad Livingston
Medical Ent. 97.98
District 2nd Medical Ent.

J. Rose Bell
Medical Ent. 97.98
District 2nd Medical Ent.






இந்த ஆண்டு...

- 97.04 க்கு மேல் — 18 பேர்
- 95.03 க்கு மேல் — 43 பேர்
- 90.24 க்கு மேல் — 112 பேர்

Last Year from Tirunelveli Improvement School *Gems*

69 Medical
36 Anna Univ.
508 Engineering
} **Admissions**



- Best Coaching
- Excellent atmosphere
- Printed study materials
- Enormous Tests
- State rank produced every year
- Best Hostels
- Best Improvement School

1999-ம் ஆண்டு	எஸ். கோமதி - மருத்துவ மாநில முதல் இடம்
2001-ம் ஆண்டு	எம். இசைவாணி - மருத்துவ மாநில 2ம் இடம் எம். கார்த்திக் ரங்கநாத் - பொறியியல் மாநில 2ம் இடம்
2002-ம் ஆண்டு	கே.ஹரிதய பாத்திமா - மருத்துவ மாநில முதல் இடம் எஸ்.ஏ.கண்ணன் - பொறியியல் மாநில 4ம் இடம்
2003-ம் ஆண்டு	எஸ். ஆக்னஸ் சிந்தியா - மருத்துவ மாநில 2ம்இடம்
2004-ம் ஆண்டு	டி. ஹேமமாலினி - மருத்துவ மாநில 2ம்இடம்

ஆண்/பெண் ஹாஸ்டல் வசதி

IIPE TIRUNELVELI

1C, Roche Complex (II Floor), & 42, Trivandrum Road (I Floor),
Near Palai Bus Stand, Tirunelveli-2. ✆: 25 61 171, 25 61 172.

Improvement Admissions started from 20.05.2004

அன்றொருநாள் ஒருபொழுது!
சூரியன் பனிதுடைத்து
ஆகாயத்தில் ஒளிதெளித்த
உச்சிப் பொழுது!

ஈரம்பூத்த இளவேனில்
நந்தவனமாய்
தழையத் தழைய மஞ்சள்பூசி
தட்டுத் தட்டாய் சந்தனம் பூசி
நெளிய நடந்து
உப்பரிகை வந்து உலர்த்தினாள்
பூக்காட்டுப் பெருங்கூந்தல்!

தெருவைப் பார்த்தமைந்த
மச்சு வீட்டு உப்பரிகையில்
அதிகாலை தான்வரைந்த
அழகுகோலம் ரசித்தபடி
மாடிமீது நின்று
மயிற்கோதியால் கூந்தல்
ஒதுக்கினாள்...!

ஒதுக்கிய கூந்தலில்
ஒருகூடை பூவாசமென
உப்பரிகை வந்த காற்று
ஊமைச்செடியிடம் உரைத்துப்
போனது!

அந்நேரம்!
ஆலய வழிபாடு முடித்து
ஆள் அம்பு யானை சேனையுடன்
வீதி வழியாய் பல்லக்கில் போனார்
எட்டையபுர மகாராஜா!

வீதி வழியாக வந்த
அரசாங்க நடைஉடை கண்டு
அப்படியே நின்றாள் சிவகாமி!..

ஆச்சரியத்தில் அந்த
சிப்பி வடிவ சிறுவிழிகள்
சங்களவு அகண்டது!

சிறுவயது முதலே சிவகாமிக்கு



பா.விஜய்

யானை அம்பாரி ஊர்வலம்
ஆனந்தமான காட்சி!

ஊர்வலம் வீதி வழியே
மச்சுவீடு கடந்து போக
அப்போது அடித்த காற்று
சிவகாமி கூந்தல் சீவி
சிக்கெடுத்து சுருட்டி வைத்த
கூந்தல் சுருளைத் தூக்கியடித்தது!

காற்றில் போன முடிச்சுருள்
யானைப் பல்லக்கில் இருந்த
மகாராஜனின் மடியில் விழுந்தது!

ஐம்பது வயது தொட்டு
அரை உடம்பு நரையெய்தி
தொப்பை கொண்ட மகாராஜா
மடியில் விழுந்த முடிச்சுருளை
எடுத்தார்!

அது முடியா? இல்லை
பட்டுநூல் இழையின்
ஒரு பிடியா?

முகர்ந்தார்!
அது கூந்தலா? -
பாரிஜாதத் தோட்டமா?

திரும்பினார்!
திரைச்சீலை வழியே
ஓர் ஆயிரம் வட்ட நிலாவில்
அகழ்ந்தெடுத்த சிலையாய்
வாலிப மொட்டவிழ்ந்த
வசீகரப் பேரலையாய்
உப்பரிகையில் நின்ற சிவகாமியை
உற்று உற்றுப் பார்த்தார் மகாராஜா!

அவரின்
ஆட்டுக்கடா மீசையில்
ஒளிந்திருந்த வெள்ளை முடிகளில்
வேர்வைத்துளி அரும்பியது...

2

சாலமன் என்றொரு
மீன் வகை உண்டு!

கண்ணாடிக் கல்வெட்டுகள் 2



தேவதை கல்லானாள்


பனி உறைந்த
அண்டார்டிகா பகுதிகளில்
அலையும் மீன் இது!

இம்மீன் குஞ்சு பொரிப்பதற்கு
இடம் தேர்வு செய்யும்!

நதி உற்பத்தி ஆகும்
இடத்திற்கே சென்றுதான்
இந்த மீன் முட்டையிடும்!

செல்லும் வழியில்
மனித வேட்டை
மிருக வேட்டை தப்பி
நதிமூலம் அடையும் மீனே
ஈனும்!

உயிர் அச்சமின்றி
உயிர் படைத்து
உயரும்
இம்மீன்போல்
சிலமனிதரும்
உண்டு!



உயிரை விட
மானம்
பெரிதென்னும்
சிவகாமி குடும்பம்
போல...

சிவகாமி உப்பரிகை
நின்று
சிக்கெடுத்த கூந்தல்
அவள் வாழ்வையே சிக்கலாக்கும்
விதி முடிச்சானது!

எட்டையபுர மகாராஜாவின்
கண்களில் உமிழ்நீர் சுரந்தது!
பக்திக்கண் பறந்தது!
பாவக்கண் திறந்தது!

உப்பரிகையில் கூந்தல் உயர்த்திய
சிவகாமியின் சிற்றுடலை
சிறுகச் சிறுக ரசித்தது
அந்த வயோதிக விழிகள்!

சிலமனித மனம்
சதைகளிலும் கவிதை தேடும்!
சில மனித மனம்
கவிதையிலும் சதை பார்க்கும்!

அதிகாரம் கொண்டவன்
ஆசைப்பட்டால்
அடிமை மக்கள் தோலுரித்து
ஆடை தைத்துத் தானே தர வேண்டும்!

மகாராஜா அரண்மனைக்குள்
குமுறினார்!
"அந்தப் பெண் வேண்டும்!
அனுப்பு பல்லக்கை...
ஒரு மூட்டை தங்கக்காசோடு
ஓடுங்கள் ஓடுங்கள்!"

ஒரு சிட்டுக் குருவியின்
கால்களைக் கடன் வாங்கி
தத்தித் தத்தி ஓடிய
தாவணிப் பறவை பல்லக்கைப் பார்த்தாள்!

"அண்ணா! அண்ணா! - ஏதோ
பல்லக்கு வந்திருக்கிறது!
அதுவும் இரவில் ஏன்?"
சிவகாமி கேள்வி
சிந்தினாள்!

இல்லம்
பரப்பரப்பானது!
இதயங்கள் பதறின!
அரண்மனைப்
பல்லக்கு
ராத்திரியில் வந்தால்
என்ன பொருள்?

பூஜை அறைக்கு
வந்த
மனிதச் சாம்பல்
மாதிரி
எத்தனை அசிங்கம்?

உலகில்
எதற்கும் ஒரு
விலை வைப்பவனும் இருக்கிறான்!
எதையும் சென்று
விலை பேசுபவனும் இருக்கிறான்!

எட்டையபுர மகாராஜா
சிவகாமிக்கு விலை வைத்தார்
சில கைத்தடி மனிதர்கள்
விலை கேட்க வந்தனர்!

சிவகாமியை
ராஜ சேவைக்காகத் தரும்படி
ரகசியம் பேசினர்!

(தேவதை வருவாள்)

புதிய வெளியீடுகள் - **தெய்வீகக் குரல்**

ஸ்ரீ. அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார், ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாஸ அய்யர் இருவரும் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்வரப்படுத்தியது. கிரவுன் ¼ அளவில் சுமார் 700 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த ஆண்டிக் பேப்பர், முழு வண்ண முகப்பு காலிகோ பவுண்டு, ஒரே வால்யூமாக ஸ்வர ஸாஹித்யங்களுடன்

(பொருளடக்கம்) விலை ரூ. **450/-**

1. ச்யாமா சாஸ்திரிகள் - கீர்த்தனங்கள் (முழுதும் ஸ்வரத்துடன்)
2. ஸ்வாதித் திருநாள் - கீர்த்தனங்கள் (")
3. சதாசிவ ப்ரும்மேந்திரர் - கீர்த்தனங்கள் (")
4. பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் - கீர்த்தனங்கள் (")
5. தியாகராஜ கீர்த்தனைகள் பஞ்சரத்ன கீர்த்தனைகள் உள்பட - ஸங்கீத வித்வான் ஸ்ரீ T.S. பார்த்தசாரதி அவர்கள் (")
6. அருணாசலக் கவிராயர் - ராம நாடகக் கீர்த்தனைகள் (")
7. ஆண்டாள் பாசுரங்கள் - ஸ்வரத்துடன் (")
8. ஸ்ரீ ராமானுஜர் நூற்றந்தாதி - ஸ்வரத்துடன் (")
9. ஸ்ரீ மகாகவி பாரதியார் பாடல்கள்- ஸ்வரத்துடன் (")
10. பங்கிம் சந்த் சடோபாத்யாய மங்கள கீதம் ஸ்வரத்துடன் (")

வால்மீகி ராமயாணம்

11. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஸுந்தர காண்டம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழில் மூலமும் வரிக்குவரி விளக்க உரையும் ரூ. 270.00
12. ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் அவர்களின் அபூர்வ ராகக் கீர்த்தனைகள் ஸ்வர ஸாஹித்யத்துடன் 5 தொகுதிகளாக ரூ. 470.00
13. அன்னமாச்சாரியர் - கீர்த்தனைகள் ரூ. 80.00
14. ப்ராசீனஸம்ப்ரதாய ஹரி ஹர குஹ, பஜனாம்ருதம் புதிய பதிப்பு ரூ. 190.00
15. ஜயதேவர் அஷ்டபதி (ஸ்வரத்துடனும் அர்த்தத்துடனும் ராதாகல்யாணத்துடன் மூன்று புத்தகங்கள் ரூ. 24/-24/-15/-
16. மஹாராஷ்ட்ர ஹிந்தி பஜனைகள் (புதிய பதிப்பு) - ரூ. 35.00
17. ஸத்குரு ஸ்ரீ தியாகராஜரின் 700 கீர்த்தனங்கள் ரூ. 175.00
18. மகாகவி பாரதியார் - எழுத்துகள் முழுவதும் அடங்கிய ஒரே நூல், கவிதைகள், கட்டுரைகள், கதைகள், பகவத் கீதை (விளக்கவுரை) நான்கும் சேர்ந்து ஒரே தொகுதி (Foure in one) 900 பக்கம் விலை ரூ. 125/-
19. ப்ராசீன ஸம்ப்ரதாய ஸ்ரீசிவ பஜன மாலா (சிவாஷ்டபதி, திவ்யநாமம், டோலோத்ஸவம் உள்பட விலை ரூ. 30/-
20. மனுதர்ம சாஸ்திரம் விலை (புதிய பதிப்பு) ரூ. 90/-
21. கிருஷ்ண லீலா தரங்கிணி விலை (புதிய பதிப்பு) ரூ. 60/-
22. ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் - ஆதிசங்கரர் உரையுடன் ஸமஸ்கிருத மூலமும் தமிழில் மூலமும் (விளக்க உரையுடன்) விலை ரூ. 51/-

நேரில் வந்து வாங்குபவர்களுக்கு விசேஷச் சலுகை உண்டு.

பாகவத சிரோமணி, பாகவத சூடாமணி,
பாகவத ரத்னம், பஜனபூஷணம், கோடையிடி
ரத்னம் ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்,
நெ. 9/2, சேது தெரு, நேரு நகர், சாலிக்கிராமம்,சென்னை 600 093.
போன் 23763055, 24451673

ராஜ் டீ.வி.யில் 'ஹிட் லிஸ்ட்' தொகுத்தளிக்கும் ஹேமா சின்ஹா, ஏதோ சத்ருகன் சின்ஹாவுக்குச் சொந்தக்காரி என்று நினைத்தால், 'நான் தென்காசிக்காரி' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார். அப்புறம் சின்ஹா எங்கே வந்தார்? அது சும்மா அம்மா வைத்த பெயராம்!

சிவில் என்ஜினியரிங் முடித்த, இந்த மிஸ் நெல்லை பெர்சனாலிடியை, டீ.வி.க்குக் கொண்டு வந்தது, தொகுப்பாளினி மகாலட்சுமி! "இப்ப புரொடியூசர் கலாபன் சார் தான் எல்லாம்" என்று புராணம் ஆரம்பிக்கத் தொடங்கிய வரை நிறுத்தி, "ஒரு மூட்டை சிமெண்டுக்கு எவ்வளவு மணல் சேர்க்கணும்?" என்று படிப்பு சம்பந்தமாகக் கேள்வி கேட்டோம்.

தேவையான அளவு உப்பு, தேவையான அளவு மிளகாய்ப் பொடிங்கற மாதிரி, தேவையான அளவு போட்டுக்கோங்க. நான் சப்ஜெக்ட் மறந்து பல வருஷம் ஆச்சுப்பா.

சரி, ஒரு வீடு கட்ட எவ்வளவு செங்கல் வேணும்?

எனக்குத் தெரிஞ்சது குடிசை



• ஹேமா

படம் : ஸ்ரீஹரி

வீடு கட்டத்தான். அதுக்கு மொக்கராக வோட மூளை மட்டும் போதும். (களி மண்ணாம்!)

முகத்துக்கு எந்தப் பொடி போட்டா பளிச்சுன்னு இருக்கும்?

ஆங்... சுண்ணாம்பு பொடி!

ரொம்ப போரடிச்சா என்ன பண்ணுவீங்க?

கல்கியில மொக்கராக பேஜ் இருக்கான்னு தேடுவேன்...

ஆஹா, ஆரம்பிச்சுட்டாங்கய்யா!



சப்ஜெக்ட் மறந்த ஹேமா!



• அர்ச்சனா



• மோகன்

* காமெடி டைம் அர்ச்சனா திருமணத்துக்குப் பிறகு, பதினைந்து நாள் சென்னையிலும், பதினைந்து நாள் கொச்சினிலும் இருக்கிறார். கணவருக்கு அங்கு ட்ரெயினிங்காம்!

* நடிகர் மோகன் தெலுங்கு சீரியல் ஒன்றைத் தயாரிக்கிறார்.

* ஊர்வம்பு லட்சுமி, ஏகப்பட்ட தொடர்களில் நடித்து வருவதால், ஊர் வம்பை ஓரங்கட்டிவிட்டாராம். இப்போது வம்புக்கு ஏகப்பட்ட காம்பயர்களைப் போட்டும், லட்சுமி மாதிரி வராததால் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறதாம் வம்பு டீம்!

—மொக்கராசா

புக் பேங்க்

சிறுகதை வடிவில் கம்ப்யூட்டர் பிரச்னைகளுக்குத் தீர்வு - விஜயநிலா

வேத மந்திரங்களை வெஸ்ட்டர்ன் டியூனில் சொல்லிப் புரிய வைப்பதுபோல், தொழிற்கல்வியை சுவாரஸ்யமாக வாசிக்கச் செய்வது கொஞ்சம் சிரமமான காரியம்தான். கொஞ்சம் காதல், கொஞ்சம் கதை, கொஞ்சம் இளமை என்று கம்ப்யூட்டர் தொழிற்கல்வியை சுவாரஸ்யமாக்குகிற உத்தி, சுவையோடு கற்றுத் தருகிறது.

- மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 17. விலை ரூ. 125/-

குருதத் - கனவில் எரிந்த கலைஞன் - இளையபாரதி

வெற்றி பெறுவது கலையா? வர்த்தகமா? - என்பது இன்னும் புரிபடாத திரையுலகில், காவியங்களைப் படைத்துச் சென்ற கலைஞன். நாற்பதுக்குள் புகழின் உச்சாணியில் ஏறி, உலகத் தரத்துக்குப் படைப்புகளைக் கொடுத்து, பின் அங்கிருந்தே குதித்து தன் கதையை முடித்துக் கொண்ட லட்சியவாதி. லட்சியத்துக்கும், யதார்த்தத்துக்கும் இடையே ஊசலாடிய, உயிர்க் கதை. மனதை உருகவும் வைக்கிறது, உலுக்கியும் எடுக்கிறது.

- புதுமைப் பித்தன் பதிப்பகம், 52, முதல் தளம், 4வது தெரு, சென்னை - 83. விலை ரூ. 25/-

கண்ணதாசன் ஆய்வுக்கோவை - தொகுப்பு: பேரா.மு.சாயபுமரைக்காயர்

திரைப் பாடல்களுக்கும் இலக்கிய அந்தஸ்தை அளித்த கண்ணதாசனின் பன்முகப் படைப்பாற்றலை அடையாளம் காட்டும் ஆராய்ச்சிப் படைப்பு.

- கங்கை புத்தக நிலையம், 23, தீனதாயாளு தெரு, சென்னை - 17. விலை ரூ. 250/-

தீவெளி - லதா

ஓடுகிற ஓட்டத்தில் அறுந்துபோன செருப்பை எறிந்துவிட்டு ஓடுவதுபோல், இறந்து போன மனிதரை வீசிவிட்டு உயிர் தப்புகிற கட்டாய சோகம், யுத்தம் உயிர்களுக்குத் தரும் மதிப்பு, பிரிந்து போன நாட்டையும், கலைந்து போன கூட்டையும் எண்ணி, உருகுகிற, உருக்குகிற, கவிதைகள்.


- கனகலதா, சிங்கப்பூர், நேஷனல் ஆர்ட்ஸ் கவுன்சில்


விவாதங்கள்... சர்ச்சைகள் - வெங்கட் சாமிநாதன்


இலக்கிய உலகின் பந்தாக்கள், வேஷங்கள், உள் வயணங்கள், மோசடிகள் என்று கசப்பான, ஆனால் உண்மையான முகத்தைக் காட்டுகிற விவாதங்களின் தொகுப்பு.

- அமுதசுரபி, A-7, 2ம் அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 102, விலை ரூ. 120/-

— விஷ்வக்











உள்ளங்கையில் உலகம்-11

ஒரு தடவை நான் பெங்களூரிலிருந்து பெல்காமுக்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தேன். இரண்டாவது வகுப்பில் பயணம் செய்தேன். அப்போதுதான் பலதரப்பட்ட மக்களைப் பிரயாணத்தில் சந்திக்க முடியும்.

என் இருக்கையில் உட்கார்ந்தபடி, எதிர் வரிசையை நோட்டமிட்டேன். கணவன் - மனைவி - மகன் என்று ஒரு சிறிய குடும்பம் அமர்ந்திருந்தது. மகனுக்கு 18-19 வயது இருக்கலாம். கல்லூரி மாணவன் போலும். மிடுக்காக உடை அணிந்திருந்தான். நல்ல வசதியான குடும்பம். தந்தை, மகனுக்கு நிறைய ஆலோசனைகள் சொல்லிக் கொண்டிருந்ததை பார்த்தபடி இருந்தேன்.

"குளிராக இருக்கிறதே, ஸ்வெட்டர் போட்டுக் கொள்ளக் கூடாதா?"

"உனக்குப் பசிக்கிறதா? உணவு எடுத்துத் தரட்டுமா?"

"பாத்ரூம் செருப்பு கொண்டு வந்திருக்கிறாயா? பாத்ரூம் போவதாய் இருந்தால் அதைப் போட்டுக் கொண்டு போ!"

இது மாதிரி நிறைய உபதேசங்கள்.

பையனுக்குப் புதியவர்கள் எதிரே இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூச்சமாக இருந்தது போலும். ஆனாலும் வேண்டாவெறுப்பாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவர்களுடன் பேசத் தயாரானேன் : "முதல் தடவையாக பெல்காம் போகிறீர்களோ?"

"ஆமாம். இதுவரை அங்கு போனதில்லை. எங்கள் மகனுக்கு பெல்காம் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கிறது. உங்களுக்கு அந்தக் கல்லூரியைப் பற்றி ஏதும் தெரியுமா? நல்ல கல்லூரி என்று கேள்விப்பட்டிருக்கிறேன்..."

"ஆமாம். சிறந்த கல்லூரிதான்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நான் அங்கே இருந்தவன்தான்!"

இதற்குப் பிறகு அவர்கள் என்னுடன் பேச வெகு ஆவலாக இருந்தார்கள்.

ரயில் அதற்குள் நகரத் தொடங்கி விட்டது. பெங்களூரைத் தாண்டுவதற்குள்ளாகவே, ஒரு பெரிய டிபன் அடுக்கைத் திறந்தார்கள். ஏராளமான தின்பண்டங்கள் அதில் இருந்தன. அந்தப் பெண், கீழ் 'பெர்த்'தில் சின்னப் பாய்களை வைத்து விட்டு, அதன் மீது தட்டுக்களை வைத்தாள். வீட்டில் பரிமாறுகிற மாதிரி நினைப்பு அவளுக்கு! பையன் சாப்பிடத் தயாராக இருந்தபோது, அந்தப் பெண் அவனிடம், "டெட்டால் சோப் போட்டுக் கையைக் கழுவிக் கொண்டு வா. பாத்ரூம் செருப்பு அணிந்து கொள்."


அவன் அங்கிருந்து அகன்றதும், தந்தை சொன்னார் : "புனீத் எங்கள் ஒரே பிள்ளை. அவனை செல்லமாக வளர்த்திருக்கிறோம். அவனை எங்கேயும் தனியாக அனுப்பியதில்லை. இதுதான் முதல் தடவை. அவனுக்கு ஹாஸ்டல் சரிப்படவில்லை என்றால், பெல்காமிலேயே ஒரு வாடகை வீடு பார்த்து, என் மனைவி அவனுடன் இருக்கலாம் என்று நினைத்திருக்கிறோம். குழந்தைகளுக்காகப் பெற்றோர் சில தியாகங்களைச் செய்யத்தானே வேண்டியிருக்கிறது!" அவர் குரல் கரகரத்தது. அவர் மனைவி கண்களிலோ, கண்ணீர் வராத குறை!

ஒரே பிள்ளை, தங்களை விட்டுப் பிரிந்து இருப்பது குறித்த அவர்கள் கவலையை உணர்ந்து கொண்டேன். பெற்றோருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் வேறு வழியில்லை. சிறகு முளைத்த பிறகும் பறவையை எத்தனை நாள்தான் கூண்டிலேயே அடைத்து வைத்திருக்க முடியும்? நம் குழந்தைகளுக்கு இரண்டே இரண்டு விஷயங்களைத்தான் நம்மால் கொடுக்க முடியும்; அவை ஆழமான வேரும், உறுதியான சிறகுகளும். அப்போதுதான் அவர்களால் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் பறந்து செல்ல முடியும்.

இப்போது அம்மாவின் முறை வந்தது. முன்பின் தெரியாதவனாக இருந்தாலும், தங்கள் கவலையைப் பகிர்ந்து கொள்ள நினைப்பது தெரிந்தது.

"எங்கள் மகன் ரொம்பச் செல்லப் பிள்ளை. நான் ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தேன். இவன் பிறந்ததும் வேலையை விட்டு

◆ சுதா மூர்த்தி ◆



விட்டேன். என் கூட வேலை பார்த்தவர்கள் எல்லாம் பிரின்ஸிபல் ஆகி விட்டார்கள். ஆனால் என் மகனை நன்றாக வளர்க்க வேண்டும் என்பதில்தான் குறியாக இருக்கிறேன்."

கணவர் உடனே, புனீத்தின் படிப்புக்காகவே பெங்களூர் வந்தேன். பண்ணைக்கு வாரம் ஒரு தடவை போவேன். புனீத்தின் பள்ளி அருகிலேயே வீடும் வாங்கினேன். என் குடும்பத்தோடுதான் எங்கேயும் போவேன்!

"பள்ளிக்கூடத்துக்கு அவன் மதிய உணவை எடுத்துக் கொண்டு போவேன். அவன் ஆசிரியர்களுடன் அவன் எப்படிப் படிக்கிறான் என்று விசாரிப்பேன். மாலையில் வேறு வகுப்புகள். மூளைக்கு வேலை தரும் செஸ் கற்றுக் கொள்ளுகிறான். உடல் பயிற்சிக்கு கராத்தே. கிரிக்கெட்டுக்கு நல்ல மதிப்பு. அதனால் அதையும் கற்றுக் கொள்ளுகிறான்."

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆனால் அந்தப் பையனை நினைத்தால் பரிதாபமாக இருந்தது. "அப்போ, சங்கீதம், பொது அறிவு, விவாதம் எல்லாம் விட்டு விட்டீர்களே?"

"அதெல்லாம் தேவையே இல்லை. அவன் பிறந்த போதே, டாக்டராக வேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டோம்."

"அவன் எதை விரும்பினான்?"

"எங்கள் விருப்பம்தான் அவன்

போன்சாய் பரிதாபம்!

விருப்பம். அவன் ஒரே பிள்ளை. வெளியுலகத்தைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்?''

கையைக் கழுவிக் கொண்டு பையன் வந்ததும் அவர்கள் சாப்பிடத் தொடங்கினார்கள். சாப்பாடு ஆனதும், படுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால், விளக்கை அணைத்து விடலாமா? விளக்கு வெளிச்சத்தில் என் பிள்ளைத் தூங்க மாட்டான்!''

என்னுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல், அவர் விளக்கை அணைத்தார். உணவைக் கூடச் சாப்பிட முடியாமல் நான் தனியாக உட்கார்ந்திருந்தேன். தூக்கம் கூட வரவில்லை.

புனீத்துக்குத் திருமணம் ஆனால், அந்தத் தாய் என்ன செய்வாள்? என்று யோசித்தேன். அளவுக்கு அதிகமான பாசம், மகன் கழுத்தில் கயிறாக இறுக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. புனீத் தன்னம்பிக்கையுள்ள இளைஞனாக எப்படி வளர முடியும்?

இரவு மணி பத்து ஆகியிருந்தது. நான் அத்தனைச் சீக்கிரம் உறங்கியதில்லை. அந்த அரை விருட்டு வெளிச்சத்தில் ஒரு தெரிந்த முகம் கடந்து செல்வதைப் பார்த்தேன். அவனைத் திடீரென்று சந்தித்ததில் ஒரே மகிழ்ச்சி.

''கவலைப்படாதே. டிக்கெட் பரிசோதகரிடம் சொல்லிக் கொள்ளலாம். என் பெட்டியிலேயே ஒரு 'பெர்த்' காலியாகத் தான் இருக்கிறது!''

அடுத்த பெட்டி கலகலப்பாக இருந்தது. என் பிற தோழிகளும் அங்கே அரட்டையடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

எங்களுக்கு நடுவே ஓர் இளைஞனும் இருந்தான். எங்களோடு படுஜாலியாகக் கலந்து கொண்டான். எல்லோரும் அவரவர் டிஃபன் பாத்திரத்தைத் திறந்து வைத்துக் கொண்டோம். பையனும் தன் பையிலிருந்து வாழைப் பழங்களை எடுத்து எங்களிடம் நீட்டினான். முன்பின் தெரியாதவனாக இருந்த போதும், உற்சாகமாகவும், தன்னம்பிக்கையோடும் எங்களிடம் பழகினான்.

''உன் பெயர் என்னப்பா? எங்கே போகிறாய்?'' என்று கேட்டேன்.

''என் பெயர் சரத். பெல்காம் போகிறேன்.''

''எதற்கு?''

''மருத்துவக் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்திருக்கிறது. சேரப் போகிறேன்.''

''முதல் தடவையாகப் போகிறாய். உன்னுடன் கூட யாரும் வரவில்லையா?''

''ஆம். முதல் தடவைதான். தனியாகத் தான் போகிறேன்.''

எனக்கு உணவே மறந்து போயிற்று. புனீத்தைப் பற்றி நினைவு வந்தது. இதே வயதுப் பையன் தானே அவனும்?

''உன் கூடப் பிறந்தவர் எத்தனை பேர்?''

''யாரும் கிடையாது. நான் ஒரே பிள்ளை தான்.''

''தனிமை உனக்குக் கஷ்டமாக இல்லை?''

''இல்லை!''

''ஓர் இளைஞன் என்ற வகையில், முக்கியமான அம்சம் வாழ்க்கையில் எது என்று சொல், பார்க்கலாம்!''

''சுதந்திரம். நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதிலும், நம் விருப்பத்துக்கு ஏற்ற மாதிரி செயல்படுவதிலும், உனக்குப் பிடித்ததைச் செய்வதிலும் உள்ள சுதந்திர உணர்வு. ஆனால் சமுதாயத்தைப் பாதிக்காத வகையில் அவை இருக்க வேண்டும். வனத்தில் வளரும் மரம் போல, எனக்கு அந்த மாதிரி சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியாக இருக்கிறது!''

முதல் பெட்டியில் ஒரு போன்சாய் செடியைப் பார்த்த மாதிரியான உணர்வு எனக்கு உண்டாயிற்று.

(தொடரும்)

''ஆய்த எழுத்து பற்றி கேளுங்க... பிரமாதமா சொல்லுவான்...'' - எஸ். மோகன்



''உங்க பையனுக்கு உயிர் எழுத்து, மெய் எழுத்து எதுவுமே தெரியலை.''



எழுதிய
மஹாபாரதம் பேசுகிறது
வால்மீகி ராமாயணம்
மற்றும் இதர அல்லயன்ஸ் நூல்கள்
சோ
விவேகா ஃபைன் ஆர்ட்ஸ்
பொன் விழாவை
முன்னிட்டு.
நாரத கான சபாவில் (சென்னை)
'சோ' வின்
நாடகங்கள் நடைபெறும் நாட்களில் மட்டும்
மாலை 5.00 மணி முதல் - சிறப்புச் சலுகை
சிறப்புத் தள்ளுபடி
15%
05.06.04 ▶ இறைவன் இறந்துவிட்டானா?
06.06.04 ▶ யாருக்கும் வெட்கமில்லை
13.06.04 ▶ முகமது பின் துக்ளக்
19.06.04 ▶ இரவில் சென்னை
20.06.04 ▶ உண்மையே உன் விலை என்ன?
27.06.04 ▶ என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
ஹெர்மன் ஹெஸ்
சித்தார்த்தன்
பூஜ்யஸ்ரீ
மஹா ஸ்வாமிகள்
வரலாறு
தமிழ்ப் பழமொழிகள்
அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
சிறப்புத் தள்ளுபடி நாடக அரங்கில் மட்டும்தான்

மிரட்டல் மிஸ்கினா!

“ஆண்களுக்கான அந்தப் பத்திரிகையிலிருந்து என்னை அழைத்திருந்தார்கள். அங்கு குதிரைகள் இருந்ததைப் பற்றி எனக்குத் தெரியாது. 'இது எதற்கு?' எனக்கு குதிரையேற்றம் தெரியாதே' என்றேன். சில புகைப்படங்கள் எடுக்க வேண்டுமென்றார்கள். எனது பாய்பிரண்டைத் தவிர, அங்கு ஆண்கள் யாருமில்லை. அரை நிர்வாணமாகப் படம் பிடிக்கச் சம்மதித்தேன். இதைப் பார்த்த என் அம்மாவுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி. இது டென்னிஸ் உலகில் தவறான எண்ணத்தை உருவாக்கி விடுமோவென்று. ஆனால், இதிலென்ன தவறு இருக்க முடியும்?”

பிரெஞ்சு ஓபன் டென்னிஸில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்றுள்ள அனஸ்டாஸியா மிஸ்கினாதான் சில வருடங்களுக்கு முன் இதைச் சொன்னவர்.

“ஆண்களுக்கானப் பத்திரிகையொன்றில் நிர்வாண போஸ் கொடுத்தீர்களே” என்ற கேள்விக்குத்தான் மிஸ்கினாவின் இந்த மிரட்டல் பதில்!

ஆறு வயதிலேயே டென்னிஸில் மூழ்கி விட்ட மிஸ்கினா, கிரிமினல் லாயராக வேண்டுமென விரும்பினாராம்.

“கிரிமினல்களுக்கு எதிராக வாதாடி, குற்றவாளிகள் இல்லாத சமூகத்தை உருவாக்க நினைத்தேன். ஆனால் காலம் என்னை மாற்றிவிட்டது” என்கிறார் முகத்தில் டன் கணக்கில் கவலை தோய.

இந்த மாற்றத்தால்தானே பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் ரஷியப் பெண் என்ற அங்கீகாரம் கிடைத்திருக்கிறது! இவரை எதிர்த்துப் போட்டியிட்ட டேமன்டீவாவும் ரஷியாவைச் சேர்ந்தவர்தான். இருவரும் சிறுவயதிலிருந்தே தோழிகள்! போட்டியென்று வந்துவிட்டால், தோழியென்றெல்லாம் பார்க்க முடியுமாயென்ன?

அப்பு

கலைந்து போன இந்திக் கனவு!

சபரிமலைப் பயணத்தின்போது, திடீரென்று யானையைப் பார்த்ததும், பயந்து போனாலும், எல்லோரும் சேர்ந்து "சாமியே சரணமய்யப்பா!" என்று பயபக்தியோடு கோஷம் போட, யானை அங்கேயே நின்று கொண்டு இருந்தது.

மெதுவாக குருசாமி நம்பியாரிடம் நடந்து வந்தார் வி.கே. ராமசாமி. அவர் என்ன சொல்லப் போகிறாரென்று சஸ்பென்சுடன் காத்திருக்க, அவர் கேட்டார், "நாம இவ்வளவு சத்தம் போட்டும் யானை நகரலையே! இந்த யானை செவிட்டு யானையா?" என்றாரே பார்க்கலாம்.

பயத்தையும் மீறி அனைவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. சிறிது நேரம் கழித்து, யானை தன் வழியே போனதும் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

பழம் பெரும் இயக்குனர் கே. சங்கர். அவர் இயக்கிய படங்களில் ஒன்று 'இரு மலர்கள்'. அதில் எனக்கு ஒரு கல்லூரிப் பேராசிரியர் வேஷம் கொடுத்திருந்தார். பி.யூ.சி.யோடு, கல்லூரிப் படிப்புக்கு குட்பை சொல்லிவிட்ட எனக்குக் கல்லூரிப் பேராசிரியராக வந்தபோது உள்ளூரப் பெருமையாக இருந்தது. பள்ளிக்கூடத்திலும், பி.யூ.சியிலும் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களின் மேனரிசங்கள் எல்லாம் எனக்கு நினைவுக்கு வந்தன. தமிழில் 'இரு மலர்கள்' ஒரு வெற்றிப்படம். அதைத் தொடர்ந்து இந்தியில் அந்தப் படத்தை எடுத்தார் அவர். தமிழில் நான் செய்த புரொபசர் கதாபாத்திரத்தை இந்தியிலும் என்னையே செய்யச் சொன்னார். நான் மறுத்தேன். காரணம், இந்தியில் எனக்கு அதற்கு முன் வாய்ப்பு வந்தது இல்லை. இந்தித் திரையுலகம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் டைரக்டர், "ஆர்ட்டிஸ்ட்டுக்கு மொழி ஒரு விஷயமே கிடையாது. நடிப்பு என்பது மொழிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம். அதுவும் உன்னைப் போன்ற நடிகனால் இந்தி என்ன, உலகில் எந்த மொழிப் படம் என்றாலும், பிச்சு உதறிவிட முடியும். தைரியமாய் நடி! நான்தானே டைரக்டர்! ஒன்றும் கவலைப்படாதே!" என்று தட்டிக் கொடுத்தார். நானும், அவர் இவ்வளவு சொன்ன பிறகு ஏன் மறுக்க வேண்டும் என்று, இந்தியில் நடிப்பதற்குச் சம்மதம் சொல்லி விட்டேன்.



• ராஜேந்திர குமார்

ராஜேந்திரகிஷன் என்று ஒரு பிரபல வசனகர்த்தா இந்தியில் இருந்தார். அவர் தான் இந்தப் படத்துக்கும் வசனகர்த்தா. அவரிடம், "இந்தி வசனம் பேசுவது எனக்குச் சிரமமாக இருக்குமே?" என்று சொல்லவும், அவர் "கவலைப்படாதே! நான் வசனங்களை அப்படியே ஒரு டேப்பில் பதிவு செய்து உங்களிடம் கொடுத்து விடுகிறேன். நீங்கள் பிராக்டீஸ் செய்து கொள்ளுங்கள்"



நாகேஷ்

என்று சொல்ல, எனக்கும் நிம்மதி.

சொன்னபடியே இந்தி வசனங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட டேப்பை என்னிடம் கொடுத்தார்கள். நான் அதை மீண்டும் மீண்டும் கேட்டு, மனப்பாடம் செய்து, பேசிப் பார்த்தேன். எனக்குத் திருப்தியாக இருந்தது. நம்முடைய டைம்சென்ஸ், பாடி லாங்குவேஜ் எல்லாம், இந்தி ரசிகர்களுக்குப் புதுசா இருக்கும். ரொம்ப ஆச்சரியப்பட்டு, ரசிப்பார்கள். ஒரு படத்தில் நம் நடிப்பைப் பார்த்து, பிடித்துப் போய்விட்டால், அடுத்தடுத்து இந்தியில் வரிசையாக வாய்ப்புகள் வரத் தொடங்கும் என்றெல்லாம் கற்பனையில் மூழ்கினேன்.

இந்திப்படம் என்றாலும், படப்பிடிப்பு சென்னையில்தான் நடந்தது. இந்திப் பட உலகின் முன்னணி ஹீரோக்களில் ஒருவரான ராஜேந்திர குமார்தான் ஹீரோ. அவரும் மும்பையிலிருந்து வந்திருந்தார்.

படப்பிடிப்புக்கு எல்லோரும் ரெடி. நான் மேக்-அப் போட்டுக் கொண்டு, பரீட்சைக்குப் போகிற பையன் மாதிரி மனப்பாடம் செய்து வைத்திருந்த இந்தி வசனங்களை எல்லாம் சொல்லிப் பார்த்துக் கொண்டு இருந்தேன். டைரக்டர் ஆரம்பத்தில் சொன்ன மாதிரியே, இன்றைக்குப் பிச்சு உதறிடலாம் என்று சந்தோஷமாக இருந்தேன்.

செட்டுக்குள் நுழைந்தேன். அந்தப் பக்கமாக ஹீரோ ராஜேந்திர குமார் கடந்து போவதைக் கவனித்தேன். அவருடைய இலேசான முன்பகுதி வழுக்கையை கவனித்தேன். 'அட! இன்னும் இவரு விக் வைத்துக் கொள்ளவில்லையா?' மேக் அப் போட்டுக் கொண்டு ரெடியாகவில்லையா? என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன்.

செட்டில் ஏதோ முணுமுணுப்பு நிலவுவதையும் நான் கவனிக்கத் தவறவில்லை. ஒரு பக்கமாய் நின்று கொண்டிருந்த ராஜேந்திர குமாரிடம் போனேன். "என்ன சார்! இனிமேல்தான் மேக் அப் போட்டுக் கணுமா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் "எனக்கு மும்பையில் கொஞ்சம் அவசரமான வேலை இருக்கிறது. எனவே நான் மும்பைக்குப் புறப்பட்டாக வேண்டும். இன்று எடுக்க வேண்டிய காட்சிகளை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொண்டால் போச்சு!" என்றார் சற்றே அலட்சியமான குரலில்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் அன்றைய தினம் ஷூட்டிங் நடக்கவில்லை. அது மட்டுமில்லை. நான் அந்தப் படத்தில் நடிக்கவும் இல்லை. என்ன காரணம் என்றும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இந்திப் படத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டதே என்று வருத்தம் ஏற்படவே செய்தது.

மூன்று வருடங்கள் கழித்து, டைரக்டர் சங்கர் மூலமாகவே அதற்கான விளக்கம் எனக்குக் கிடைத்தது. பல நாட்கள் கழித்து, டைரக்டர், ராஜேந்திர குமாரிடமே நேரடியாக இதுபற்றிக் கேட்டிருக்கிறார். அவர் சொன்ன பதிலில் இருந்து இந்திப் பட உலகத்து ஹீரோக்கள், தென்னிந்திய நடிகைகளைத் தங்கள் ஹீரோயின்களாக நடிக்க வைத்துக் கொண்டிருந்தாலும், மற்ற கேரக்டர்களில் தென் இந்தியத் திரை உலகைச் சேர்ந்த நடிக, நடிகையரைப் போட ஒப்புக் கொள்ளுவது கிடையாது என்று புரிந்தது. அந்த மரபுப்படி, தமிழ் சினிமாவைச் சேர்ந்த நாகேஷை, எப்படி ஒரு இந்தி ஹீரோ தம் படத்தில் நடிக்கச் சம்மதிப்பார்?

இதைக் கேள்விப்பட்டபோது மன வருத்தம் ஏற்பட்டது வாஸ்தவம்தான் என்றாலும், 'நம்மால், ஒரு புரொடியூசருக்குப் பிரச்னை வர வேண்டாமே!' என்ற எண்ணத்தில் இந்திப்பட உலகுக்கே பெரிதாக ஒரு கும்பிடு போட்டுவிட்டேன்.

திருவிளையாடல் படம் போலவே, என்னை எங்கே பார்த்தாலும், சர்வர் சுந்தரம் படம் பற்றியும் பல ரசிகர்கள் குறிப்பிடுவது உண்டு. ஒரு தடவை ஆந்திராவில் ஒரு தெலுங்குப்பட ஷூட்டிங். பணக்காரர்கள் வந்து போகிற கிளப் சம்மந்தப்பட்ட காட்சியை, ஒரு பணக்கார மனிதர்களுக்கான கிளப்பிலேயே படம் பிடித்தார்கள்.

'ஸ்ரீ' — காதல்!

'காதல் வைரஸ்' படம் கைவிட்டதில், வைரஸ் காய்ச்சலில் படுத்து எழுந்த மாதிரி இளைத்துப் போன ஸ்ரீதேவி, இப்போது ஒரு சுற்று பூசிவிட்டார். தனுஷுடன் ஜோடி சேர்ந்த குஷிதான் காரணம்! 'தேவதையைக் கண்டேன்' படத்தில், மிதிவண்டியில் தேநீர் எடுத்துச் சென்று விற்கும் பையனாக நடிக்கிறார் தனுஷ். படத்தில் ஸ்ரீதேவியும் தனுஷும் வகுப்புத் தோழர்கள். தனுஷ் மேற்கொண்டு

ஒரு காட்சிக்கும், இன்னொரு காட்சிக்கும் இடைப்பட்ட நேரத்தில், அந்த ஸ்ளப்பில் வலம் வந்தேன். ஒரு அறையில் சிலர் அமர்ந்து சீட்டு ஆடிக் கொண்டு இருந்தார்கள். நான் அந்தப் பக்கம் போவதற்கும், அங்கே ஆடிக் கொண்டு இருந்தவர்கள் தங்கள் சீட்டுக் கச்சேரியை முடித்துவிட்டு எழுந்திருக்கவும் சரியாக இருந்தது. என்னை திடீரென்று அங்கே பார்க்கவும், அவர்களுக்கெல்லாம் ஆச்சரியம்.

நான் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக, "என்ன ஆட்டம் முடிஞ்சுதா? யார் எவ்வளவு ஜெயிச்சீங்க?" என்று கேட்கவும், சட்டென்று ஒருவர், "ம். நான்தான் தோற்றேன். இன்றைக்கு மட்டும் ஒன்ணரை லட்சம் ரூபாய் நஷ்டம்!" என்றார்.

எனக்கு ஷாக். அவரிடம் ஆறுதலாக இருக்குமே என்று "ஐயம் வெரி சாரி!" என்று நான் சொல்ல, கூடவே அவர் "நானே கவலைப்படலை! நீங்க எதுக்காக கவலைப் படறீங்க. நீங்க நடிச்ச 'சர்வர் சுந்தரம்' படத்தோட வினியோக உரிமை என்கிட்டே தான் இருக்கு. நாலு தியேட்டர்ல மார்னிங் ஷோ போட்டேன்னா, இன்னிக்கு விட்ட காசை நான் சம்பாதிச்சிடுவேன்!" என்றார்.

அவர் இப்படி ஒரு பதிலைச் சொன்னதும் எனக்குச் சந்தோஷமாகவும் இருந்தது; வருத்தமாகவும் இருந்தது. ஆமாம்! 'சர்வர் சுந்தரம்' படத்தால் இன்றைக்கும் ஒரு மனிதரால் சம்பாதிக்க முடிகிறதே என்று சந்தோஷம். ஆனால் சம்பாதிக்கிற காசை எல்லாம், மனுஷர் பொறுப்பில்லாமல் சீட்டாடி இழக்கிறாரே என்று வருத்தம்.

முன்னிலையில் வயிற்று வலி நோயாளியாக நான் நடித்து, நடிப்புக்காக அவரது ராசியான கரங்களால் கோப்பை வாங்கியது பற்றி ஆரம்ப அத்தியாயங்களிலேயே நான் சொல்லி இருக்கிறேன். சினிமாவுக்கு வந்த பின், ஏராளமான படங்களில் ஆஸ்பத்திரி சம்பந்தமான காட்சிகளில் நடித்திருக்கிறேன். நோயாளியாக நடித்து, பார்க்கிறவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த காட்சிகளும் உண்டு.

ஆனால், எனக்கு உடம்பு நன்றாக இருக்கிறபோது, உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லி, கட்டாயமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கே ஜெயில் கைதி போல ஒன்றரை மாதங்கள் இருந்த அனுபவம், இன்றைக்கும் உடம்பு சரியில்லை என்று ஆஸ்பத்திரிக்கும் போகிற போது நினைவுக்கு வரும்.

அப்போது நான் ரயில்வேயில் வேலை பார்த்துக் கொண்டு இருந்த சமயம். ஒருநாள் நாடகம் சம்மந்தப்பட்ட ஒரு வேலைக்காக, சீக்கிரமாய் ஆபிசிலிருந்து புறப்பட்டுப் போக வேண்டி இருந்தது.

நான் என் மேலதிகாரியிடம் சீக்கிரமாய்ப் போக அனுமதி கேட்டேன்... 'உனக்கு சீக்கிரமாய் புறப்பட்டுப் போக அனுமதி கிடையாது' என்று கண்டிப்பான குரலில் மறுத்து விட்டார். தன்மையாகப் பேசி, அவரது மூடை மாற்ற முயன்றேன். பலனில்லை. எனக்கோ அவசரமாகப் போயே ஆக வேண்டிய சூழ்நிலை.

சட்டென்று ஒரு ஐடியா வந்தது. மேலதிகாரியின் மேஜைக்குப் பக்கத்தில், திடீரென்று கீழே விழுந்து, வயிற்றுவலியால் துடிப்பது போல நடித்தேன். நான் பண்ணின (நடிப்பு) ஆர்ப்பாட்டத்தில், எல்லோருமே எனக்குத் திடீரென்று ஏதோ ஆகி விட்டது என்று நம்பி விட்டனர்.

உடனே ஆம்புலன்ஸுக்குத் தகவல் தரப்பட்டது. ஆம்புலன்ஸில் ஏற்றி, ரயில்வே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் அனுமதித்து விட்டார்கள்.

இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

(சிரிப்பு தொடரும்)

எம்.ஜி.ஆர்



படிக்க முடியாமல், குடும்ப வறுமையைப் போக்க, தேநீர் விற்கக் கிளம்புகிறார். இதைப் பார்த்து உருகும் ஸ்ரீதேவி, தனுஷைக் காதலிக்கிறாராம். காதல் ஸ்ட்ராங்கான டீ மாதிரி இருக்குமோ இல்லையோ, ஸ்ரீதேவிக்கு முதல் வெற்றிப் படமாக இருக்கும்.

- ஜெ

மகா ஸைரஸ்

கடையில் கூட்டம் அதிகம் இருந்தது. கல்லாவில் இருந்தவர் வெயில் தாளாமல் சட்டையின் எல்லாப் பித்தான்களையும் கழற்றிவிட்டிருந்தார். எட்டு முழ வேட்டியைத் தொடைக்கு மேலே மடித்துவிட்டிருந்தார். அவர் கைகள் விறுவிறுவென பட்டியல் எழுதுவதும், விலை எழுதுவதுமாய், ஓயாமல் இயங்கிக் கொண்டிருந்தன.

இயேசுவடியான் அந்த பரபரப்பான மளிகைக் கடையின் ஓரத்தில் நின்றபடி கண்காணித்துக் கொண்டிருந்தார். கடையில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாய் இருந்தனர்.

அவருக்குக் கிடைத்த இந்தத் தகவலாவது உண்மையாக இருந்தால், அவரது மகன் இந்தக் கூட்டத்தில் இருக்க வேண்டும். அவர் பார்த்தவரையில் அவன் சாயல் யாரிடமும் இல்லை. கல்லாக்காரர் நன்றாய் விலகியிருந்த சட்டையை இன்னும் விலக்கிய படி,

"ரொம்ப நேரமா நின்னுகிட்டிருக்கியளே... என்ன ஜாமான் வேணும்...?"

"கொஞ்சம் பேசணும்... கூட்டம் குறையட்டுமே..."

"சர்த்தான்... யாவாரமா...?"

"இல்ல... இது வேற..."

"ஒரு மணிச்செல்லாம் ஜனம் காணாப் போயிடும். டீ சாப்ட்டு வாங்க..." அதுவும் சரிதான் என்றுபட்டது.

தேநீர்க் கடைகள் ஏதாவது தென்படுகிறதா எனத் தேடிய வண்ணம், அந்தக் கடைத் தெருவில் மெல்ல நடந்தார். எங்கோ ஒலிக்கும் தேவாலயத்தின் பாடல் காற்றில் கரைந்து வந்தது. நேரமிருந்தால் ஒரு நடை போய் வரலாம். அவன் தேவாலயத்துக் கெல்லாம் போகிறானா எனத் தெரியவில்லை. ஞாயிறு மட்டுமாவது அவனுக்கு ஒய்வு இருக்குமா என்றும் தெரியவில்லை.

இயேசுவடியான் தன்னை நினைத்தே மனதுக்குள்ளாக நகைத்துக் கொண்டார். பத்து வருடங்களாகத் தேடிய பின்பும் கிடைக்காதவன், இன்று கிடைத்துவிட்டது போன்ற ஒரு மாயத் தோற்றம் வந்துவிட்டது.

"ஒரு டீ குடுப்பா..."

அவனைப் பெற்ற தினத்திலிருந்தே தெரேசம்மாள் தன்னை முடிவற்று நீளும் கனவுகளில் அமிழ்த்திக் கொண்டான். பலப்பல நூற்றாண்டுகளின் புழுதியில் புதைந்து கிடந்த மாவீரன் சைரஸின் வீறு கொண்டெழும் வெற்றித் தோள்களில் மட்டுமே அவன் மகனின் பிம்பம் சரியாய்ப் பொருந்தியது. தன் மகனுக்கு சைரஸ் என்றே பெயரிட்டான். மகன் குறித்த ஒரு தாயின் கனவுகளுக்கு யார்தான் அணை போட இயலும்.

துரோகமும், வஞ்சனையும் பெருத்துக் கிடந்த அந்த இரத்த ஆண்டுகளில் சமாதானத்துக்கென்றே உதித்து, ஈரானின் இரு வேறு பழங்குடிகளை ஒன்றிணைத்து, பெர்ஷியா நாட்டைத் தோற்றுவித்த அவன் வரலாற்றைத் தன் மகன் மூளைக்குள் பொதித்தான். பாபிலோனியாவை வெற்றி கண்ட கதையைச் சொன்னாள். இன்றைய தபால்துறைக்கான ஆரம்ப ஏற்பாட்டை, தன் குதிரைகளின் மூலம் அவன் அன்றே சாதித்த சரித்திரத்தை விவரித்தாள்.

சிறுவன் சைரஸ் வளர்ந்தான். பள்ளியில் சேர்ந்தான். நாடுகளை வென்றவன் பெயர் கொண்ட தெரேசம்மாளின் மகன் சைரஸால், ஒரு தேர்விலும் பாஸ் மார்க் கூட வாங்க இயலவில்லை.

தெரேசம்மாள் தொடர்ந்து பொறுமை காத்தாள், நம்பிக்கையுடன்.

ஒவ்வொரு வகுப்பிலும் அவன் தேர்ச்சி பெறுவது, ஒரு தீராத வேதனையாக இருந்தது.

ஒருமுறை இயேசுவடியானும், தெரேசம்மாளும் பள்ளிக்குப் போயிருக்கையில், கணக்கு வாத்தியாரிடமும் பேச நேர்ந்தது.

"தான் படிக்கிறதை நினைவில் நிறுத்திக்கற ஆற்றல் சைரஸ்கிட்ட இயல்பாவே இல்லை... கணக்கு கொஞ்சம் போடறான்... என்ன செய்ய? கணக்கு மட்டுமே கல்வியில்லியே.. மத்த பையன்களோடு ஈடு கொடுக்கணும்னா, அவன் கடுமையா உழைக்கணும்... படிச்சதை அப்படியே வாந்தி எடுக்கற இந்த மனப்பாடக் கல்வி வேண்டாம்னுதான் நிறைய எழுதறாங்க... பேசறாங்க...என்ன பிரயோசனம்...?"

தெரேசம்மாள் கையில் பிரம்பை எடுத்துக் கொண்டாள்.

"திரும்பத் திரும்ப படி... என்கிட்ட ஒப்பிச்சாதான் ராத்திரி சாப்பாடு..."

சைரஸைப் பொறுத்தவரை படிப்பு என்பது இரவுச் சாப்பாட்டுக்கான போராட்டமாக ஆகிப் போனது. இந்தப் போராட்டம் தொடர்ந்த ஒரு காலையில், அவன் இருப்பு வெறுமையாகிப் போனது.

இயேசுவடியான் சட்டைப் பையில் இருந்த இருநூறு ரூபாயும், தெரேசம்மாளின் புடைவை மடிப்பில் இருந்த நூற்றைம்பது ரூபாயும் காணாமல் போயிருந்தன.

அவனைத் தேடத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாட்டின் நீள, அகலம் தெரிந்து கொண்டது அப்போதுதான்.

'கடற்கரை ஓரமா சுண்டல் விக்கிற பையனுங்ககூட அவனைப் பார்த்தேன்...'

மெரீனாவில் மணலில் ஒரு வாரம் புரண்டு வந்தார்.


"பெரிய கடை வீதியில ஐஸ் விக்கிறான்யா ஒம்புள்ளை..."

திருச்சி மொத்தமும் கடை கடையாய் அலசி வந்தார்.

சுண்டல் விற்பவனாயும், பேப்பர் பொறுக்குபவனாயும், குச்சி ஐஸ் வியாபாரியாயும், விதவிதமாய் அவனை உருவகித்து, தூக்கத்தில் புரண்டு ஒரு நேரத்தில் மரத்துப் போனது.

கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஓடிய நிலையில், இதோ... ஐந்து மணி நேர பேருந்துப் பயணத்தில், இந்த ஊரில்.

மீண்டும் அந்த மளிகைக் கடைக்கு நடந்தார். கூட்டம் நன்றாகவே மட்டுப்பட்டிருந்தது. கல்லாக்காரர் இப்போது



திருத்தமாய் தலை சீவியிருந்தார். வேட்டியும், சட்டையும் அதனதன் இடத்தில் அம்சமாய் இருந்தன. பேசுவதற்கு ஆவலாய் இருந்தார்.

"சொல்லுங்க..." என்றார்.

"ஒரு கல்யாணம் விசாரிக்க இந்த ஊருக்கு வந்தேன். எங்க ஊரு பையன் ஒருத்தன் இங்கே வேலை செய்யறான்னு கேள்விப்பட்டேன்... சும்மா பாத்துட்டுப் போலாம்னு..."

"யாரு... பேரென்ன...?"

"சைரஸ்..."

கல்லாக்காரர் தன் முன் வழுக்கையைக் கீறி, "அப்படி எவனும் இல்லயே இங்க."

"நல்லா யோசிச்சு சொல்லுங்கையா. இங்கதான் இருக்கான்னு சொன்னாங்க."

"லேய்...! எவன்டா அது சைரஸ்ஸு. நம்மகிட்ட எவனும் இருக்கானாடா அப்படி..."

"நம்ம சாத்துரரான் அப்படித்தான் மாமோ என்னமோ புரியாத பேரா சொல்லிட்டு திரியறான்..."

"சாத்துரரானா...?"

"அட... அப்படித்தான் கூப்பிடுறது. எந்தக் கழுதையையும் பேரு வச்சிக் கூப்பிடறதில்ல... இந்தா இவன் புளி மூட்டை... அந்தால ஓரமா நின்னுகிட்டு குளிக்கான் பாருங்க, அவன் கருவாயன். அப்படித்தான் அந்தப் பய சாத்துரானும் ஒரு ஏழெட்டு வருஷம் முன்ன வந்தான். படிப்பு வர்லயாம். ஆத்தா அடிக்கானாம்... சோறு போடலையாம்... பொட்டலம் மடிக்கக்கூட லாயக்கில்லாம, இம்புட்டு சைசில வந்தான்..."

"இப்ப இங்கதான் இருக்கானா...?"

"சரக்கு எடுக்கப் போயிருக்கான்... இப்ப வந்துடுவான்..." கல்லாக்காரர் சட்டென குரலைத் தழைத்துக் கொண்டு,

"உம்ம ஊராளு ரொம்ப சூட்டிகை இப்ப... வேலை ராக்கெட்டு வேகத்துல ஓடும்... செத்த சும்மா நிக்க மாட்டான், பறப்பான்... மூணு வருஷம்தான் பொட்டலம் மடிச்சான்.... அப்புறம் சரக்கு எடுக்க, போக்குவரத்துன்னு கடை தங்கற தில்ல. புயல் வேகத்தில கணக்குப் போடுவான் பாத்துக்கங்க. கடையை நம்பி விடலாம்... கை சுத்தம்... வாய் சுத்தம்..." இயேசுவடியான் கண்களில் நீர் உடைந்து கொண்டது.

"வண்டி இப்ப வந்துடும்... பாத்துட்டுப் போங்க பெரியவரே..."

மெதுவாய் நடந்து கடைக்கு எதிர் வரிசையில் ஒதுக்குப்புறமாய் நின்று கொண்டார். அது நிச்சயம் சைரஸாகத் தான் இருக்க வேண்டும்.

சற்று நேரத்தில் மஞ்சள் வேன் ஒன்று வந்து நின்றது. பக்கவாட்டுக் கதவைத் திறந்து, 'தொப்'பென குதித்தது அந்த உருவம்.

அவன்... அது... சைரஸ்...!

அவர் பெற்ற குழந்தை.

சைரஸ் முகத்தில் மீசைக் கருமை படர்ந்திருந்தது. தூக்கிக் கட்டிய லுங்கி. அவன் கெண்டைக் கால்களில் இளமை பூசியிருந்தது. சற்றே இடுங்கிய கண்களில் கூரிய பார்வை, தெரேசம்மாளைப் போலவே. உடம்பை இறுக்கிய பனியனுக்குள்ளே திமிறி நிற்கும் தோள்கள். பெர்ஷியாவின் மகாராஜா சைரஸைப் போலவே இருக்குமோ என்னவோ.

சைரஸ் திரும்பி அவரைப் பார்ப்பது போல இருந்தது. அவர் உடம்பெங்கும் அதிர்வலைகள் ஊடுருவிப் பரவியது. உடனே பேருந்து நிலையம் நோக்கி நடக்கத் துவங்கினார் இயேசுவடியான்.

நள்ளிரவில் வீட்டை அடைந்தார். சமையலறையின் மூங்கில் தடுப்பு வழியே அவரை ஊடுருவிய தெரேசம்மாளின் கண்களில் மிதமிஞ்சிய ஏக்கம் இருந்தது.

"அவன் நம்ம சைரஸ் இல்ல... யாரோ" என்றார், இயேசுவடியான். ரயில் ஓடும் இரைச்சலாய் இருந்த மின் விசிறி இயக்கத்தின் நடுவே, தெரேசம்மா முனகுவது கேட்டது.

"என் சைரஸ் ஒண்ணும் பொட்டலம் மடிக்கப் பொறந்தவன் இல்லே... இதச் சொன்ன அந்தப் பாவியை இயேசு மன்னிப்பார்."

இயேசுவடிவான் கால்களை நீட்டிப் படுத்தார்.

"அவன் ஒரு மகாசைரஸாகவே இவனைச் சந்திக்கட்டும்!" ○



"எப்பவும் உன்னையே பேசுவார் எங்க தலைவர்..."

அதுக்காக சட்டமன்றத் தேர்தலுக்கு கொள்ளை அடிப்படையில் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைப்போமான்னு கேட்குறதா?"

- எஸ். மோகன்

மனமே! நீ ஒரு லேசான பீஸோ!

மனதை மஜாவாக்கும் ஒரு கும்மாங்குத்து பகுதி



மனம் ஒரு குரங்கு! மனித மனம் ஒரு மனிதக் குரங்கு! - தாவும்.

மனம் ஒரு சுரங்கம்! மனித மனம் ஒரு கபடி அரங்கம்! - விளையாடும்.

மனம் ஒரு வண்டி! மனித மனம் ஒரு மோட்டார் வண்டி! - ஓடும்.

மொத்தத்தில் மனம் is a மனம்!

நீ படுத்திருக்கிறாயா? எழு, உட்கார். உட்கார்ந்திருக்கிறாயா? எழு. நில். நிற்கிறாயா? போதும்! நட! நடக்கிறாயா? போதும். ஓடு! ஓடுகிறாயா? நிறுத்து. படு! அசைந்து கொண்டே படுத்திரு! இல்லையேல் ஆறடி வெட்டி விடுவார்கள்.

அரசியலில் ஒரு முக்கியப் புள்ளி என்னைத் தேடி வந்தார். "சுவாமிஜி, என்கிட்ட சும்மாக் கிடக்குது கோடி! ஆனா தம்மாத்துண்டு நிம்மதி கூட இல்லை..." என்றார். குலுங்கிக் குலுங்கி அழுதார். அவரின் கண்ணீரைத் துடைத்தபடி சொன்னேன்.

"மகனே... பணம் ஒரு போதை! போதை மகாத்மாவிற்குப் பிடிக்காது. ஆனால் அந்த போதையின் உடலில் மகாத்மா சிரிக்கிறார். எனவே பணம் ஒரு முரண்பாடு! நீ அதை விட்டு ஓடு! நிம்மதி தேடு!" என்றேன். ஆனந்தமாகச் சென்றார், எனக்கு கன்சல்டிங் ஃபீஸ் கொடுக்காமலேயே!

ஒரு 'பன்' கதை! நடுரோட்டில் ஒரு பன் கிடந்தது. அதைப் பார்த்தபடி ஒரு நாகரிக இளைஞன் 'எடுக்கவா? வேண்டாமா?' என்ற சுயமரியாதைக் குழப்பத்தில் பசியோடு நின்றிருந்தான். அந்த பன்னை கவனிக்காத சிறுவன் ஒருவனும் அங்கிருந்தான். கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நாய் ஒன்றும் பன்னைப் பார்த்து குரைத்துக் கொண்டிருந்தது. ஒரு சமயத்தில், மூவரும் பன்னை எடுத்து விடலாம் என எத்தனிக்கும்போது, பன் அங்கில்லை. ஏனென்றால் நான் தூக்கிட்டு வந்துட்டேன்.

உனக்கு எது கிடைக்குமென்றிருக்கிறதோ, அது 'பன்' மாதிரி கிடைக்கும். கிடைக்காததன் காரணம், வேற எவனாவது லவட்டிகிட்டுப் போயிருப்பான்.

- ஸ்ரீஸ்ரீ ஜூஜூலிப்பா ஜிகினா சுவாமிஜி

சிந்தியுங்கள்! சிந்திக்க ஆரம்பித்தவன் சிந்தனைகளைச் சந்திக்கிறான். "யோசனை இல்லாதவன் ரோசம் கெட்ட மோசவாதி!" என்கிறது ஒரு ஆப்பிரிக்கப் பழமொழி! செய்! எதையாவது செய்! எப்படியாவது செய்! எப்படியென்று மட்டும் கேட்காதே! தயங்காதே! தடுக்கி விழு! 'தம்' கட்டி எழு!

கதவு மூடியிருந்தால் இருள்தான் கிடைக்கும். கதவை கள்ளச்சாவி போட்டாவது திற! என் அருள் கிடைக்கும். மூடிய கதவிற்குள் கொசு உன்னை விரட்டும். கதவைத் திற! காலரா வரட்டும்!

கற்பனை : முகில்

வட்டமேஜை

✉ முதல் கோணல் என்ற தலைப்பில், நான் படித்தது 'கல்கியின் தலையங்கம்'தானா என ஒருமுறை கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். மத்திய மந்திரி சபையில் பங்கேற்க கருணாநிதி நடத்திய கேலிக் கூத்து அரசியலை, லல்லுவின் அரசியலோடு ஒப்பிட்டுக் கூறியது முற்றிலும் சரியே! கடைசியாக 'ஊழல்வாதிகளும், கத்துக்குட்டிகளும் அமைச்சரவையில் இருக்கிறார்கள், விழிப்புடன் மன்மோகன் சிங் அரசு இருக்க வேண்டுமென' தாங்கள் எச்சரிக்கை விடுத்தது மனமாரப் பாராட்ட வேண்டியது.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

ரூ.100/- பரிசு பெறும் கடிதம்

அசத்திப்புட்டீங்க!

✉ முன்பு ஆந்திராவில் வெள்ளம் வந்தபோது, நிவாரணப் பணியாற்றிய ஆர்.எஸ்.எஸ், அது 'ரம்ஜான்' மாதமாக இருந்ததால், இஸ்லாமிய சகோதரர்களுக்கு நோன்பு உணவு தயாரித்து அளித்த நிகழ்வு என் நினைவுக்கு வருகிறது. சமீபத்தில் ஸ்வயம் சேவக்கான ஆசிரியர் ஒருவர், ஓர் இஸ்லாமியப் பெண்ணை அவளது மத வழிபாட்டு முறையிலேயே வளர்த்து. இறுதியில் இஸ்லாமிய மணமகனுக்கு இஸ்லாமியப் பெரியோர்கள் முன்னிலையில் மணமுடித்துக் கொடுத்ததை 'இந்து' நாளிதழில் படித்திருக்கிறேன். மதவெறியர்களால் கொலை செய்யப்பட்ட திருச்சி டாக்டர் ஸ்ரீதரன், இஸ்லாமிய அன்பர் ஒருவருக்கு இரத்தம் கிடைக்காத நிலையில், இரத்தம் சேகரித்துத் தந்ததை 'கல்கி'யிலே படித்திருக்கிறேன். "I count all the inhabitants of India as Hindus. In fact, I am really proud that I am a Hindu" என்ற அபுல்கலாம் ஆசாத்தின் கனிமொழிகளைத்தான் ஆர்.எஸ்.எஸ்ஸும் வழி மொழிகிறது.

திருநெல்வேலி - 11, வி. கல்யாணி.

✉ ஹிந்துத் தத்துவத்தைப் பற்றி தேவையில்லாமல் அடிக்கடி விமர்சிப்பதைக் கலைஞர் நிறுத்திக் கொண்டால், கலைஞரின் மதிப்பு மேலும் கூடும் என்பது யதார்த்தமான உண்மை.

மதுரை, பனிமலர்.



✉ அரசாங்க நிர்வாகம், ஆட்சி நடத்தும் பொறுப்பு வாய்ந்தவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நன்றாக எடுத்துச் சொல்லியுள்ளார் அமரர் கல்கி. தக்க சமயத்தில் வெளியிட்டதற்கு நன்றி.

மதுரை - 10, அ. கனகம்மாள்.

✉ 'அரசியலில் கருணாநிதி கற்றுத் தந்த பாடங்கள் ஏராளம்' என எதிர்க்கட்சிக்காரர் ஒருவர், அதுவும் பா.ஜ.க முன்னணித் தலைவரான இல. கணேசன் தாராளமாகப் பாராட்டியிருப்பதை வெளியிட்டு அசத்திப்புட்டீங்க.

திருவண்ணாமலை, சாமி.

✉ முதலில் வெற்றி பெற்றால் போதும் என்று எண்ணுவது. பின்னர் இந்தத் துறை வேண்டும், அந்தத் துறை வேண்டும் என நிர்ப்பந்திப்பது, வெட்கத்துக்குரியது. எதற்காக நாம் நாடாளுமன்றம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம் என்பதை அதற்குள்ளா மறப்பது?

கல்பூண்டி, பூ. சீனிவாசன்.

✉ இந்த வார 'மினி கல்கி'யில் காஞ்சி பரமாச்சாரியாரின் அருளுரை பிரமாதம். பக்கம் 91ல் பெரியவர் படம் மிக நன்றாக இருக்கிறது. பலமுறை கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

விழுப்புரம், டி. கிருஷ்ண சுரேஷ்.

ஜூன். 20-2004

மினி கல்கி

ஓவியர் மருது

டாக்டர் கே.ஸ்ரீஸ்ரீதர்

டாக்டர் எஸ்.அசோக்

டாக்டர் எல்.மகாதேவன்

சவேரா ஹோட்டலின் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி

டாக்டர் இரா.அன்புமணி

பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்



சர்க்கரையில் அக்கறை


டாக்டர் என்.ஜெயபால்



பாகிஸ்தானும், சர்க்கரை நோயும் ஒன்று! காரணங்கள் மூன்று. இரண்டுமே பார்டர் லைனைத் தாண்டும்போது கவனிக்கப்படுகின்றன. இரண்டுமே ப்ளட் ரிலேட்டட். இரண்டுமே நிரந்தரச் சிக்கல்கள். பாக். பிரச்னையைக் கூட நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியும். ஆனால் சர்க்கரை நோய்? அதன் திமிரை அடக்கி கட்டுக்குள் வைத்திருப்பது தான் ஒரே தீர்வு. அதைக் கற்றுத் தருகிறார் சர்க்கரை நோய் சிறப்பு மருத்துவர் டாக்டர் என். ஜெயபால்.

'என் இனிய தமிழ் மக்களே!' இது இயக்குனர் இமயம் பாரதிராஜா தமது ரசிகர்களைப் பாசமாக அழைக்கும் ஸ்டைல். எதிர்வரும் 2025லிருந்து ஒட்டுமொத்த இந்தியப் பெருங்குடி மக்களை, அவரது ஸ்டைலில் 'என் இனிய இந்தியர்களே' என்று அழைத்தால் தப்பில்லை. காரணம், உலக சுகாதார நிறுவனம் அடித்திருக்கும் எச்சரிக்கை மணி. ''சர்க்கரை நோயாளிகளின் தலை நகரம் (Diabetic Capital of world) என நமது நாட்டை வர்ணித்திருக்கிறது அந்த அமைப்பு. உலகில் சர்க்கரை நோய் இருக்கிற ஏழு பேரை எடுத்துக் கொண்டால், அதில் ஒருவர் 'இனிய இந்தியர்'. இன்றைய தேதிக்கு தேசம் முழுவதும் இருபத்து இரண்டு மில்லியன் பேருக்கு சர்க்கரை. இது 2005ல் அறுபது மில்லியனைத் தொடப் போகிறது என்று புள்ளி விவரம் காட்டி, நமது வயிற்றில் பயக்கோலம் வரைகிறது. உலக சுகாதார நிறுவனத்தைப் பார்த்து who are you call to us a diabetic country? என்று கோபப்படுவதை விட்டுவிட்டு, இந்த நோயைப் பற்றி முழுமையான விழிப்புணர்வுக் கல்வி பெறுவதும், சர்க்கரை நோய் இருப்பவர்கள் அதுபற்றி அதிக கவனம் எடுத்துக் கொண்டு, வெற்றி கொள்வதுமே, இந்த அவச் சொல்லிலிருந்து நம்மை மீட்கும். இனி சர்க்கரை நோய் பற்றி கொஞ்சம் அக்கறையோடு அரட்டை அடிக்கலாமா? ஐ மீன் அர்த்தமுள்ள அரட்டை!

சங்க காலம் முதலே சர்க்கரை



என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் ஓர் ஆட்டோ டிரைவர். இரத்த சோதனைக்குப் பிறகு,

• டாக்டர் என். ஜெயபால்




"உங்களுக்கு சர்க்கரை நோய்" என்றேன். அவ்வளவுதான்! "இந்தப் பணக்கார வியாதி, எனக்கு எப்படி வந்துச்சி?" என்று பதைத்துப் போனார். "இது ஏழை, பணக்காரர் எல்லோரையும் சமதர்மமாகப் பார்க்கும் பொதுவுடமை வாதி" என்றேன். மருத்துவ உலகம் பற்றி ஓரளவு தெரிந்த ஒரு பார்மசிஸ்ட் சிகிச்சைக்கு வந்தார். அவரோ "உடம்பை கட்டுக்கோப்பா வைச்சிருந்தும் இந்தப் புது வியாதி என்னையும் பிடிச்சிருச்சே!" என்று படபடத்தார். 'சர்க்கரை நோய் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது. சுஸ்ருத முனிவர் தமது மருத்துவ சாஸ்திரத்தில் சர்க்கரை நோயை 'மதுமேகம்' என்று குறிப்பிடுகிறார். மது என்றால் இனிப்பு, மேகம் என்றால் நீர். தொடக்க காலத்தில் சிறுநீரை, மண் தரையில் ஊற்றி, அதில் எறும்பு மொய்த்தால் மதுமேகம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்! இதற்குப் பட்டினியும், நரம்பை வெட்டி விட்டு இரத்தத்தை வெளியேற்றுவதும் தான், பழங்கால சிகிச்சை முறைகள்' என்று அவருக்குச் சொன்னேன். இப்படி படித்தவர்கள், படிக்காதவர்கள் என எல்லோரிடமும் சர்க்கரை நோய்ப் பற்றி, பல தவறான எண்ணங்கள்.

சர்க்கரை நோயைப் பற்றிய விழிப்புணர்வும் கடந்த இருபது ஆண்டுகளாக ஏற்பட்டதுதான். அதுவும் 1921ல் ஏற்பட்ட திருப்புமுனைக்குப் பிறகு. அது என்ன திருப்புமுனை?

இன்சுலின் ஒரு புதிய கண்ணோட்டம்

இன்சுலின் - மருந்து உலகின் மிக உன்னதமான கண்டு பிடிப்புகளில் ஒன்று. இன்சுலின் கண்டுபிடிக்கப்படும் முன்பு (1921), மருத்துவர்கள், சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த மிகவும் சிரமப்பட்டார்கள். பாண்டிங், பெஸ்ட், ஆகிய இரு மருத்துவர்கள் இன்சுலினைக் கண்டுபிடித்தபின், சர்க்கரை நோய் பற்றிய ஆராய்ச்சிகள், இந்த நோய் பற்றிய விரிவான தகவல்கள், உலகுக்கு அறிவிக்கப்பட்டன. இந்த மகத்தான கண்டுபிடிப்பு இருவருக்கும் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. இந்த இன்சுலின் குறைபாடு தானே நம்மை சர்க்கரை நோயாளி



ஆக்குகிறது? வாருங்கள், நம் உடலுக்குள் ஒரு சின்ன டூர் போய்விட்டு வரலாம்.

கணையமே... ஓ... கணையமே...


என் இதயத்தில் உனக்கு இடம் கொடுத்திருக்கிறேன் என்று காதலர்கள் வாக்குமூலம் தருகிறார்கள். அந்த இதயத்தின் ஆரோக்கியத்தில் கணையத்துக்கும் பெரும் பங்கு உண்டு. கணையம், நமது கல்லீரலின் மேல் இருக்கும் நாளமில்லாச் சுரப்பி. இது சுரக்கும் ஒரு ஹார்மோன் திரவம்தான் இன்சுலின். இன்சுலின் ஒரு சாவி மாதிரி. எப்படி?

நாம் உண்ணும் உணவை உடல் க்ளூகோஸாக (சர்க்கரை) மாற்றுகிறது. பிறகு அந்தச் சர்க்கரை இரத்த ஓட்டத்தில் சேர்க்கப்படுகிறது. இப்போது கணையத்தில் சுரக்கும் இன்சுலின் திரவமும், இரத்தக் குழாய்களின் வழியே உடலில் உள்ள கோடானு கோடி செல்களின் கதவைத் திறந்து விடுகிறது. இதனால் சர்க்கரை, செல்லின் உள்ளே செல்கிறது. பிறகு செல்கள் சர்க்கரையை எரித்து, நமது உடலுக்கு எரிபொருளை (எனர்ஜி) வழங்குகின்றன. இதனால்தான் உடல் வேலை செய்கிறது. தேவையான இன்சுலினை கணையம் சுரக்காமல் குறைபாடு ஏற்படும் போது, உயிரணுக்களின் உள்ளே சர்க்கரை புக முடியாமல், இரத்தக் குழாய்களிலேயே தங்கி விடுகிறது. இப்படி இரத்தத்தில் சர்க்கரையின் அளவு சரிவர அகற்றப்படாமல் அதிகரிக்கும் போது, சர்க்கரை நோய் வருகிறது.

இதற்கு மாறாக, இன்சுலின் சுரப்பது அளவில் அதிகரித்தாலும், இன்சுலின் சாவி போல் பணியாற்றும் அதன் செயல்திறன் குறைந்துவிடுகிறது. இதை இன்சுலின் செயல்திறன் இழப்பு (Insulin Insensitivity) என்று மருத்துவ உலகம் சொல்கிறது. இந்த வகை சர்க்கரை நோய், பெரும்பாலும் உடல் பருமன் உள்ளவர்களிடம் அதிகம் காணப்படுகிறது.



ஆக கணையம், போதிய இன்சுலினை உற்பத்தி செய்யாவிட்டாலும் சிக்கல், அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்தாலும் பிரச்னை... இப்போது சொல்லுங்கள், இதயம் போலவே இன்சுலின் தரும் கணையமும் எத்தனை முக்கியமானது! இனி "கணையமே ஓ... கணையமே உன் மௌனம் என்னைக் கொல்லுதே" என்று தமிழ் சினிமா பாடலாசிரியர்கள் பாட்டு எழுதினால் கூட ஆச்சரியப்பட ஏதுமில்லை. அதே போல் உங்கள் இரத்தத்தில் சர்க்கரையின் இயல்பான அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால், உங்களின் அடிப்படையே ஆட்டம் காணும் என்பதிலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. வாங்க... உங்கள் இரத்ததில் சர்க்கரையின் அளவை சோதிக்கலாம்.



ஏங்க, சர்க்கரை சரியா இருக்கா?

வெறும் வயிற்றில் இருக்கும் போது எடுக்கப்படும் உங்களது இரத்த மாதிரியில் சர்க்கரையின் அளவு 126 மிலி கிராமுக்கு மேற்பட்டு இருந்தாலோ, சாப்பிட்டு இரண்டு மணி நேரத்திற்குப் பின் எடுக்கப்பட்ட மாதிரியில் சர்க்கரையின் அளவு 140 மிலி கிராமுக்கு மேற்பட்டு இருந்தாலோ, உங்களுக்கு சர்க்கரை நோய் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த அளவுகளுக்கு உட்பட்டு இருந்தால் உங்கள் உடலில் சர்க்கரையின் அளவு சரியாக இருக்கிறது என்று அர்த்தம். எந்த நேரத்திலும் 200 மிலி கிராமுக்கு மேல் இருந்தால், சர்க்கரை நோய் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

'சோதனை செய்து பார்த்தால்தான் சர்க்கரை நோய் இருப்பது தெரிய வருமா, முக்கிய அறிகுறிகள் என்று எதுவும் கிடையாதா?' இதுதானே உங்கள் அடுத்த கேள்வி? சர்க்கரை நோயாளிகளில் நாற்பது விழுக்காட்டினருக்கு மட்டுமே அறிகுறிகள் தெரிகின்றன? என்ன அறிகுறிகள்?




சர்க்கரை நோயின் முக்கிய அறிகுறிகள்

சர்க்கரை நோயின் முக்கிய அறிகுறிகள் பற்றிப் பேசும்போது

"மெய் உருக்கி
முகம் சுருக்கி
விழி இருள
மேனி பதற
கணையம் சோர்வுற
உயிரனு ஊசலாட
உடைமைகளைத் தீண்டிவிட
உனக்கு மட்டும்
இஃதென்ன எழுச்சி?"

- என்ற லோக்கல் கவிதை தான் நினைவுக்கு வருகிறது. கவிதைதான் லோக்கலே தவிர, அதன் ஒவ்வொரு வரியும் தரும் கருத்து, நூறு விழுக்காடு உண்மை.

அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக பசி, அதிக தாகம், பிறப்பு உறுப்புகளில் புண், ஆறாத புண், அதிரடி எடைக் குறைவு, அடிக்கடி மயக்கம், நோய்கள் குணமாவதில் தாமதம், கைகால்களில் மரத்துப் போகும் உணர்வுகள். இந்த அறிகுறிகளில் அதிகபட்சம் இரண்டு தென்பட்டாலே, அலறியடித்து டாக்டரிடம் ஓடிப்போய் உங்கள் சர்க்கரையின் அளவைப் பரிசோதனை செய்யுங்கள்.



முப்பத்தைந்து வயதைத் தொட்டுவிட்டீர்கள் என்றால், கட்டாயம் ஆண்டுக்கு ஒருமுறை சர்க்கரையின் அளவை பரிசோதனை செய்து கொள்வது வருமுன் காக்க உதவும்.

குறிப்பாக, குடும்பத்தில் அப்பா, அம்மா யாருக்கேனும் பாரம்பரிய சர்க்கரை நோய் இருந்திருந்தால், கட்டாயம் வாரிசுகள் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். தவிர, இரத்தத்தில் அதிக கொழுப்புச் சத்து, இரத்த அழுத்தம்,



உடல் பருமன், இடையறாத மன அழுத்தம் கொண்டவர்களும், உடல் உழைப்பு இல்லாதவர்களும், ஆண்டுக்கு ஒருமுறை சர்க்கரை நோய் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. சரி, எது நம்பிக்கையான பரிசோதனை முறை என்று தெரிய வேண்டாமா?

குளுக்கோஸ் குடிங்க! குட்டு உடையும்!

இந்த சர்க்கரை அளவு இருக்கே! இது பாச்சா காட்டுவதில் பலே கில்லாடி. ஆனால் குளுக்கோஸ் டாலரன்ஸ் முறையில் பரிசோதிக்கும்போது, இதன் பாச்சா பலிக்கிறதில்லை. உலக அளவில் பின்பற்றப்படும் நம்பகமான சோதனை முறை இது தான். இதை GTT என்று செல்லமாகச் சொல்லுவோம்.

சிறுநீர்ப் பரிசோதனை மூலம் கண்டறியப்படும் சர்க்கரையின் அளவை வைத்து, எந்த சிகிச்சையும் தரப்படுவதில்லை. இன்னொரு பக்கம், சிகிச்சை எடுத்துக் கொண்டு, உணவு முறையில் மாற்றம் செய்து கொள்ளாமல் மருத்துவரை ஏமாற்றிவிட்டு, அவரைச் சந்திக்க வரும் ஒரு நாளுக்கு முன்பு கொஞ்சம் பட்டினி கிடந்து, சர்க்கரையின் அளவை தற்காலிகமாகக் குறைத்து டபாய்க்கும் புத்திசாலிகளை மடக்குவதற்கென்றே இருக்கிறது HBAIC முறை. இது நோயாளியின் கடந்த மூன்று மாத கால சர்க்கரையின் அளவை, நமக்குத் துல்லியமாகக் காட்டிவிடும். சர்க்கரை நோய் இருப்பதைக் கண்டு பிடித்து விட்டோம். ஆனால் அது என்ன வகை சர்க்கரை நோய் என்று தெரிந்தால் தானே, அதற்கு ஏற்ற சிகிச்சையைத் தர முடியும். வாருங்கள், வகைகளை ஒரு கை பார்ப்போம்.

சாரி சாரியாய்ச் சர்க்கரை நோய் வகை

இந்த உப தலைப்பைப் படித்ததும், பயந்து விடாதீர்கள். சர்க்கரை நோய் அடிப்படையில் இரண்டே வகை.

மினி கல்கி

அழகை அழகாய் காட்டுமே




நலங்கு புடவைகள்

மங்கள நாண் பூட்டிய நாளில்
உங்கள் உள்ளம் கவர்ந்த உறவுட
குதூகலிக்கும் வேளையில்
ஆரெம்கேவி நலங்கு புடவைகள்

உங்கள் அழகை அழகாய் காட்டு
ஆரெம்கேவி முகூர்த்தப் பட்டுகள்
பாரம்பரியத்தை பிரதிபலிக்கும்
நவீன படைப்புகள்.

நிச்சயதார்த்தப் புடவைகள் | ஊஞ்சல் புடவைகள் | முகூர்த்தப் புடவைகள் | நலங்கு புடவைகள்
அழைப்பு புடவைகள் | ரிசப்ஷன் சில்க்ஸ்


RmKV
முகூர்த்தப் பட்டுகள்
பனகல் பார்க் | சென்னை | போன் 044-28144445
வடக்கு ரத வீதி | திருநெல்வேலி | போன் 0462-2333105
www.rmkv.com




1. டைப் ஒன்
2. டைப் டூ

முதல் வகை, இருபது வயதுக்கு உட்பட்ட இளம் பருவத்தினருக்கு வருவது.

டைப் 2: இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வருவது. இந்தியாவில் தொண்ணூற்று இரண்டு விழுக்காட்டினர் எதிர்கொள்வது இந்த வகைதான். அடுத்து ஜி.டி.எஸ். (Gestational diabetic melitus) எனப்படும் கர்ப்ப கால சர்க்கரை நோய், முக்கியமானது. கர்ப்பமான மூன்றாவது மாதத்திலேயே சர்க்கரை நோய்ப் பரிசோதனை செய்து கொள்வது குழந்தையைக் காக்கும். இதைக் கட்டுப்பாட்டில் வைக்காவிட்டால், குழந்தையின் மூளை வளர்ச்சி மற்றும் அங்க வளர்ச்சிகள் பாதிக்கப்படும். குழந்தையின் எடை அதிகரித்து, பிரசவத்தில் சிக்கலை உண்டாக்கலாம்.

இவை தவிர, கணையத்தில் ஏற்படும் பாதிப்பு, புரதச்சத்து குறைபாடு, பிட்யூட்டரி அதிகமாகச் சுரத்தல், ஜீன் குறைபாடு போன்றவற்றாலும் சர்க்கரை நோய் ஏற்படலாம். சரி! சர்க்கரை நோயை நிரந்தரமாக குணப்படுத்த முடியுமா? இந்தக் கேள்விக்கு இன்றைய நவீன மருத்துவ அறிவியல் தரும் பதில், 'முற்றிலும் குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.' அதாவது உங்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை சமநிலையில் (இயல்பான அளவு) வைத்திருக்கலாம். இதை அடைந்திட உங்கள் மருத்துவர், உணவு முறை, உடற்பயிற்சி, சுய சுகாதாரம் போன்றவற்றுக்காக ஒரு புதிய வாழ்க்கை



முறையை வகுத்துக் கொடுப்பார். இதை நீங்கள் கடமையுணர்ச்சியோடு கடைப்பிடிப்பதன் மூலம், சர்க்கரையைச் சமநிலையில் வைத்துக் கொள்ளலாம். இயலாத பட்சத்தில் மாத்திரைகள். இதிலும் கட்டுப்படவில்லை என்றால், இன்சுலின் ஊசிகள் அவசிய மாகிவிடுகின்றன.

'சர்க்கரை நோயை முழுவதும் குணப்படுத்த இயலாதெனில், பிறகெதற்கு இந்த சிகிச்சைகள்?' என்ற கேள்வி வரலாம். கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை நோயால் வரக்கூடிய மாபெரும் சிக்கல்களைத் தவிர்க்க சிகிச்சை அவசியமாகிவிடுகிறது. என்ன சிக்கல்கள்?




நீண்ட கால சர்க்கரையால் நீளும் பட்டியல்

இரத்தத்தில் நீண்டகாலமாக கட்டுப்படுத்தப்படாத அதிக சர்க்கரை இருந்தால், முதலில் இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக நரம்பு தொடர்பான பிரச்னைகள் ஏற்பட்டு, கால்கள் அல்லது உடலில் உணர்வின்மையை ஏற்படுத்தி விடுகிறது. இரத்தக் குழாய் நோய்கள் (அடைப்புகள், கட்டிகள்) காரணமாக மாரடைப்பு, பக்க வாதம் மற்றும் மூளை செயலிழப்பு ஏற்படுகிறது. உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்ற முடியாத நிலை அடைந்து, சிறுநீரகங்கள் செயலிழந்து விடுகின்றன. கண் நரம்புகள் பாதிக்கப்படுவதால், கண்புரை மற்றும் பார்வை இழப்பு ஏற்படலாம். கால்களில் ஆறாத புண்கள் ஏற்படும் பட்சத்தில், அறுவை சிகிச்சை மூலம், காலை நீக்க வேண்டிய நிலைக்கு ஆளாகலாம்.

இனிப்பான சர்க்கரை நோயின் கசப்பான இந்தச் சிக்கல்களுக்கு, சிகிச்சைக்காக செலவிடப்படும் பெரிய பொருளிழப்பு, நோயாளி மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் மன வேதனை இரண்டையும் தவிர்க்க, நமது சர்க்கரையின் அளவை, அதன் தலையில் அடித்து, எப்போதும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே தீர்வு. இதற்கு உடற்பயிற்சியும், உணவு முறையும், கொஞ்சம் சிகிச்சையும் இருந்தாலே போதும். வாருங்கள், இனி வாக்கிங் போகலாம்...

முறையான உடற் பயிற்சி தொடர்ச்சியாக!

உடற்பயிற்சி இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை முப்பது மில்லி கிராம் வரை குறைக்கிறது. குறைந்தது அரை மணி நேரம்



நடந்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது. தினசரி ஒரு மணி நேரம் நடந்தால், இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவும் சேர்ந்து குறைகிறது. கொலஸ்ட்ரால் குறைந்தால் உடலின் எடை குறைகிறது. உடல் எடை குறைந்தால் உடலுக்குத் தேவைப்படும் இன்சுலின் அளவும் குறைகிறது" போனஸாக, மன அழுத்தம் காணாமல் போகிறது. தொடர்ச்சியான உடற்பயிற்சியின் மூலம், எடுத்துக் கொள்ளும் இன்சுலின் அளவை படிப்படியாகக் குறைத்து விடலாம்.

உடற்பயிற்சி என்பது தொடர்ச்சியாக மட்டுமல்ல, உங்களுக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். முதலில் எந்த மாதிரியான உடற்பயிற்சி மூலம் எவ்வளவு கலோரிகளை எரிக்கலாம் என்பதைத் தெரிந்து கொண்டால், உங்களுக்கு ஏற்ற, சிறப்பான உடற்பயிற்சியை அறிந்து கொண்டு, ஆர்வத்தோடு செய்யத் தொடங்கலாம். அதற்கு, கீழே உள்ள சிறிய பட்டியல் உங்களுக்கு வழி காட்டுகிறது, பாருங்கள். (வலபக்க அட்டவணை)

* உங்கள் அன்றாட வாழ்க்கையில் சாப்பிடுவது மற்றும் தூங்குவது போல, உடற்பயிற்சியையும் ஓர் அங்கமாக மாற்றுங்கள். நேரம் கிடைக்கும் போது செய்யும் ஒரு செயலாக, உடற் பயிற்சியை நினைக்காதீர்கள்.
* பிறருடன் சேர்ந்து உடற்பயிற்சி செய்யுங்கள். சோம்பல், அசிரத்தை காரணமாக உடற்பயிற்சியை நிறுத்திவிடாமல் இருக்க இது உதவும்.
* நீங்கள் எந்த அளவுக்குத் தொடர்ந்து உடற்பயிற்சி செய்கிறீர்களோ, அந்த அளவுக்கு அது சுலபமாகி விடுவதை உணர்வீர்கள். நீங்கள் உடற்பயிற்சி செய்பவர் என்பது மற்றவர்களால் கவனிக்கப்படும்போது, நீங்கள் மதிக்கப்படுவதைப் பாருங்கள்... பிறகு உடற்பயிற்சி உங்கள் உயிர் காக்கும் நண்பன்- உடற்பயிற்சி மட்டும்தானா? இன்னொரு உயிர் நண்பன், உங்கள் உணவுமுறை!

உணவுக் கட்டுப்பாடா? உணவு முறையில் மாற்றமா?

சர்க்கரை நோயாளிக்கு உணவுக் கட்டுப்பாடு என்பது கிடையாது. ஆனால் உணவு முறையில் மாற்றம் தேவை. உங்களது உயரத்திற்கு ஏற்ற சரியான எடையின் அளவை, முப்பதால் பெருக்கினால் வரும் அளவே நீங்கள் சாப்பிட வேண்டிய சரியான கலோரிகள். இதை நான்கு அல்லது அதிகபட்சம் ஆறு வேளைகளாகப் பிரித்துச் சாப்பிடலாம். உதாரணமாக 160 செமீ. உயரமுள்ள

உடற்பயிற்சி	குறிப்புக்கள்	30 நிமிடங்களில் எரிக்கப்படும் கலோரிகள்
ஒரு மணி நேரத்துக்கு 6 கி.மீ. வேகத்தில் நடத்தல்	மிருதுவான, சமதளப் பரப்பில் சரியான அளவும் நல்ல பேட்களும் கொண்ட கேன்வாஸ் அல்லது ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் போட்டு நடக்க வேண்டும்	135
8 கி.மீ. வேகத்தில் மெல்லோட்டம்	"	240
மெதுவாக நீந்துதல்		200
சைக்கிள் ஓட்டுதல்	நாற்பது வயதைக் கடந்தவர் எனில் முதுகை வளைத்து ஓட்டும் ஸ்போர்ட்ஸ் சைக்கிள் பயன்படுத்த வேண்டாம்	200
டென்னிஸ்		200 - 270





ஒரு ஆண், 57.5 கிலோ கிராம் எடை இருக்க வேண்டும். இதே உயரம் கொண்ட ஒரு பெண் 55.5 கிலோ எடை இருக்க வேண்டும். உங்களது சராசரி எடையை விட, பத்து விழுக்காடு அதிகமிருந்தால், நீங்கள் சதை போட்டு விட்டீர்கள் என்று அர்த்தம். இருபது விழுக்காடு அதிகமிருந்தால் நீங்கள் குண்டானவர். உங்களுக்குச் சர்க்கரை நோய்க்கான வாய்ப்பு பல மடங்கு அதிகரித்து விடுகிறது. உடனடியாக நீங்கள் உணவு முறையில் மாற்றங்கள் கொண்டு வந்தாக வேண்டும். குண்டானவர்களுக்கு மட்டுமல்ல, சர்க்கரை நோயாளிகளுக்கும் தேவைப்படும் உணவு முறை மாற்றத்தைத் தெரிந்து கொள்ளலாம், வாருங்கள்.

ஊக்கம் தரும் உணவு முறை!

அரிசி உணவை ஒரு வேளை மட்டும் எடுத்துக் கொள்வது நல்லது. அது மதிய உணவென்றால், இரண்டு முதல் அதிக பட்சம் மூன்று கரண்டிகள் எடுத்துக் கொள்ளுங்கள்.. கோதுமை, கேழ்வரகு போன்றவைதான் அதிகம் சேர்க்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எந்த வகை தானியம் என்பதை விட, எத்தனைக் குறைந்த அளவு உட்கொள்கிறோம் என்பதுதான் முக்கியம். முக்கியமாக குறிப்பிட்ட நேரத்தில், தவறாமல் சாப்பிட வேண்டும். உங்கள் உணவுமுறை, உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருவதாக இருக்க வேண்டும். உணவுமுறையே, மருந்து சாப்பிடும் உணர்வை ஏற்படுத்தி விடக் கூடாது.


நீங்கள் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டியவை

காய்கறிகள்: வாழைக்காய் - உருளைக்கிழங்கு - பீட்ரூட் - காரட் - கருணைக்கிழங்கு - சேப்பங் கிழங்கு

பழங்கள்: வாழைப்பழம் - பலாப்பழம் - சப்போட்டா - திராட்சை - மாம்பழம் - கொட்டை பருப்பு - உலர்ந்த பழ வகைகள்.

அசைவ உணவு : கொழுப்பு - ஆட்டுக்கறி - ஈரல் - சிறுநீரகம் - மூளை - இருதயம் - முட்டை மஞ்சள் கரு - தலைக்கறி - கருவாடு போன்றவை.





பானங்கள்: ஹார்லிக்ஸ் - போர்ன்விட்டா - பூஸ்ட் - விவா - காம்ப்ளான் - தேன் - சர்பத் - மது வகைகள்

* கேக் - சாக்லேட் - ஐஸ்கிரீம் - வெல்லம் - சர்க்கரை - இனிப்புகள் - பாதாம் பருப்பு - முந்திரி போன்றவைகள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியவை.

தாராளமாய் ஜமாய்க்கலாம்

காய்கறிகள்: கீரை வகை - வாழைப் பூ - புடலங்காய் - பீர்க்கங்காய் - முட்டைக் கோஸ் - வாழைத்தண்டு - கோவைக்காய் - தக்காளி - வெள்ளரிக்காய் - முள்ளங்கி - காராமணி - வெங்காயம் - கொத்தமல்லி - கறிவேப்பிலை - இஞ்சி - பூண்டு - புதினா - சுரைக்காய் - பாகற்காய் - வெண்டைக்காய் - கத்தரிக்காய்.

பானங்கள்: பால் - காபி - டீ (சர்க்கரை இல்லாமல்) சூப் - தக்காளி அல்லது எலுமிச்சை ஜூஸ் (சர்க்கரை இல்லாமல்) நீர்மோர் - சோடா.

உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சியோடு இன்சுலின் எடுத்துக் கொள்ளலாமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம் இல்லையா?

இன்சுலின் ஊசி யாருக்கு அவசியம்?

டைப் 1 பிரிவினருக்கு மாத்திரைகள் வேலை செய்யாது. இவர்கள் இன்சுலினை நம்பி வாழ்வர்கள். முதலில் இன்சுலின் எடுத்துக் கொள்வது ஒரு தண்டனையல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இப்போது இன்சுலின் போட்டுக் கொள்வது இனிமையாக்கப்பட்டுள்ளது. சட்டைப் பையில் மாட்டிக் கொள்ளும் பேனா வடிவில் இன்சுலின் வந்து விட்டது! நமக்கான அளவை இதில் செட் செய்து வைத்துக் கொண்டு, மிக எளிதாக போட்டுக் கொள்ளலாம். விரைவில் வாயில் ஸ்பிரே செய்து கொள்ளும் இன்சுலின் வர இருக்கிறது.

கர்ப்ப கால சர்க்கரை நோயாளி, மாத்திரைகள் எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்சுலின்தான் குழந்தையைக் காக்கும். டைப் 2 வகையினருக்கு இன்சுலின் சுரப்பது குறையும்போது, மாத்திரைகள் வேலை செய்வதில்லை. இதனால் இன்சுலின் ஊசி அவசியமாகிறது. பொதுவாக சர்க்கரை நோய்

ஆரம்பித்து ஐந்து வருடங்களில் இந்த நிலை வந்து விடுகிறது. நம் உடலில் உள்ள இன்சுலினைப் பாதுகாத்துக் கொள்ள, விரைந்து இன்சுலின் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. இன்சுலின் ஊசிகள், நம் உடலில் உள்ள இன்சுலினைச் சேமித்து வைக்க உதவுகின்றன.


சர்க்கரை நோய்க்கு லேட்டஸ்ட் மருத்துவம்!

ஜீன் டெக்னாலஜி மூலம் கணையத்திலுள்ள லாங்கர்ஹான் செல்களை ஊக்குவித்து, அதிக இன்சுலினை சுரக்கச் செய்தல், அல்லது அந்த செல்களையே மாற்றி அமைத்தல் போன்ற பல நவீன ஆராய்ச்சிகள், சர்க்கரை நோயை நிரந்தரமாக ஒழிக்கும் நோக்கத்தோடு நடைபெற்று வந்தாலும், ''வாயைக் கட்டுப்படுத்தினால் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்'' என்பதுதான் சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்க சிறந்த வழி.

தொகுப்பு : **ஜெய்**

கார்ட்டூன்கள் : **கதிரவன்**





ஓவியம்: பி.ஆர். ராஜன்

ஒரு மேன்ஷன் அறையிலிருந்து...

பெ. அய்யனார்

இந்த அறையை நோக்கி
பூமியின் எங்கிருந்தும்
ஒரு கடிதம்கூட எட்டிப் பார்த்ததில்லை
இந்த அறைக்கு
நண்பர் என்று சொன்ன
எந்த மனிதரின் காலடியும் பட்டதில்லை.

பறவையின் குரல்
நாயின் குரல்
வானின் குரல்
எதுவும் தொட்டதில்லை.

சூரியனின் கதிருக்குக்
காத்திருந்து காத்திருந்து
மனமொடிந்ததுதான் மிச்சம்

காற்று மட்டும்
அறியாமல் வந்துவிடுகிறது
உயிரைக் காப்பாற்றுகிறது.

அறையும் நானும்
காத்திருக்கிறோம் -
அறிமுகமான
மனிதமுகம் வேண்டி!

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. வடசென்னையைச் சேர்ந்த அந்த பிஸினஸ்மேன் வீட்டுக்கு, வேலை கேட்டு ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி வந்தாள். அவரது நாகரிகமான பேச்சு, நடந்து கொண்ட முறை எல்லாம் அந்த பிசினஸ் மேனுக்குப் பிடித்தது. உடனே, தன் நிறுவனத்தில் வேலை கொடுத்தார். அடுத்த சில நாட்களில், குறித்த நேரத்துக்கு வருவது, சகஜமாக அனைவரிடமும் பழகுவது, தனக்குரிய வேலைகளை ஒழுங்காகப் பார்ப்பது என்று அவள் காண்பித்த டுபாக்கூர் வேலையில் அலுவலகமே வாய்பிளந்தது!

வேலைக்குச் சேர்ந்த நாலாவது நாள் ஆபீஸ் வரும்போது பளிச்சென்று உடை அணிந்திருந்தாள். அன்று தனது பிறந்த நாள் என்று சொல்லி, எல்லோருக்கும் இனிப்பு வழங்கினாள். கம்பெனி முதலாளியின் அறைக்குச் சென்றாள். அவருக்குத் தனது பிறந்த நாள் பற்றிச் சொல்லி, தன்னுடைய கைப்பையிலிருந்து சிறு டப்பாவை எடுத்தாள். "பிறந்த நாளுக்காக வீட்டில் செய்த பாயசம்" என்று நீட்டினாள்.

முதலாளி சந்தோஷமாய் பாயசத்தைச் சாப்பிட்ட சில நிமிடங்களில் மயக்கமடைந்து மேஜை மீது சரிய, அந்தப் பெண்மணி, அவர் அணிந்திருந்த விலை உயர்ந்த மோதிரத்தைக் கழற்றினாள். மேஜை டிராயரைத் திறந்து, ரூபாய் கட்டுக்களை எடுத்துக் கொண்டாள். அடுத்த சில விநாடிகளில் ஸ்பாட்டிலிருந்து ஜூட்!

ரொம்ப நேரம் கழித்து, முதலாளியின் அறைக்குள் நுழைந்த இன்னொரு ஊழியர், மேஜைமீது முதலாளி சரிந்து கிடப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார். பரபரப்பு. போலீசுக்குத் தகவல் போனது. விசாரணையின் இறுதியில் மயக்க மருந்தை பாயசத்தில் கலந்து, முதலாளிக்குக் கொடுத்துவிட்டு, அந்தப் பெண்மணி, நகை மற்றும் பணத்துடன் கம்பி நீட்டி விட்டது தெரிய வந்தது.

தென் சென்னையில் மத்திய தரக் குடும்பங்கள் வசிக்கும் பகுதி. மத்தியான நேரம். வீட்டில் மற்றவர்கள் வேலைக்குப் போய்விட, ஒரு முதிய பெண்மணி மட்டும் தனியாக இருந்தார். ரொம்ப அன்பொழுகப் பேசி, வீட்டுக்குள் வருகிறாள் ஒரு பெண். பேச்சின் இடையே, அந்த முதிய பெண்மணிக்கு டயாபடிஸ் இருப்பதைத் தெரிந்து கொண்டு, "எனக்குத் தெரிந்தவர் ஒருவர் ஒரு பவுடர் கொடுக்கிறார். அதைப் பாகற்காய் ஜூஸில் கலந்து, மூன்று நாள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், டயாபடிஸ் கட்டுப்பாட்டுக்கு வருகிறது. அதை நான் வாங்கித் தருகிறேன். நீங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்! நிச்சயம் பலன் தரும்" என்று சொல்ல, முதிய பெண்மணியும் நம்பி விடுகிறார்.

மறுநாள் அதே நேரத்தில் மீண்டும் வருகிறாள் அந்தப் பெண். கையோடு பாகற்காய் மற்றும் டயாபடிஸ் மருந்து பாக்கெட்!

சந்தோஷமாய் அந்தப் பெண்ணை வரவேற்றார் முதிய பெண்மணி. நேரே அந்த வீட்டின் சமையல் அறைக்குப் போய், உரிமையோடு மிக்ஸியை எடுத்து, பாகற்காயை நறுக்கிப் போட்டு ஜூஸ் தயாரித்து, அதில் டயாபடிஸ் மருந்தைக் கலந்து, ஒரு கிளாஸில் ஊற்றிக் கொடுத்தாள் அந்தப் பெண்.

"கவலைப்படாதீங்க, மருந்துக்கு நல்ல பலன் இருக்கும்" என்று ஊக்க வார்த்தைகள் வேறு!


பாகற்காய் ஜூஸ் சாப்பிட்ட சில நிமிடங்களில், வழக்கம்போல மயக்கம். நகை மற்றும் ரொக்கம் அபேஸ்!

இரண்டு சம்பவங்களும் வெவ்வேறு சமயங்களில், வெவ்வேறு இடங்களில் நடந்தவை என்றாலும் கூட, இரண்டு திருட்டுகளையும்

செய்தவர் ஒரே பெண்மணியாக இருக்கலாம் என்கிறது சென்னை மாநகர போலீஸ்!

இது தவிர ஜி.ஹெச் போன்ற மருத்துவமனைகளில், இன்னொரு நூதனமான திருட்டும் நடக்கிறது. எக்ஸ்ரே, ஸ்கேனிங் போன்றவை எடுப்பதற்காகக் காத்திருக்கும் பொதுமக்களிடம், ஆஸ்பத்திரியிலேயே வேலை பார்க்கும் நர்ஸ் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார் அந்தப் பெண். எக்ஸ்ரே, ஸ்கேனிங் சமயம் நகைகள் போட்டுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, அவர்கள் போட்டிருக்கும் நகைகளை வாங்கி ஒரு பையில் போட்டு, வைத்துவிட்டு, பரிசோதனை முடிந்தவுடன் வாங்கிக் கொள்ளும்படிச் சொல்லி விடுவார். ஆனால், பரிசோதனை முடிந்து வந்து பார்த்தால், பெண்மணி மாயமாய் மறைந்து விட்டிருப்பார்.

இப்படி வேலை காண்பித்துக் கொண்டிருக்கும் அந்த மாயப் பெண்ணை இன்னும் கண்டுபிடித்தபாடில்லை. உங்கள் பகுதியில் கூட அவள் இருக்கலாம். உங்களில் சிலரிடம் கூட அவள் கைவரிசையைக் காட்டியிருக்கலாம். கொஞ்சமல்ல, ரொம்பவே உஷாராக இருங்கள்!



- மௌலி

மாயப்பெண்: மயக்கும் வேலை; வலை விரிக்கும் போலீஸ்!

வீட்டின் மண் திண்ணையில் முழங்காலைக் கட்டியபடி அமர்ந்திருந்தார் கருப்பையா ஆச்சாரி. எதிரே அவர் மனைவி கருப்பாயி. கண்ணில் நீர்த் திவலைகள் விழ, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். பண்டம் பாத்திரங்கள் மூட்டை முடிச்சுகளாய்க் கட்டப்பட்டு, மூலையில் வைக்கப்பட்டிருந்தன. மழை அப்பொழுது தான் பெய்து ஓய்ந்திருந்தது. வீதியெல்லாம் ஒரே சேறும் சக்தியும்.



"அந்த மனுஷங்கிட்ட போய் கொஞ்ச நான் தவணை கேக்கப்புடாதா?" கருப்பாயிதான் முதலில் ஆரம்பித்தாள்.

"என்னடி பேசற? அந்த ஆளுதான் அன்னைக்கே கறாரா சொல்லிப்புட்டானே" சீறினார் கருப்பையா.

"அப்ப நம்ம புள்ளை கிட்டயாவது..." இழுத்தாள் கருப்பாயி.

"அதுக்குத் தூக்குப் போட்டுச் சாவலாம். நமக்கு ரோசம் வேண்டாம்?"


அதற்குமேல் பேச தைரியம் இல்லாமல் அமைதியாகி விட்டான் கருப்பாயி. நேரம் செல்லச் செல்ல, இருவர் மனதும் படபடத்துக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரத்தில் வீட்டை வாங்கியவன் வந்துவிடுவான். எங்கு தங்குவது, யாரிடம் போய் ஒண்ட இடங்கேட்பது? அதுவும் கம்பீரமாய் வாழ்ந்த கருப்பையா ஆச்சாரிக்கா இந்த நிலைமை?

கோவில் தேர்ச்சக்கரம் போடுவதிலிருந்து, குடியானவன் வீட்டு அகப்பை செய்வதுவரை, கருப்பையா ஆச்சாரி பிரபலம். அந்த ஊரில் பல ஆச்சாரிமார்கள் இருந்தாலும், இவருக்குத்தான் தலைக்கட்டு. தொழில் சுத்தம், கைசுத்தம் என ஓடிக் கொண்டிருந்த அவரது அமைதியான வாழ்க்கை, இப்படி ஆகியிருக்கக் கூடாது.

மகன் முத்து, மகள் காத்தாயி என அளவான குடும்பம். முத்துவுக்குப் படிப்பு

◆ இராம.சுந்தரபாண்டியன் ◆

மண்டையில் ஏறவில்லை. ஆனாலும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து, தன் குலத் தொழிலில் ஈடுபட்டு, தன்னால் முடிந் ததைச் சம்பாதிக்கவே செய்தான்.



அது என்னவோ தெரியவில்லை, கருப்பையாவுக்கும் மனைவி கருப்பாயிக்கும், மகன் முத்துவைக் காட்டிலும், மகள் காத்தாயி மீது தான் அதிகக் கரிசனம். துணிமணி வாங்கித் தருவதிலிருந்து, அயலூர் விழாக்களுக்கு அழைத்துச் செல்வது வரை, காத்தாயிக்கே அதிர்ஷ் 'டம். தலை பின்னி விடுவது, சாப்பாடு ஊட்டி விடுவது, பாத்ரூமில் குளிக்கும் பொழுது டவலை எடுத்துக் கொண்டு ஓடுவது, எல்லாமே கருப்பை யாவுக்குச் சந்தோஷமான விஷயங்கள்.

இதைப் பற்றியெல்லாம் முத்து கவலைப்பட வில்லை. தன் தொழிலிலேயே கவனம் செலுத்தி னான். ஓரளவு சேமிப்பு கைவசம் வந்ததும், தன் தகுதிக்குத் தகுந்த பெண்ணாய்ப் பார்த்து, திருமணம் செய்து கொண்டு ஒதுங்கிக் கொண்டான். தனியாக வீடு பார்த்து, தனிக்குடித்தனமும் போய் விட்டான்.

காத்தாயிக்கும் திருமணப் பேச்சு வந்தது. அவள் ஓரளவு படித்த பெண் என்பதால், படித்த மாப்பிள்ளையாகப் பார்த்து, முடித்து வைத்தார்கள். இருந்த வீட்டையும் காத்தாயிக்கே எழுதி வைக்க முடிவு செய்தார் கருப்பையா. அங்குதான் பிரச்னை வந்தது.

முதன் முறையாக தைரியசாலியானான் முத்து. "பொதுவா குடும்பச் சொத்து ஆண் வாரிசுக்குத் தான் அப்படீங்கிற பழைய காலத்து ஆள் இல்ல நான். ஆனா, இருக்கிறதை இரண்டு பேருக்கும் பிரிச்சுக் கொடுக்கிறதுதான் நியாயமாகப்படுது" எனக் கேட்டான்.

"டேய்... முத்து, வந்த மாப்பிள்ளை படிச்சவரு. நம்மள மாதிரி உளியையும் சுத்தியையும் நம்பி பொழப்பு நடத்தல. மேலு நோவாமலே நம்மவிட பல மடங்கு சம்பாதிக்கிறார்.

வெச்சு செடி முள்ளாணா...

நம்ம பொண்ணை ராணி மாதிரி வச்சுக்கு வாரு. அதுக்கு இந்த வீட்டைக் கூட கொடுக்கலைன்னா ஒரு மருவாதி இருக்காது" அழுத்தமாகச் சொன்னார் கருப்பையா.

"அப்ப நான் நடுத்தெருவில நிக்கிறதா?"

"அட அதுக்கில்லப்பா. நீ ஆம்பிள. எப்படியும் பொழச்சிப்ப. ஆனா, நம்ம பொண்ணு..." கூறிமுடிப்பதற்குள் முத்து குறுக்கிட்டான்,

"தெரியும்ப்பா. சின்ன வயசில இருந்தே என்னை பாரா முகமாகத்தான் வளர்த்தீங்க. ஆனாலும் மனசுக்குள்ள மகன்கிற பாசம் இருக்கும்னு நெனச்சேன். ஆனா, மொத்தமா கழிச்சுக் கட்டிடுவீங்கனு நெனைக்கல. பரவாயில்லை. இத்தோடு நம்ம உறவு அறுந்து போச்சு" என்று கூறி வேகமாக வெளியேறினான். கருப்பாயி, மகள் காத்தாயி அனைவரும் விக்கித்து நின்றனர்.

முப்பதுக்கு இருபது கொண்ட சின்ன ஓட்டு வீடு. பின்னால் கிணற்றோடு கூடிய தோட்டம். அதில் ஒரு புளிய மரம். இது கருப்பையா சுயமாகச் சம்பாதித்த சொத்து. இந்தச் சொற்ப சொத்துக்குத்தான் இந்தப் பிரச்னை.

முத்து, வெட்டிக் கொண்டு போனது இருவருக்கும் பெரும் மன வருத்தத்தை கொடுத்திருந்தாலும், நாளடைவில் அதை மறந்தே போய்விட்டனர்.

காத்தாயிருக்கு வந்த மாப்பிள்ளை, மாமனார் வீடு தனக்குத்தான் என்று உறுதியானதும், அங்கேயே தங்கி வீட்டோடு மாப்பிள்ளையாகிவிட்டான். சில நாட்கள் வேலைக்குப் போய் வந்தவன், வீட்டிலேயே முடங்க ஆரம்பித்தான். பிறகுதான் தெரிந்தது, அவன் ஒரு சிறிய கம்பெனியில் தற்காலிக ஊழியராக வேலை பார்த்து வந்தான் என்பது.

நேரத்துக்குச் சாப்பாடு. நிம்மதியான தூக்கம், என அவன் மாமனார் வீட்டில் சொகுசு கண்டது, காத்தாயிக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.

"ஒண்ணு வேலை தேடுங்க. இல்லை நாம இங்கே இருக்க வேண்டாம். பார்க்கிறவங்க அசிங்கமா நினைக்கிறாங்க."

காத்தாயி பக்குவமாக எடுத்துச் சொன்னாள்.

"என்னை என்ன பண்ணச் சொல்றே? போற இடமெல்லாம் வெளங்க மாட்டுங்கிது. சரி, சொந்தமா தொழில் பண்ணலாம்னா, கைல பசை இல்லை." வெடுக்கென்று சொன்னான் மாரிமுத்து.

"அதுக்கு ஆக வேண்டியதையாவது யோசிங்க."

"அதுக்கு ஒரு வழிதான் இருக்கு."

"பிரமிக்க வைத்த மனுஷி!"

"மனிதனின் கசடுகளை, அழுக்குகளை, மேன்மைகளை வெளியே எடுத்து, அவனுக்கும் மற்றவர்களுக்கும், காட்டுபவனே கலைஞன். ஆண்கள் நிச்சயமாகக் கெட்டவர்கள் இல்லை. ஆனால் கெட்டவர்களாக இருக்கிறோம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான நட்பு, நம் சமூகத்தில் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆண்களுக்கென ஒரு வாழ்க்கை முறையையும் பெண்களுக்கென ஒரு வாழ்க்கை முறையையும் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். குற்றங்களிலிருந்தே மத உணர்வு வருகிறது. தனிப்பட்ட முறையில் தாய்மையை அனுபவித்திருக்கும் நாம், சமூகமாக தாய்மையை அனுபவிக்கவில்லை. காரணம் பெண்கள் சமூக வாழ்வில் இன்னும் பங்கேற்கவில்லை. ஒரு பெண் எழுதி, மற்றொரு பெண் பதிப்பித்து, இந்தப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. மேன்மேலும் இது போன்ற சமூக நிகழ்வுகள் நிகழவேண்டும்."

— வம்சி புக்ஸ் நிறுவனத்தின் சார்பில் நடந்த திலகவதியின் குறுநாவல்கள் தொகுப்பு வெளியீட்டு விழாவில், இப்படிச் சொன்னார் எழுத்தாளர் தமிழ்ச்செல்வன்.

நூலை வெளியிட்ட இயக்குநர் பாலுமகேந்திரா, "என்னை பிரமிக்க வைத்த மனுஷி திலகவதி. இவ்வளவு பணிகளுக்கிடையேயும் அடர்த்தியாக, நுணுக்கமாக எப்படி வாசிக்க முடிகிறது? அவருடைய படைப்புகளைப் படிக்கும்போது ஒருவகையான தீவிரத்தை உணர்ந்திருக்கிறேன். கூர்மைப்படுத்தப்பட்ட நுண்ணுணர்வுகள் ஒரு படைப்பிற்கு அத்தியாவசியத்

"என்னது?"

"ஒண்ணுமில்லை. இந்த வீட்டை வித்திட்டு கெடைக்கிற பணத்தை வைச்சு, ஏதாவது தொழில் பண்ணலாம்னு பார்க்கிறேன்" என்று இழுத்தான் மெதுவாக. காத்தாயிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அப்பாவின் சுய சம்பாத்தியச் சொத்து. ஏதோ புண்ணியத்துக்கு நமக்குக் கொடுத்தாங்க. அதுவும் அவங்க காலம் வரைக்கும் அதை ஒண்ணும் செய்யக் கூடாது. அவர்களுக்குப் பிறகுதான் நாம் ஸ்வாதீனம் கொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாமலே இப்படி யோசிக்கிறாரே' என்று மனதுக்குள் புழுங்கிக் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன. மாரிமுத்து காத்தாயியைக் கொஞ்சம் கொஞ்சமாய் மசிய வைத்து விட்டான். வீடு கைமாறியது. கருப்பையாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பாசமாக வளர்த்த மகளும், மருமகனும் இப்படிச் செய்து விட்டார்களே, என்று நீங்காத ரணம் அவர் மனத்தில் ஆழமாகவே பதிந்து விட்டது. வீட்டை விற்ற கையோடு, காத்தாயியும், மாரிமுத்துவும் வேறு ஊருக்குப் போய் விட்டார்கள்.


வீட்டை வாங்கிய ஆள், ஒரு மாதம் கெடு வைத்திருந்தான். அதன் இறுதி நாள் இன்று. இன்னும் சிறிது நேரத்தில் வீட்டை வாங்கியவன் வந்து விடுவான். வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.

இனியும் யோசிக்க வழி இல்லை. விழியில் வழிந்த நீரை கையால் எடுத்து சுண்டி விட்டு எழுந்தார் கருப்பையா. பழங்காலத்து டிரங்குப் பெட்டியைத் தலையிலும், ஒரு கோணியை கையிலும் எடுத்துக் கொண்டார். வீட்டைப் பூட்டி சாவியைப் பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்து விட்டு, தெருவில் நடக்க ஆரம்பித்தனர்.

மழை பெய்து தெருவெல்லாம் சேறும் சகதியுமாக இருந்ததால், மக்கள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை. மாலைப் பொழுது வேறு. யார் கண்ணிலும் படுவதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விட்டது. சோகத்தையே சுமைகளாக்கிச் சென்ற அந்தத் தம்பதிகள், மாரியம்மன் கோவிலைத் தாண்டி, ரேஷன் கடையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

மூன்றடி உயரத்தில் சின்ன உருவம் ஒன்று, அவர்களை வழி மறித்து பல்லைக் காட்டி நின்றது. அவர்கள் நெருங்கியவுடன், அந்தச் சின்ன உருவம் கருப்பையாவின் கையைப் பற்றி, "வா, தாத்தா நம்ம வீட்டுக்கு" என்று கூறியபடி இழுத்தது. சற்றுத் தூரத்தில் மகன் முத்துவும் மருமகளும்!

தேவை. அது சில சமயம் அவர்களின் அன்றாட வாழ்வையும் பாதித்து விடுகிறது. பெண்களின் வாழ்வு பற்றி, நிலைபற்றி, குறைபற்றி, மேன்மை பற்றி அவர்களது அக்கறை, வரிக்கு வரி நூலில் தென்படுகிறது" என்றார்.



• விழாவில் தமிழ்ச் செல்வன், பி.சி. ஸ்ரீராம், பாலு மகேந்திரா, அபுல் கலாம் ஆசாத், திலகவதி

"எந்த இலக்கிய வாதியும், தனது அனுபவங்களின் பாதிப்பின்றி இலக்கியம் படைக்க முடியாது என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை" என்று ஏற்புரையில் குறிப்பிட்ட திலகவதி, "உலகின் மக்கள் தொகையில் பாதியாய் இருக்கிற பெண்களின் பிரச்னைகளைத் தொட்டு நான் எழுதுவது யாருடைய அனுதாபத்தையும் கோரியல்ல. அந்த ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக்குரலாக இலக்கியம் ஒலிக்க வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன்" என்றார்.

- அப்பு



• நாஞ்சில் நாடன்



• கல்யாண்ஜி



• இளையபாரதி



• அசோகமித்ரன்

படம் : சரோ



• அழகிய பெரியவன்



• மனுஷ்யபுத்ரன்

பிட்டா படிங்க!

* 'யுத்தங்களுக்கிடையே' என்ற நாவலை எழுதி வருகிறார் அசோகமித்ரன். முதல், இரண்டாம் உலகப்போர் காலகட்டங்களில், தமக்கு நேர்ந்த அனுபவங் களை இதில் சொல்லப் போகிறாராம்.

* 'உறக்கமற்ற மழைத்துளி' என்ற தலைப்பில் கவிதைத் தொகுதி ஒன்றை கொண்டுவர இருக்கிறார் கல்யாண்ஜி.

* புதுமைப்பித்தன் கதை ஒன்றை சினிமாவாகவும், கலைஞரின் கதைகளை டீ.வி. தொடராகவும் இயக்கும் முயற்சியில் இருக்கிறார் இளையபாரதி.

* இந்த ஆண்டுக்கான 'கவிதை கணம்' விருதைப் பெற்றிருக்கிறார் கலாப்ரியா.

* நாஞ்சில் நாடனின் சிறுகதைகள் முழுவதுமடங்கிய தொகுப்பு விரைவில் வெளிவர இருக்கிறது.

* சாகித்ய அகாடமியின் இளம் எழுத்தாளர்களுக்கான பயணத்திட் டத்தின் கீழ், மும்பை மற்றும் அஜந்தா, எல்லோராவுக்குச் சென்று வந்திருக் கிறார் அழகிய பெரியவன்.

* இமேஜ் அண்ட் இம்ப்ரஷன் என்ற டிசைனிங் யூனிட்டைத் துவக்கி யிருக்கிறார் மனுஷ்யபுத்ரன். வெளிநாட்டிலிருந்து வரும் சிறுபத்திரிகைகளை இங்கு பதிப்பித்து விநியோகித்து வருகிறார்.

— எக்ஜி

பாப் - புயல் மடோனா தனது 'ரீ-இன்வென்ஷன்' - உலக சுற்றுப்பயணத்தை மே- இறுதியில் லாஸ் - ஏஞ்சல்ஸில் துவங்கியுள்ளார். இந்த டூரில் 9.5 கோடி மக்கள் கூடுவார்கள்; 120 மில்லியன் டாலர் வசூலாகும் என்று கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் லாஸ் - ஏஞ்சல்ஸில் கூடிய கூட்டம் அதையும் தாண்டும் என்கிறது. www.nme.com ரசிகர்களிடம் அதிக வரவேற்பு மடோனாவின் அமெரிக்கப் போர் பற்றிய 'American's Life' ஆல்பத்திற்குத்தானாம்.

நம்ம பிரதமர் எப்ப உலகப் பயணம் கிளம்புறாரு?



• மடோனா

ஹாரி பாட்டரைப் பற்றி செய்திகளை அள்ளிக் கொடுப்பதற்கென்றே இயங்கும் தளம் hpana.com (Harry Potter Automatic News Aggregator). ஸ்பைடர் மேனின் முதல் நாள் கலெக்ஷனை ($39.4 மில்லியன்) புதிய ஹாரி பாட்டர் முறியடித்து விட்டதாம். ($41.2 மில்லியன்) ஹாரி பாட்டர் ரசிகர்கள் இஞ்ச் இஞ்சாக ரசிக்கக் கூடிய தளம் இது!

(தமிழில் 'ஹாரி பாட்டரை' இராம நாராயணன் ரீமேக் பண்ணலாமே!?)

டென்னிஸ் ரசிகர்கள் தற்போது வாய் வலிக்க உச்சரிக்கும் பெயர் பிரெஞ்ச் ஓப்பன் சாம்பியன் காஸ்டன் காடியோ பெயரைத்தான். காஸ்டனின் பக்தர்கள் அவருக்கென்று உருவாக்கியுள்ள தளம் melumania.4t.com. காஸ்டனின் டென்னிஸ் சாதனைகளிலிருந்து, ஹேர் ஸ்டைல் வரை சிலாகித்து தகவல் அளிக்கின்றனர்.

(இந்த வாரம் எல்லாத் தளங்களிலும் காஸ்டன் காத்து வீசுதுங்கோ!)

ஜோக்: பரிட்சையையும், கேர்ள் ஃப்ரெண்ட்சையும் ஒப்பிடுக?

1. எப்போதும் அதிகமான கேள்விகள்
2. புரிந்து கொள்ளுதல் கடினம்
3. அதிக விளக்கம் தேவைப்படும்
4. முடிவு எப்போதும் 'ஃபெயில்' தான்.

- முகில்

• ஹாரி பாட்டர்...

ஸ்பைடர் மேனை வென்ற ஹாரி!



ஜாலி SMS :

ஓர் ஆண் திருமண நிச்சயத்திற்குப் பின் Superman.
கல்யாணத்திற்குப் பின் Gentleman.
10 வருடங்களுக்குப் பின் Watchman.
20 வருடங்களுக்குப் பின் Doberman!

மேஷம்: உங்க ராசிக்கான கிரகங்கள் கூட்டணியா வந்து உங்களுக்கு ஆதரவு தர்றதால, சகல காரியங்களிலேயும் உங்களுக்கு வெற்றிதான். நடுவில ஒரு சில பிரச்னைகள் தலை தூக்கினாலும், உங்க துணிவும் தன்னம்பிக்கையும் எல்லாத்தையும் சமாளிக்கும். உத்தியோகத்தில நிதானம் ரொம்ப அவசியம். யந்திரம், கமிஷன், டிராவல்ஸ், துறைகள் லாபம் தரும். குடும்பத்தில சுப காரியங்கள் கூடி வரும். பெண்களுக்கும் மாணவர்களுக்கும் அனுகூலமான நேரம்.

ரிஷபம்: இந்த ராசிக் காரங்க கொஞ்ச உஷாரா இருந்தா எதிர்பாராத செலவு, அலைச்சல்னு வரக்கூடிய கஷ்டங்களை தவிர்க்கலாம். உத்தியோகத்தில நிதானமான போக்கு அவசியம். புதிய முயற்சியைத் தள்ளிப் போடுங்க. ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், அலங்காரப் பொருள்கள் வியாபாரங்கள்ல ஆதாயம் கூடும். குடும்பத்தில கொஞ்சம் செலவு காத்திருக்கு. பணம், ஜாமீன் விஷயங்கள்ல எச்சரிக்கையா இருங்க. பெண்கள் ஆரோக்கியத்தில கவனமா இருங்க.

நடக்குமென்பார்,

கங்குலிக்குப் (கடகம்) புதிய முயற்சிகள் இப்ப வேண்டாமாம்.



மிதுனம்: உங்க ராசியில சனியும் சூரியனும் சேர்ந்து ஜாகிங் போறதால, சிறு பிரச்னைகள் வந்து மறையும். பேச்சில நிதானம் ரொம்ப அவசியம். எங்கேயும் கடுமையா நடக்காதீங்க. உத்தியோகத்தில அனுகூலமான திருப்பம் காத்திருக்கு. கமிஷன், காண்ட்ராக்ட்ஸ், சினிமா, சங்கீதம் துறைகள்ல இருக்கறவங்களுக்கு எதிர்பாராத வேகத்தில முன்னேற்றம் காணும். குடும்பத்தில சுப காரியம் நிறைவேறும்.

கடகம்: உங்க காட்டில மழை பிய்ச்சிக்கிட்டு கொட்டப் போவுதுங்க. தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு கூடி, திட்டம் போட்டபடி எல்லாக் காரியங்களும் தடங்கலில்லாம நடக்கும். பண நடமாட்டமும் தாராளமாகும். உத்தியோகத்தில புதிய முயற்சி இப்போ வேண்டாம். எலக்ட்ரானிக்ஸ், மருத்துவம், கெமிக்கல், ஜவுளி துறைகள்ல லாபம் கொட்டும். ஏற்றுமதி இறக்குமதி தொழில் எதிர்பாராத லாபம் அடையும். குடும்பத்தில உற்சாகம், உல்லாசம் கூடிடும். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கையால சந்தோஷம் காத்திருக்கு.

சிம்மம்: ஒவ்வொரு திருப்பமும் உங்களுக்கு அனுகூலம் தரக் காத்திருக்கு. கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி துறைகள்ல எதிர்பாராத முன்னேற்றம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கும் புதிய திருப்பம் காத்திருக்கு. உத்தியோகத்திலேயும், அடிக்கிற காத்தெல்லாம் அதிர்ஷ்டக் காத்தா இருக்கும். பூர்வீக சொத்து வந்து குடும்பத்தில சந்தோஷம் கூடும். பெண்களுக்கு எல்லா வகையிலும் நல்ல வாரம்.

கன்னி: வெற்றி தேவதை உங்க விரலசைப்புக்குக் காத்திருக்கற நேரம். புதுப்புது அறிமுகங்களும், சரளமான பணவசதியும் ஏற்படும். உத்தியோகத்தில பதவி உயர்வு, இட மாற்றம், வெளியூர்/ வெளிநாடு பயணம் அமையும். சினிமா, நாடகம், நாட்டியம், பத்திரிகை, அச்சகம் தொழில்கள் அனுகூலம் பெறும். குடும்பத்தில இதுவரை இருந்த

குழப்பங்கள் மறைஞ்சு குதூகலம் நிறையும். பெண்களுக்கு ஆடை ஆபரணம் சேரும்.

துலாம் : உங்க வழியில குறுக்கே நின்னவங்க எல்லாம் விலகி வழி விட்டுப் போயிடுவாங்க. ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், பொன், வெள்ளி, ஆபரணத் தொழில்கள் அதிக லாபம் பெறும். தோல் பொருள், உலோக வகை தொழில்கள் நன்மை பெறும். குடும்பத்தில குதூகலம் நிலவும். திருமணமாகாதவங்களுக்கு திருமண யோகம் கூடி வரும். பெண்கள் எண்ணிய தெல்லாம் நிறைவேறும்.

விருச்சிகம்: எடுத்த காரியங்கள்ல எல்லாம் தடங்கல், எதிர்ப்புன்னு வந்தாலும் உடனே நிவர்த்தியாயிடும். நிதானம் அவசியம். காண்ட்ராக்ட், கமிஷன், உலோக வகை, துறைகள்ல சுமாரான முன்னேற்றம்தான் ஏற்படும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விலகும். பெண்களுக்கு எதிர்பாராத பண வரவும், உற்சாகமும் ஏற்படும். மாணவர்களுக்கு முன்னேற்ற மான நேரம்.

தனுசு: எதிர்ப்புகளும், எதிரிகளும் நீங்க வரும்போதே பதுங்கி காணாமப் போயிடுவாங்க. வி.ஐ.பிக்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் குழப் பங்கள் மறையும். குடும்பத்தில் சுப காரிய முயற்சிகள் வெற்றி பெறும். வெளி நாட்டுத் தகவல் வந்து உற்சாகப்படுத்தும். பூர்வீகச் சொத்து சேரும். எலக்ட் ரானிக்ஸ், கம்ப்யூட்டர், கெமிக்கல்ஸ், தோல் பொருள், வியாபாரங்கள் லாபம் பெறும். பெண்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பிரிந்தவர் ஒன்று சேருவாங்க.

மகரம்: எதிரிங்க அடங்கி ஒடுங்கிப் போய், உங்க வெற்றியைக் கொண்டாடு வீங்க. துணிவு, நம்பிக்கை கூடும். கோர்ட், வழக்கு சாதகமாகும். தேவைக்கேற்ற பண வசதி கிடைக்கும். உத்தியோகத்தில இருந்து வந்த குழப்பங்கள் மறையும். நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். யந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், தோல், உலோக வகை தொழில்கள் அனுகூலம் தரும். குடும்பத்தில மகிழ்ச்சி ஏற்படும். பெண்களுக்கும், மாணவர் களுக்கும் அனுகூலமான வாரம்.

நடக்கும்!

ஜூன் 16 முதல் 22 வரை

அக்னிசர்மா பக்கம்

கும்பம்: உங்க அலைச்சல், குழப்பம், சிரமங்கள் எல்லாம் ஓய்ஞ்சு போகும். தெய்வ பலம், புதியவர்கள் அறிமுகம், பிரபு தனவான்கள் ஆதரவு ஏற்படும். சரளமான பண வசதி கை கொடுக்கும். உத்தியோகத்தில அவசரம் எதிலும் வேண்டாம். கமிஷன், காண்ட்ராக்ட், எண்ணெய், தோல், கெமிக்கல், தொழில் கள் ஆதாயம் பெறும். குடும்பத்தில புதிய சொத்து சேரும். பெண்களுக்கு அதிர்ஷ்ட மான வாரம்.

மீனம்: எடுத்த காரியங்கள் எல்லாம் தடைகள், தாமதம்னு ஆனாலும், கடைசியில உங்க திறமையால வெற்றி பெறும். முக்கியமானவங்க ஆதரவு கை கொடுக்கும். பொருளாதார நெருக்கடி தீரும். உத்தியோகத்தில பதவி உயர்வு, இடமாற்றம், வெளியூர்ப் பயணம் ஏற்படும். ஓட்டல், லாட்ஜ், ஜவுளி, எலக்ட்ரானிக்ஸ் துறையில இருக்கறவங்க முன்னேறுவாங்க. குடும்பத்தில இதுவரை இருந்த குழப்பங்கள் மறைந்து, நிம்மதி ஏற்படும். பேச்சில் கடுமை எப்போதும் வேண்டாம். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கையால் மகிழ்ச்சி கிடைக் கும். மாணவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

வாசகர்களும் 'விஜய் கேள்வி', கல்கி சென்னை-97 என்று குறிப்பிட்டு போஸ்ட் கார்டில் கேள்விகள் அனுப்பலாம்.



■ கோமதி



■ தெய்வானை

விஜய் 'கில்லி' பதில்கள்



■ சுசித்ரா

★ **சோனியா காந்தியை விஜய்க்குப் பிடிக்குமா? பிரதமர் பதவியை அவர் மறுத்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

- ம. சுசித்ரா, குடும்பத்தலைவி, திருச்சி

காங்கிரஸுக்கு ஒரு நல்ல தலைவர் கிடைத்திருக்கிறார். தேடி வந்த பிரதமர் பதவியை அவர் ஏற்க மறுத்தது, அவரது மதிப்பை மேலும் உயர்த்திவிட்டது. இது என்னுடைய கருத்தல்ல, மக்களுடைய கருத்து.

★ **ரஜினி - கமல் ஒப்பிடுங்கள்?**

வீரபாண்டியன், குன்றக்குடி

ரஜினி - ஒரு மேஜிக்!
கமல் - ஓர் ஆச்சரியம்!

உங்களின் உயிர் நண்பர்?

கோமதி, குன்றக்குடி

மனசாட்சி

★ **உங்கள் மகனை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்த மாட்டேன் என்கிறீர்களே?**

தெய்வானை, ஆத்தங்குடி

அவன் பள்ளியில் படிக்கும்போது, இவன் ஒரு பிரபல நடிகனுடைய மகன் என்ற முக்கியத்துவம் அவனுக்குத் தரப்படக்கூடாது. அது அவனை மற்ற மாணவர்களிடமிருந்து தனிமைப்படுத்தி விடும். அவன் மீது இப்போது விளம்பர வெளிச்சம் பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன். அவன் வாழ்க்கையை அவனே தீர்மானித்துக் கொள்வான். அதற்கு எவ்வளவோ காலம் இருக்கிறது.

★ **விஜய்! எப்போது இன்ஸ்பெக்டர் விஜய்யாக நடிப்பீர்கள்? எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு!**

- ஆர். பிரபு, மன்ற உறுப்பினர், கிங் ஆஃப் சென்னை ரசிகர் மன்றம், திருச்சி பாய்லர்

'நீங்க இன்னும் சின்னப் பையனாகவே தெரியறீங்க' என்று எல்லோரும் சொல்கிறார்கள். இது எனக்கு ப்ளஸ்ஸா இல்லை, மைனஸா என்று சொல்லத் தெரியவில்லை. என்னோட முகம் எப்போ மெச்சூர்டா ஆகும்ன்னு எனக்கே தெரியவில்லை. அப்படி ஆகும்போது கட்டாயம் காக்கிச் சட்டை போட்டு நடிப்பேன்.

★ **டியர் விஜய், உங்கள் பாத்திரங்களுக்காக ஹோம்ஒர்க் செய்வதுண்டா?**

சத்யநாராயணன், காரைக்குடி

ஹோம்ஒர்க் செய்வது ரொம்பப்



★ கோயம்பேடில் கண்டுபிடித்த ஸ்டைல் கட்டு ('மதுர' படத்தில்)

பிடிக்கும். இப்போது 'மதுர' படத்தில் காய்கறி மார்க்கெட்டில், மூட்டை தூக்கும் 'மதுரவேல்' என்ற தொழிலாளியாக நடிக்கிறேன். இதற்காக சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்குப் போய், காரின் உள்ளேயே உட்கார்ந்து கொண்டு, சுமை தூக்கும் தொழிலாளர்களை ஒரு வாரம் தொடர்ந்து கவனித்தேன். அவங்க பேச்சு, மேனரிஸம் எல்லாம் பார்த்து, மதுரவேல் கேரக்டருக்குப் பயன்படுத்தி இருக்கேன். அங்கே ஒரு தொழிலாளி கைக் குட்டையை கால் முட்டிக்கு மேலே தொடையில் கட்டியிருந்தார். அதை அப்படியே காப்பியடித்து, நானும் அந்த ஸ்டைலை படத்தில் பயன்படுத்தியிருக்கேன். அந்தக் கட்டு, சூப்பரா இருக்கும்.



★ சத்தியநாராயணன்



★ வீரபாண்டியன்



★ பிரபு

சிறந்த கேள்விக்கான பரிசாக விஜய்யின் 'மதுர' திரைப்படப் பாடல் ஆடியோ காசட்டை சத்யநாராயணன் பெறுகிறார்.

சர்ச்சையைக் கிளப்பும் ஸ்பானிஷ் படம்!

கான் 2004 திரைப்பட விழா என்றதும், இந்தியர்களை ஒரு கணம் அதிர்ச்சியடையச் செய்வது ஐஸ்வர்யா ராயின் சிக்கன ஆடை. மாறாக தொடக்கவிழா படமாக திரையிடப் பட்ட 'தவறான கல்வி' என்ற ஸ்பானிஷ் மொழிப்படம், அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய கத்தோலிக்க திருச்சபைகளை



• துணை ஆயர் லாரன்ஸ் பயஸ்

அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. காரணம், படத்தின் கதை! ஸ்பெயினில் உள்ள கத்தோலிக்க குருகுலப் பள்ளி ஒன்றில் பயிலும் மாணவர்களை, அங்குள்ள பாதிரிமார்கள், முறைகேடான ஓரினப் பாலுறவுக்குப் பயன்படுத்திக் கொள்வதையும், பாதிக்கப்படும் ஒரு மாணவன் (படத்தின் ஹீரோ) பத்தாண்டுகளுக்குப் பிறகு போதை மருந்துக்கு அடிமையாகி, தன்னை ஒரு பெண்ணாக மாற்றிக் கொள்வது பற்றியும் படம் பேசுகிறது.

கடந்த ஆண்டு மட்டும் ஓரினப் பாலுறவு சம்பந்தப்பட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான குற்றங்கள், அமெரிக்காவில் பதிவாகியுள்ள நிலையில், இந்தப் படம் திரையிடப்பட்டது மேலும் பரபரப்பைக் கிளப்ப, படத்தின் இயக்குனர் பெட்ரோ அல்மோடோவர், தமது படத்தில் குறிப்பிடும் அதே குருகுலப் பள்ளியில் சிறிது காலம் படித்து 'தேவ அழைத்தல்' இல்லாததால் வெளியேறியவர். இதனால் இயக்குனரே நேரடி சாட்சி என்று பத்திரிகைகள் தூக்கலாக எழுதப் போய், சர்ச்சை மேலும் சூடுபிடித்திருக்கிறது.

கிறிஸ்துவத்தில் பல பிரிவுகள் இருந்த போதும், தாய் மதமான கத்தோலிக்க கிறிஸ்துவத்தில், குருமார்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற நிலை நீடிக்கிறது. இவர்கள் திருமணம் செய்து கொள்ள கத்தோலிக்கத் தலைமைப் பீடமான வாடிகன் அனுமதி அளித்தால், இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்று ஒலித்து வந்த மாற்றுக் குரல்கள், இப்போது மௌனமாகி விட்டன. இது பற்றி மயிலை துணை ஆயர் அருட்திரு லாரன்ஸ் பயஸிடம் பேசினோம்.

"கத்தோலிக்க குருமார்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதி கிடையாது என்று தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இப்போதைய போப்பாண்டவர் சொல்லிவிட்டார். அதேபோல் பெண்களுக்கு குருத்துவம் இல்லை என்பதையும் சொல்லிவிட்டார். இந்த இடத்தில், குருக்களுக்கு ஏன் திருமணம் மறுக்கப்படுகிறது என்ற கேள்வி முக்கியமானது. குருத்துவம் என்பது தெய்வீக அழைத்தல். கடவுளுக்கு முற்றிலும் சொந்தமாக இருப்பதற்காக, அவருக்கு முழுமையாக அன்பு செய்யவே




• படத்தில்...




குருத்துவம். முக்கியமாக இது பொதுச் சேவை. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றால் மனைவி, குழந்தைகள் இருக்கக் கூடாது. கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களும் தங்களது குருக்களின் மேல் வைத்திருக்கும் மதிப்பிற்குத் துறவறமே காரணம். தவிர துறவறம் என்பது கத்தோலிக்க திருச்சபைகளில் பதினாறு நூற்றாண்டுகளாக நிலைத்து, நீடித்து வருகிறது. இனியும் நிலைக்கும். அது நீடித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பமும்'' என்றவரிடம், "சர்ச்சைக்குரிய படத்தின் இயக்குனர், 'குருகுலங்கள் என்பவை எதிர்கால ஓரினச் சேர்க்கையாளர்களை உற்பத்தி செய்யும் பள்ளிக் கூடங்களே தவிர, குருமார்களை உருவாக்குபவை அல்ல' என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டி இருப்பதை கவனித்தீர்களா?'' என்றோம்.

"இரண்டாம் வாத்திகன் சங்கம் (1965) கொண்டு வந்த பல சீர்திருத்தங்கள் காரணமாக, குருகுலக் கல்வியில் இருந்து வந்த இறுக்கமும் கடுமையும் தற்போது தளர்த்தப்பட்டு விட்டன. முன்பு குருத்துவம் பெறும்வரை சுமார் பத்தாண்டுகள் குருகுலத்தை விட்டு வராமல் பயில வேண்டும். இது சித்திரவதை இல்லாத சிறைவாசம் போன்றது என விமர்சிக்கப்பட்டது. இந்த நிலை இன்று இல்லை. இப்போது பங்கு கோவில்களுக்கு பயிற்சி பெறச் செல்லலாம். மக்களைச் சந்திக்கலாம். விடுமுறையில் வீட்டிற்கு சென்று, பெற்றோர், உடன் பிறந்தோருடன் அன்பு பாராட்டலாம். உயர் கல்வி பயில, குருகுல வளாகத்திற்கு அப்பால் சென்று வரலாம். இப்போது பெண்கள் குருகுலத்திற்கு வரலாம், பேசலாம். குருகுலத்திற்கு இப்போது குறைந்த பட்ச கல்வித் தகுதியே பட்டப்படிப்பாக இருக்க வேண்டும்'' என்று விளக்கியவர், "கலைச் சினிமா என்ற பெயரில், கத்தோலிக்க மதத்தைத் தாக்கினால் அதிக விளம்பரம் கிடைக்கும் என்பதாலும், ஒரு சில நடப்புகளை, அதுவே நாட்டு நடப்பு என்பது போல் மிகைப்படுத்திக் காட்டுவதையும் பலர் வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்பானிஷ் இயக்குனர் பெட்ரே அல்மோடோவர் கூட ஏற்கெனவே இதுபோன்ற படங்களை எடுத்தவர்தான்'' என்கிறார்.

• பெட்ரே அல்மோடோவர்



- ஜெய்



'எல்' போர்டு பூஜா!

'ஜே.ஜே' பட நாயகி பூஜாவுக்குச் சின்னச் சின்ன ஆசைகள் நிறைய. அதிலொன்று டிரைவிங்! கார் ஓட்டிப் பழக, டிரைவிங் ஸ்கூலுக்குப் போனவர் கடுப்பாகி வீட்டுக்கு வந்து விடுகிறார். காரணம் பெண் பயிற்சியாளர்! சிறகு முளைக்காத ஒரு தேவதைக்கு, இளம் ரோமியோ சொல்லி கொடுத்தால்தானே மஜாவாக (தமிழ்





• சரண்

அகராதியில் இந்த வார்த்தைக்குத் தயவு செய்து அர்த்தம் தேடாதீர்கள்) இருக்கும்? அம்மையார், அப்படியொரு டிரைவிங் ஸ்கூலை தேடிக் கண்டுபிடிக்கிறார். அந்த ஓட்டுனர் பயிற்சிப் பள்ளியின் உரிமையாளர் யார் தெரியுமோ? அஜீத்! அப்புறமென்ன, நாயகி பூஜாவுக்கு, அஜீத் கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கும் காட்சிகளை, பூண்டு, மிளகு போடாத காதல் ரசமாக வடித்து, படம் பிடித்துக் கொண்டிருந்தார் இயக்குனர் சரண். காதல் மன்னன், அமர்க்களம், படங்களுக்குப் பிறகு, அஜீத்தை மறுபடியும் தமது செல்லுலாய்டு தேரில் ஏற்றியிருக்கிறார். அதிலும் அஜீத்துக்கு இரட்டை வேடம்!

"அமர்க்களத்தில் அஜீத்தை ஒரு ஆக்ஷன் ஹீரோவாகக் காண்பித்தேன். இதில் முற்றிலும் மாறுபட்ட, காமெடி காரெக்டரில் நடிக்க வைத்திருக்கிறேன். அஜீத்துக்கு அற்புதமாக காமெடி வரும். அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார் இயக்குனர் என்று படம் வந்த பிறகு பத்திரிகைகள் விமர்சிக்கலாம்" என்ற சரண், "அஜீத்தின் இமேஜுக்காகவே இந்தப்படம். அதற்காகத்தான் படத்தில் இடம் பெறும் இன்னொரு தாதா வேடம். டிரைவர் அஜீத் சென்னை என்றால், தாதா அஜீத்துக்கு தூத்துக்குடி. இருவரும் சகோதரர்கள். எப்படி என்பதை இதுவரை முயற்சிக்காதத் திரைக்கதை மூலம் சொல்லப்போகிறேன்" என்கிறார்.

பூஜாவுக்கு மீண்டும் வாய்ப்புத் தந்திருக்கும் சரண், "எனக்கு குடும்ப ரசிகர்கள் அதிகம். அவர்களை மனத்தில் வைத்து, பூஜாவை நாகரிகமாக, அதே நேரம் கிளாமர் கேர்ளாகக் காட்டியிருக்கிறேன். அந்த அளவு கோலை, படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று பொடி வைக்கிறார். பூஜா மாதிரி அழகு பொம்மைகளைக் கொஞ்சம் நடிக்கவும் வைங்க சரண்!

• ரவுண்ட்ஸ் பாய்

படங்கள்: 'அட்டகாசம்' படத்திலிருந்து



''ஒரு போலீஸ்காரரின் வாழ்க்கையை மையமா வச்சு சீரியல் தயாரிக்கப் போறேன்.''

''என்ன தலைப்பு?''

''லட்டி ஒலி!''

- வசந்தி வள்ளுவன்



''தலைவர் நீர் வளத் துறை வேணாம்னு மறுத்துட்டாரே, வருமானம் கம்மியா வருமுன்னா?''

''இல்லே... அவருக்குத் தண்ணியில கண்டம்னு ஜோசியர் சொல்லிட்டாராம்!''

- வி.சகிதா முருகன்

ஒற்றைச் சாள



''நீங்க தயாரிக்கிற படத்துக்கு மொத்தம் எத்தனை வில்லன்கள்?''

''கதாசிரியர், வசனகர்த்தா, டைரக்டர்...ன்னு நெறையப் பேர் இருக்காங்க!''

- வி.சகிதாமுருகன்



"சிம்பாலிக்கா ஏழு மெழுகுவர்த்திகளைக் கேக்கில் வைச்சா போதும்னு சொன்னேனே, கேட்டீங்களா?"

"ஏன் என்ன ஆச்சு?"

"ஒரே மூச்சுல எழுபது மெழுகுவர்த்திகளை ஊதி அணைக்கப் போய் தலைவர் மயக்கம் போட்டு விழுந்துட்டாரு!"

- வி. கிருஷ்ணகுமார்




"ஹிந்தியில் இன்னிக்கு புதுசா 'யுவா'ன்னு ஒரு வார்த்தை கத்துக்கிட்டேண்டா..!"

"வெரிகுட்... வெரிகுட்... 'யுவா'ன்னா தமிழ்ல என்ன அர்த்தம்..?"

"ஆய்த எழுத்து!"

- கே.ஜி.எஸ்.கோவிந்தன்

ாதல்!



"என்னதான் கட்சித் தொண்டர், உழைப்பாளின்னாலும் சலூன் கடைக்காரரை மேடையில் அனுமதிச்சது தப்பாப் போச்சு..."

"ஏன்?"

"தலைவருக்கு பின்பக்கமிருந்து துண்டு போர்த்திட்டார்!"

- நெல்லிக்குப்பம் வி.மோகன்

பனிக்கட்டிகளை கண்ணாடி தம்ளரில் நாகப்பன் எடுத்துப் போட்டான். பொன்னிற திரவம் பாதிக் குவளை வரை இருந்தது. எடுத்து ஒரு வாய் குடித்தான். கசப்புடன் உள்ளே போனது. கண்களை மூடிக் கொண்டான். மிதப்பாகச் சென்ற சிந்தனை, அவனை மீண்டும் கதிரேசனிடமே கொண்டு சென்றது. எவனை மறக்க நினைத்தானோ, அவனே விஸ்வரூபம் எடுத்து நாகப்பனைப் பார்த்துச் சிரித்தான். 'என்னை உன்னால் ஒன்றும் செய்துவிட முடியாது' என்ற சிரிப்பு.

கதிரேசனின் கழுத்தைப் பிடித்துத் திருகி விட வேண்டும் என்ற ஆவேசத்தில், அவனை எட்டிப் பிடிக்க ஆவேசமாக எழுந்தான். கதிரேசன் பலமாகச் சிரித்தபடி மறைந்துவிட்டான். நிலை தடுமாறிய நாகப்பன், அவனை ஏசியபடி சோபாவில் சரிந்து விழுந்தான். ஐஸ் பெட்டி தரையில் விழுந்து பனிக்கட்டிகள் சிதறின. அந்த நட்சத்திர ஹோட்டலின் குளிரூட்டப்பட்ட அறை தீ என எரிவது போல் இருந்தது.

வெளியில் உலாவலாம் என எழுந்தான். மீண்டும் மடங்கிச் சரிந்தான்.

காற்று முற்றிலும் கதிரேசன் பக்கமே அடிப்பதாகத் தோன்றுகிறது. கதிரேசன் எனும் ஜ்வாலையை விசிறி விடும் காற்று. அவனுடைய பொறுமை அவனுடைய பலம். அது எப்படி அவனிடம் மட்டும் அப்படி ஒரு சகிப்புத் தன்மை? தடித்த எருமைத் தோல்? எத்தனை ஏச்சுக்கள்! எத்தனை சுடுசொல்! அத்தனையும் சகித்துக்கொண்டு, மறுநாள் எப்படி அவனால் இன்முகத்துடன் உலாவ முடிகிறது?

அவன் முதன்முதலில் படியேறி வளவுக்குள் வந்த நாள் இன்னும் பசுமையாய் மனத்தின் அடியில் உறைந்து போய் இருக்கிறது. ஒரு ட்ரங்க் பெட்டியைச் சுமந்தபடி, நூல் சேலை கட்டி வந்த கனகாவின் அருகில் தொள, தொள என ஒரு அரைக்கால் சட்டை மாட்டிக் கொண்டு, மூக்கொழுக நின்ற அழுக்கு கதிரேசன். தொடுப்பில் தந்தைக்குப் பிறந்தவன் என்பதெல்லாம் பின்னாட்களில் தெரிந்தது எனினும் வெறுப்பும், பொறாமையும் அப்பொழுதே தலை தூக்கி விட்டன.

கதிரேசன் வைத்த ஆக்கரில் இரண்டாகப் பிளந்த நாகப்பனின் பம்பரம், டீப் ஃபைன் லெக்கில் நின்று நாகப்பனின் வீச்சை வீழ்ச்சியாய் மாற்றிய காட்சி; ஏறவே முடியா கொடுக்காய் மரத்தின் மேல் தொங்கிய பழங்களைப் பறித்த சாமர்த்தியம், யார் உதவியும் இன்றி கதிரேசனே கற்றுக் கொண்ட சைக்கிள்; சிறந்த முறையில் நூலகத்தை உபயோகித்த மாணவன் என மற்றவர் முன்னிலையில் அவன் பெற்ற பரிசு, என நாகப்பனிடம் ஒரு பட்டியல் உண்டு. எதை மறக்க அவன் அளவுக்கு அதிகமாகக் குடித்தானோ, அவை எல்லாம் நேற்று நடந்தது போல நினைவில் பளிச்சென்று ஊசலாடியன.

விவரம் தெரிய வந்தது ஒரு மகார் நோன்பு விழாவின் பொழுது. ஒரு கிலுக்கி எடுப்பு விழாவில்தான் நாகப்பனின் ஆயாவும், தெய்வானை ஆச்சியின் அன்னையுமான கல்யாணி ஆச்சி விவரம் சொன்னாள்.

விஜயதசமி என்றும், தசரா என்றும், நவராத்திரி என்றும் நாடு முழுவதும் கொண்டாடுவார்கள். நவராத்திரியின் முதல் நாளை கிலுக்கி எடுப்பு எனவும், இறுதி நாளை மகார் நோன்பு எனவும், நகரத்தார் ஊரில் உள்ள பெரிய பொட்டலில் கொண்டாடி மகிழ்வார்கள். அந்தப் பொட்டலையே மகார் நோன்புப் பொட்டல் என்றுதான் அழைப்பார்கள். காரைக்குடியில் நகரச்சிவன் கோவிலை ஒட்டிய திடலே மகார்நோன்புத்திடல், மகார் நோன்புப் பொட்டல் எல்லாம். அம்பு போட என தூண் ஒன்று திடலில் நிற்கும். வாழை மரத்தைக் கட்டி நிற்க வைப்பார்கள். உள்ளூர் சாமி, திடலில் எழுந்தருளி அம்பு போடும். சாமி போன பிற்பாடு நகரத்தார் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்பிள்ளைச் சிங்கங்கள் மரத்தினாலோ, வெள்ளியினாலோ, எவர்சில்வரினாலோ ஆன சிறிய ஈட்டி போன்ற ஆயுதத்தால், நிற்க

சத்தியப்ரியன்

7



வைத்த வாழை மரத்தில் குத்துவார்கள். பச்சை வாழை மரத்தில் கிலுக்கி இறங்கும் பொழுது பிள்ளைகளுக்குக் குஷியாக இருக்கும். திருவிழா என்பது கடவுளு

டன் முடியாமல் நீர்மோர், சர்பத், ஜவ்வு மிட்டாய், கியாஸ் பலூன் என பல பட்டுக் குஞ்சலங்கள் கட்டப்பட்டிருப்பதால் மறக்க முடியவில்லை. கதிரேசன் கேட்ட கிலுக்கியைப் போல.

"ஆயா, நாகப்பன் கிலுக்கியக் குத்தினப்புறம் எனக்கு வாங்கிக் கொடு"

வலம்புரி முத்து

என்றான் கதிரேசன். சிறுவன் என்றும் சொல்ல முடியாது. விவரம் அறிந்தவன் என சேர்த்துக் கொள்ளவும் முடியாது. விளையாட்டு, திருவிழா, கொண்டாட்டம் எல்லாம் பிறப்பு பார்த்தா வருகிறது?

"ஆமா! வம்சாவளி அப்படியே தொடர்ந்து வருது பாரு. பங்காளி வீட்டுக்காரன்னு நெனப்பு. நாகப்பனுக்கப்புறம் நீதான் புள்ளி பாரு. போவியா...?" என கல்யாணி ஆச்சி அவனைப் புறங்கையால் தள்ளி விட்டார். சிறுவன் முகத்தில் நிராகரிப்பின் வேதனை; ஏமாற்றம்; இயலாமை என எல்லாம் தெரிந்தது.

வாரிக் கொண்ட தெய்வானை ஆச்சி "நல்லா இருக்கு அப்பத்தா! சின்னஞ்சிறுசு வெளயாட ஆசைப்பட்டா, புள்ளி, பங்காளின்னு வெட்டிப் பேசுறியே. இந்தாய்யா இலுக்கி. நீ போயி குத்திட்டு வா" என்றதற்குப் பிள்ளை மறுப்பு தெரிவித்தது.

"நீ சும்மா இரு தெய்வானை! இருக்க எடங் கொடுத்தா, படுக்க பாயி கேட்டுருவான். ரோசம், அவமானம் பார்க்குதேன்னு வருத்தப்படாத, எல்லாம் பார்க்கட்டும் பயபுள்ள. அதுதான் உனக்கும் நல்லது; உன் பிள்ளைகளுக்கும் நல்லது."

"ஏன் ஆயா, அவன் என் தம்பி இல்லியா?" என்றான் நாகப்பன்.

"தம்பிதான்டா" நா பதைபதைக்க தெய்வானை ஆச்சி பதிலளித்தாள். செட்டியாரின் செய்கைக்காக இந்த ஜீவன், இன்னும் எத்தனை வருடங்கள் படப் போகிறதோ என்ற பதைப்பு.

"சும்மா இரு தெய்வானை. அவன் ஒந் தம்பின்னாலும், ஒங்க ஆத்தா வயித்துல பொறந்தவன் இல்லை. இவங்க ஆத்தாவை ஒங்கப்பச்சி சேர்த்துக்கிட்டதுக்காக வந்து பொறந்த பய இவன்."

"சேர்த்துக்கிட்டதுன்னா.....?"

"ஆத்தா!" நடுத்திடல் என்பது பாராமல் தெய்வானை அலறினாள். "சின்னப் புள்ளைங்ககிட்ட இதுதான் பேசுறதுன்னு கிடையாதா?"

"என் வாயை மூடு! அதான் ஊர்ப் பெரியவங்க எதிர்த்து நின்னப்ப கூட புருசன் செஞ்சது சரின்னு நின்னவளாச்சே நீ. ஊரில இல்லாத அதிசயமா ஊட்டுக்குள்ள கூட்டியாந்து குடியில்ல வெச்சிருக்க? வேலில போனது ஓணான்னு நெனச்சி உள்ள போட்டிருக்க. அது ஓணான் இல்ல. பாம்பு, நல்ல பாம்பு! டேய் நாகப்பா! அவன் ஒன் தம்பி இல்லடா. ஒன் பங்காளி இல்ல. இவனோ, இவன் ஆத்தாளோ சொத்துன்னு வந்து நின்னா, நீதான் அப்பு அவுகளை கழுத்தப் பிடிச்சு தள்ளணும்!"

பாட்டி சொன்னது அப்படியே மனத்தில் பதிந்தது.

கால்கள் பிறண்டன. விழப் போனவனை வாயில் காப்போன் தாங்கிப் பிடித்தான்.


"அய்யா! பார்த்துங்க. இந்த நிலையில் வெளிய போனீங்கன்னா வம்பாயிடுவீங்க. எதுன்னா வேணுமின்னா என்னாண்ட சொல்லுங்க. நான் வாங்கியாரேன்" என்றவனை உதறி விட்டான்.

"நீ யாருடா எனக்கு அட்வைஸ் பண்ண?" என சட்டைப் பையிலிருந்து சிகரெட் லைட்டரை எடுக்கத் தடுமாறினான்.

"ஒம்பேரென்ன?"

"கதிரேசங்க" என்றான் காவலாளி.

வசைச் சொல்லுடன் தொடங்கிய நாகப்பன் "கதி



"இப்போ உங்க மகன் எங்கே?"
"பக்கத்து வீட்லே டீ.வி பார்த்துக்கிட்டு இருக்கான்."
- ஆர். ஆர். பூபதி

"ஏங்க உங்க வீட்லே டீ.வி வாங்கலே?"
"டீ.வியால என் பையன் படிப்பு கெட்டுப் போகக் கூடாதுன்னுதான்."

ரேசன்ங்கிற பெயரையே தமிழ் வழக்கிலிருந்து எடுத்திடச் சொல்லோணும். செட்டிப் பய லாடா நீ?''

''இல்லீங்க, மதுரைப் பக்கம் தேவமாரு'' என்றான்.

''நா வெளியப் போயிட்டு வாரதுக்குள்ள கதிரேசன்ங்கிற பேரை நீ மாத்தி வெச்சுக் கிடோணும். சரியா?''

வாயில் காப்போனின் அனு மதிக்குக் காத்திராமல், நாகப்பன் நடுவீதியில் இறங்கினான். பதி னொரு மணி இரவுச் சென்னை சாதுவாக இருந்தது. வாகனங் களின் எண்ணிக்கை குறைவு என்றாலும், எல்லா வாகனங் களும் அதி வேகமாக விரைந்து கொண்டிருந்தன. நாகப்பன் இவற்றையெல்லாம் பொருட் படுத்தாமல் நடைபாதை யிலிருந்து இறங்கி, வீதியில் தடுமாறியபடி சென்றான். பின்னால் படு வேகமா வந்த கார் ஒன்று இலே சாகத் தட்டியபடி நின் றது. அந்தச் சிறிய உர சலுக்கே தாக்குப் பிடிக்க முடியாமல் நாகப்பன் குப் புற விழுந்து மயக்கமா னான்.

நாகப்பன் மேல் உரசி நின்ற காரை ஓட்டி வந்தது திரு ஞானம் எனப்படும் சுப.பெரி.தி. திருஞானம். அவன் ஸ்ரீகணேஷ் குரூப் ஆஃப் கம்பெனிகளின் கொழுந்து என்பதுடன், நாகப் பனின் பள்ளிப் பருவத் தோழன் என்பது விதியின் பாவுநூல் பின்னல்.

ஒரு திருப்பத்தில் நாகப்பன் கதிரேசனைப் பார்த்துவிட்டான். 'வா! வா!' என இரண்டு கைகளி னாலும் அழைத்தபடி ஓடி னான். சட்டையின் விளிம்பைப் பற்றி விட்டால் போதும், அவ னைப் பிடித்து விடலாம் என ஆவேசத்துடன் நாகப்பன் அவனைத் துரத்திச் சென்றான். கழனிவாசல், செக்காலை, அழகப்பா கல்லூரி, கோவிலூர் ரோடு எனத் தொடங்கிய ஓட் டம், திடும் என மலைப்பிரதேசத் திற்கு மாறியது. கொடைக்கானல் மலைச்சாரல், பில்லர் ராக் பகுதி வளைந்து, வளைந்து போன மலை விளிம்பின் ஓரத்திற்குப் போன கதிரேசனை எட்டிப் பிடிக்க நாகப்பன் கைகளை நீட்டினான். கதிரேசன் ஒரு மலைப்பிரதேசப் பறவையைப் போல மலைச்சாரலில் சிறகுகள் விரியப் பறந்தபடி ''உன்னால் முடியாது நாகப்பன்'' என்றான்.

''டேய்!'' என அலறியபடி எழுந்தான்.


கனவு!

தலை பாரமாக இருந்தது. காலை வேளை என்பதால் கடற்காற்று குளுமையாக வீசிக் கொண்டிருந்தது. சென்னைக்கு உண்டான புழுக்கம் இல்லை. எந்த இடம் எனத் தெரிய வில்லை. முந்தைய நாள் நடந்த நிகழ்ச்சிகள் நினை வில் எழுந்தன. வெட்கம், அவமானம், குற்ற உணர்வு ஒரு சேர எழுந்தன.

''குட்மார்னிங் மாணி'' அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த வாலிபனை நாகப்பன் ஏறிட்டான்.

அவ் வாலிபனுக்கு இருபத் தைந்திலிருந்து முப்பதிற்குள் வயது இருக்கும். மெலிதான தங்க ஃபிரேம் கண்ணாடி அணிந்திருந் தான். அமர்க்களமாக சிகை முன் நெற்றியில் அலையாய்ப் படிந் திருந்தது. மெலிதான உதடுகள், கூர்மையான மூக்கு. ஒற்றை நாடி தேகம். ஜீன்ஸ் பாண்ட்டும், டக்-இன் செய்த முழுக்கைச் சட்டை யுமாய் ராஜ தோரணையுடன் நின்றான். எளிதில் வசிகரிக்கும் முகம். சதா சர்வ காலமும் இழையோடும் சிரிப்பு.

நாகப்பனுக்கு இவனை இதற்கு



''அதிகபட்ச கள்ள வோட்டு இங்கதான் பதிவாகிடுச்சாம்!''

''வாக்குச் சாவடி முன்னால எதுக்கு பட்டாசு வெடிக்கறாங்க?''

- அம்பை தேவா



ஒரு கதை இரண்டு படம்?

சிம்ரன் மணம் முடித்துப் போனாலும், போனார்; அவர் கால்ஷூட் மறுத்த பாத்திரங்களை, ரீமாசென்னுக்குத் தாரை வார்த்து விட்டார்கள். அதில் முந்திக் கொண்டு வரப் போகிற படம் 'செல்லமே!' ஷங்கரின் உதவியாளர், பாலாஜி சக்திவேல் இயக்கும் இந்தப் படத்தில், முதிர்கன்னி ரீமாசென்னை, பாய்ஸ் பட நாயகர்களில் ஒருவரான இருபது வயது பரத் காதலிக்கிறாராம்.

அய்யோ! இது அப்படியே சிம்பு, ஜோதிகா நடிக்கும் 'மன்மதன்' படத்தின் கதையாயிற்றே!

எந்தப் படம் முந்திக் கொள்ளப் போகிறது...?

- ஸ்ரீ

முன்னால் பார்த்த ஞாபகம் உறுத்தலாக இருந்தது. யார் இவன்?

"நான் எப்படி இங்கே வந்தேன்?"

"என் காரில் முன்னாலதான் விழுந்த. அள்ளிப் போட்டு எடுத்துட்டு வந்தேன். இது எங்க பங்குதாரர்கள் சென்னை வந்தா தங்கும் கெஸ்ட் ஹவுஸ். ஸ்மோக் பண்றீங்களா?" என்றான்.

"வேணாம். நீங்க யாரு? உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே..."

"திருஞானம் என்னும் பெயர் நினைவுக்கு வருகிறதா?"

"மாடல் ஹைஸ்கூல்?"

"ஆமாம்."

"பிரதீபா என்ற சேட்டுப் பெண் மேல் வேகமாக மோதி, பிரதிஞானம் எனப் பட்டப் பெயர் பெற்ற..."

"அதே திருஞானம்தான்" நாகப்பன் நீட்டிய கரங்களைக் குலுக்கியபடி திருஞானம் சிரித்தான்.


"ஸ்ரீகணேஷ் குரூப் ஆஃப் கம்பெனி. அதுதான் என் பரம்பரையின் அடையாளம். அதெல்லாம் இருக்கட்டும். நீ என்ன செய்யிற? குடியில் சதா உளறின அந்தக் கதிரேசன் யாரு?" என்றான் திருஞானம்.

ஒரே நாளில் ஒரே பொழுதில் அவனிடம் கதிரேசனைப் பற்றிச் சொல்லவில்லை. திருஞானத்துடன் ஏற்பட்ட நட்பானது தொடர்ந்தது. ஏதாவது ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கொண்டு சென்னை செல்வதும், அவனுடன் கேளிக்கைகளில் ஈடுபடுவதும், அவன் இல்லத்தாருடன் பழகுவதுமாக இருந்த நாகப்பன், சின்னச் சின்ன கோடுகளாய் கதிரேசன் மேல் தனக்கிருந்த பொறாமை எனும் ராட்சஸனின் முழு உருவத்தையும் வரைந்து காட்டினான்.

"அவன் சாகக் கூடாது. ஆனால் என் கண்களிலிருந்து மறைய வேண்டும். அவன் கொல்லப்படக் கூடாது. ஆனால் அழிக்கப்பட வேண்டும். எனக்குக் குற்ற உணர்வு ஏற்படக் கூடாது. ஆனால் அவன் மேல் கொண்டுள்ள பொறாமை அடங்க வேண்டும். அவன் ஜெயிக்கக் கூடாது. ஆனால் அவன் தோல்வியால் நான் சிறுமைப்படக் கூடாது."

"அடேயப்பா! இரண்யகசிபுவை விட உனக்கு ஆசை அதிகம்" என்றான் திருஞானம்.

(தொடரும்)



உயிர் பயத்தில் ஏதென்ஸ் மக்கள்!



✱ ஜேக்வஸ் ரோகே

பீதியில் இருக்கிறார்கள் ஏதென்ஸ் நகர மக்கள். இங்கு வசிக்கும் நாற்பது லட்சம் பேரில் பாதிப் பேர், ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெறும் கால கட்டத்தில் அந்த நகரிலிருந்து வெளியேறித் தங்கள் உறவினர் அல்லது நண்பர்கள் வீடுகளுக்குப் போய்விட திட்டமிட்டிருக்கிறார்களாம். ஏன்? உயிர் பயம்தான். தீவிரவாதிகள் தங்கள் கைவரிசையைக் காட்டி விடுவார்களோ என்ற அச்சம்!

எண்ணூறு மில்லியன் டாலர்களைப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக மட்டுமே செலவிட திட்டமிட்டுள்ளது ஒலிம்பிக் குழு. ஆயிரக்கணக்கான கண்காணிப்புக் கேமிராக்கள் நகரெங்கும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

எனினும் "ஏதென்ஸில் பாதுகாப்பு ஏற்பாடுகள் போதவில்லை" என்கின்றன சில அமெரிக்கப் பத்திரிகைகள். பாதுகாப்பான பகுதிகளைச் சோதிப்பதற்காக, சில சோதனைகள் நடத்தப்பட்டன. அதில் கர்ப்பவதி வேடம் தரித்த ஒரு ஒற்றர்படைப் பெண்மணி, தன் வயிற்றுப் பகுதியில் 'வெடிகுண்டுகளை'க் கட்டிக் கொண்டு செல்ல, அவளைப் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிடாமல் அனுமதித்துவிட்டனர். அதேபோல் மற்றொருவர் போலி வெடிகுண்டுகளை ஒட்டப் பந்தயங்கள் நடக்கும் இடத்தில் வைக்க முடிந்திருக்கிறது.

"இப்போது வேண்டுமானால் இது போன்ற சில தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால் போட்டிகள் நடைபெறும்போது, எங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகக் கட்டுக்கோப்போடு இருக்கும்'' என்றிருக்கிறது கிரீஸ் அரசு.

ஏதென்ஸின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிருப்தி தெரிவித்திருக்கிறது இஸ்ரேல். "எங்கள் நாட்டு ராணுவம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளில் சிலரும் எங்கள் விளையாட்டு வீரர்கள் குழுவோடு வர அனுமதிக்க வேண்டும்'' என்று இஸ்ரேல் கூறிவிட, சங்கடத்தோடு சம்மதித்திருக்கிறது கிரீஸ்.

முக்கியமாக உள்நாட்டிலேயே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் 'நவம்பர் 17' என்ற பயங்கரவாதக் குழுவை எதிர்கொள்வதும் கிரீஸுக்குச் சவாலாக இருக்கும். தவிர, தற்போதைய இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரும், அமெரிக்கா - ஈராக் மோதல்களும் பயங்கரவாதத்துக்குப் பச்சைக் கொடி காட்டிக் கொண்டிருக்கின்றன.

"ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்ளும் வீரர்கள் தங்குவதற்கு ஒலிம்பிக் கிராமம் என்ற ஒரு பகுதியை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறோம். இதில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருக்கும். ஆனால் எந்த விளையாட்டு வீரராவது இந்தப் பகுதியைவிட்டு, வெளியேறினால், அவர் தன் பொறுப்பில்தான் செல்ல வேண்டும்'' என்கிறார் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜேக்வஸ் ரோகே.

எப்படியோ ஐம்பதாயிரம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் நிறைந்த ஒலிம்பிக் பந்தயம் சிக்கலின்றி முடிவடைந்தால், கிரீஸ் அரசு விடும் ஆசுவாசப் பெருமூச்சு இலேசானதாக இருக்காது என்பது நிச்சயம்!

- ஆதர்ஷ்

உங்கள் மூட்டுவலியை தொலைப்பது எப்படி?

அறுபது வயது பெரியவர் ஒருவர் 'ஆர்தோக்யூர்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே உயரே குதிக்கும் ஒரு விளம்பரம்தான் இப்போது டீ.வி.யில் பிரபலம். அது **'ஆர்தோக்யூர்'** என்ற மூட்டு வலி மாத்திரைக்கான விளம்பரம்.

கடந்த சில ஆண்டுகளாக இந்த **'ஆர்தோக்யூர்'** மாத்திரைகள் மற்றும் ஆயிலை மார்க்கெட்டிங் செய்துவரும் **'க்யூர்வெல் ஃபார்மா'** நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் **திரு. ஆர்.பி. சம்பத்குமார்** அவர்களிடம் அவர்களது தயாரிப்புகள் குறித்து பேசினோம்.

மூட்டுவலி ஏன் வருகிறது?

பொதுவாக வயதான காரணத்தினால் மூட்டுகளில் ஏற்படும் தேய்மானத்தினாலும், மூட்டுகளில் இருக்கும் லூப்ரிகேன்ட் திரவம் வற்றிப் போவதாலும், மூட்டுகளிடையே யூரிக் ஆசிட் கிரிஸ்டல் உருவாகிறது. இதனால் மூட்டுகளுக்கு அதிக உராய்வு ஏற்பட்டு மூட்டுவலி வருகிறது.



இதற்கு என்ன சிகிச்சை?

சில மருத்துவ சிகிச்சைகள் இருந்தாலும், பொதுவாக மூட்டுவலியை குறைக்கும் மாத்திரைகள் மற்றும் ஆயில்களை உபயோகப்படுத்தி வலியில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

*உங்களுடைய **'ஆர்தோக்யூர்'** மாத்திரை எப்படி செயல்படுகிறது?*

எங்கள் தயாரிப்பான **'ஆர்தோக்யூர்'** மாத்திரைகள் 'செலரி விதை'யின் சாரத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இதன் முக்கியக் குணமே மூட்டுகளுக்கு இடையே உருவாகும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்களை கரைப்பதுதான். இந்த கிரிஸ்டல்கள் கரைந்து விடுவதால் மூட்டு வலி வெகுவாக குறைகிறது.

*தற்போதுள்ள மார்க்கெட்டில் உள்ள பல அலோபதி மருந்துகளைவிட ஆயுர்வேத **ஆர்தோக்யூர்** எப்படிச் சிறந்தது?*

ஆங்கில மருந்துகளை உபயோகிப்பதால் வாயுத் தொல்லை, வயிற்றில் எரிச்சல் போன்ற வேறு பல தொல்லைகள் வர வாய்ப்புண்டு. அதோடு சிறிது நாட்கள் கழித்து இந்த ஆங்கில மருந்துகளின் செயல்படும் திறனும் குறைந்துவிடும். மேற்கூறிய எந்த பாதிப்பும் இல்லாமல் வாழ்நாள் முழுவதும் மூட்டுவலித் தொல்லையிலிருந்து விடுபட, **'ஆர்தோக்யூர்'** மாத்திரைகளே சிறந்தது.

***ஆர்தோக்யூர்** மாத்திரைகள் எவ்வளவு சாப்பிட வேண்டும்?*

சாதாரணமாக முதல் மாதத்தில் தினமும் மூன்று வேளைக்கும் வேளைக்கு ஒன்று என்ற அடிப்படையில் மூன்று மாத்திரைகளும், இரண்டாம் மாதம் காலை மற்றும் இரவு என்று இரண்டு மாத்திரைகளும் சாப்பிட்டால் போதும். முதல் 15 நாட்களிலேயே வலியின் தீவிரம் குறையத் தொடங்கிவிடும். இரண்டு மாதங்களுக்குப் பிறகு 'மெயின்டனன்ஸ் டோஸ்' ஆக தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தாலே மூட்டுவலி குறைந்து போய்விடும்.

இந்த மாத்திரைகளால் பக்க விளைவுகள் உண்டா?

இந்த மாத்திரைகள் 100 சதவீதம் ஆயுர் வேதத் தயாரிப்பு என்பதால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆயுர்வேதம் என்பதால் நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் ஆகும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் நாங்கள் இதன் மூலப் பொருட்களை அப்படியே பயன்படுத்தாமல், மூலப் பொருட்களில் இருந்து 'எக்ஸ்ட்ராக்ட்' எடுத்துத்தான் பயன்படுத்துகிறோம். அதாவது 10 கிலோ மூலப் பொருட்களில் இருந்து ஒரு கிலோ எக்ஸ்ட்ராக்ட் மட்டுமே கிடைக்கும். இதனால் இந்த மாத்திரையின் செயல்திறன் மிகவும் அதிகம். அதனால்தான் எங்கள் விளம்பரங்களில் கூட 'ஆயுர்வேதம், திறனோ அதிவேகம்' என்ற வாசகத்தைப் பயன்படுத்துகிறோம்.

இதில் உட்கொள்ளும் மாத்திரைகள் மட்டும் இல்லாமல் மூட்டுகளில் தடவும் **'ஆர்தோக்யூர்'** ஆயிலும் உள்ளது. எங்கள் நிறுவனத் தயாரிப்புகள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. பல பிரபல மருத்துவர்களும் தங்கள் நோயாளிகளுக்கு மூட்டுவலிக்கான மருந்தாக, எங்களது 'ஆர்தோக்யூர்' மாத்திரைகளை சிபாரிசு செய்கிறார்கள்.

மேலும் இப்போது **'ஆர்தோக்யூர்'** மாத்திரைகள் தென் இந்தியா முழுவதும் கிடைக்கும்.

காலம் காலமாக மூட்டு வலியால் அவதிப்பட்டு வந்தவர்கள் முகத்தில் இனி நிம்மதியைப் பார்க்கலாம்.

KUREWEL PHARMA

மேலும் விவரங்களுக்கு :

கியூர்வெல் ஃபார்மா,

சென்னை - 83. ☎ : 24893013, 24711719

கிடைக்குமிடம் :

கர்நாடகா : 080-22874575, 22873961
ஆந்திரா : 040-24755925, 24750585
கேரளா : 0491-2501772, 0466-2208101
மும்பை : 022-27894441/2, 27898072
புதுடெல்லி :9891307489, 9810000416, 25716597, 9810452498
புவனேஷ்வர்:0674-2434162, 9437004162

ADVT.

ஆறுதல் தந்தார் அன்னை...



• கு.ப.ரா

'ஸ்ரீ அரவிந்த யோகம் உன்னதமான கர்ம யோக மார்க்கம். கீதைக்கு அவர் செய்திருக்கும் நிகரற்ற வியாக்கியானத்தில் இதை மிகவும் தெளிவாகவும் அழகாகவும் விளக்குகிறார். அவருடைய கீதா பாஷ்யம் உண்மையில் அவருடைய யோகத்தின் விளக்கம்... நமது நாட்டின் வேதாந்தக் களஞ்சியத்தை ஆராய்ந்து, அதன் பல மணிகளைச் சேர்த்து, ஒரு பூரண யோகத்தைக் கற்பித்திருக்கிறார் அவர். அதன் தத்துவத்திற்கு மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவு பூரண ஆதரவு கொடுக்கிறது. ஸ்ரீ அரவிந்தரின் யோகம் ஓர் அம்சத்தில் புதிதல்ல என்று கூடச் சொல்லிவிடலாம். பகவத் கீதைக் கட்டுரைகளில் இதை அவரே சொல்கிறார். கீதையின் வாக்கியங்களில் அமைந்திருக்கும் உண்மையை அவர் வெளியிட்டுக் காட்டித் தாமும் அதைத் தன் சாதனை வழியாகக் கொண்டு விட்டார். அதனால் ஸ்ரீ அரவிந்தரே ஒரு நிகரற்ற கீதா பாஷ்யம்.'

('ஸ்ரீ அரவிந்த யோகி' என்ற நூலில் கு.ப. ராஜகோபாலன்.)

அருளைப் பொழியும் கருணை நிலவான அன்னை சாரதையின் புகழ் மெல்ல மெல்ல எங்கும் பரவத் தொடங்கியிருந்த காலம் அது. பரமஹம்சர் ஸித்தி அடைந்த பின், அன்னையின் பாதாரவிந்தங்களைப் புகலிடமாகத் தேடி வரும் பக்தர் கூட்டம் பெருகியது. துறவியர் தங்கள் குரு பத்தினியிடம் குருவையே கண்டார்கள். சிக்கலான பல ஆன்மிகப் பிரச்னைகளுக்கு, அவர் தியானத்தில் ஆழ்ந்து குருதேவர் அருளால் தீர்வு சொல்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

பின்னாளில் விரஜானந்தர் என்ற பெயரில் துறவியானவர், இளைஞர் காளி கிருஷ்ணர். 1902ல் விவேகானந்தர் மறைந்த போது, பிரிவுத் துயரம் காளிகிருஷ்ணரைப் பெரிதும் வாட்டியது. அதனால் ஒன்றரை ஆண்டு முழுமையான மௌன விரதமும், நாள்தோறும் பதினைந்து மணி நேர தியானமுமாகக் கழித்தார் அவர். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவர் உடல் நிலை மருத்துவர்களால் காப்பாற்ற இயலாத அளவு கடுமையாய்ச் சீர்கெட்டது.

அன்னை அவரை உற்றுப் பார்த்தார். பின் 'மகனே! இஷ்ட தெய்வத்தை நெற்றிப் பொட்டில் வைத்து தியானம் செய்யாதே. இதயக் கமலத்தில் வைத்துத் தியானிப்பாய்! நீ இப்போது இருக்கும் நிலையில் நீண்ட நேர தியானத்திற்கு இதயக் கமலம்தான் சரியானது!' என அறிவுறுத்தினார். இந்த நுணுக்கமான அறிவுரையைப் பின்பற்றத் தொடங்கியதும், அவர் உடல் நிலையில் விறுவிறுவென நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அவர் உயிர் காப்பாற்றப் பட்டது.

பரமஹம்சர் மறைவுக்குப் பின், சாரதா தேவி மந்திர தீட்சை வேண்டித் தன்னை நாடிய பக்தர்களுக்கு அவரவருக்கு ஏற்ற

திருப்பூர் கிருஷ்ணன்

அரவிந்த அமுதம்-11

மந்திரம் தந்து தீட்சை அளித்து வந்தார். அதை ஒரு முக்கிய ஆன்மிகப் பணியாகக் கருதினார். கடவுளின் அவதாரமாய் வாழ்ந்த தம் கணவரைத் தொடர்ந்து தரிசித்து, பரவச நிலையிலான அவர் அனுபவங்களை நேரில் கண்டதால், அன்னை மனத்தில் விவரிக்க இயலாத பிரமிப்போடு கூடிய ஆன்மிக எழுச்சி தானே ஏற்பட்டிருந்தது. ஞானத்தாலும் சாதனைகளாலும் கனிந்த பரமஹம்சரின் மனத்திற்கு இணையாக, அன்னை மனமும் பக்தியாலும் கருணையாலும் கனிந்திருந்தது.

தன் மனத்தில் பொங்கிய கருணைப் பெருக்கின் காரணமாக, அவர் மந்திர தீட்சை அளிப்பதில் சம்பிரதாயங்களைத் தாண்டிய புரட்சிகளை இயல்பாக நிகழ்த்தி வந்தார். ஒருமுறை தன்னைப் பெரும் உத்வேகத்தோடு அடிபணிந்த அன்பருக்கு புகைவண்டி நிலைய மேடையையே திருத்தலமாகக் கொண்டு, குடையையே வெயிலை மறைக்கும் கூரையாக்கி, மண்ணில் தேங்கிய மழைநீரையே மந்திர நீராக்கித் தீட்சை அளித்தார். இறையருளைப் பெற விழையும் பக்தரின் மன எழுச்சிதான் முக்கியமே தவிர, மற்றவை இரண்டாம் பட்சமே என்பது அன்னையின் கருத்து. தம்மை நாடிய குழந்தைகள் எல்லோரும் ஆன்மிக நிலையில் உயர வேண்டும் என்பது மட்டுமே அவர் நோக்கம். தம்மிடம் தீட்சை பெற்று, ஆனால் மந்திர ஜபம் செய்யாத ஒரு சிலருக்காகத் தாமே மந்திர ஜபம் செய்துவருமளவு அவர் கருணை எல்லை கடந்தது.

இதுபோன்ற பல செய்திகள் கல்கத்தாவிலேயே வாழ்ந்த ஸ்ரீ அரவிந்தரின் மனைவி மிருணாளினியை எட்டின. தெய்வப் பித்துப் பிடித்து, தெய்வமாகவே ஆன பரமஹம்சரின் மனைவி என்ற வகையில், தன்னையும் சாரதையையும் அவர் ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. அன்னை சாரதையின் மகள் எனக் கருதத் தக்க வயதுடையவர் மிருணாளினி.

அன்னையை நாடிச் சென்ற மிருணாளினி, அவரது பாதங்களில் சரண் புகுந்தார். கண்ணீரால் பளபளக்கும் விழிகளைத் துடைத்துக் கொண்டு, மந்திர தீட்சை தருமாறு வேண்டினார். அந்தக் கண்ணீர் ஏன்? வரவிருக்கும் தம் வாழ்வின் முடிவை உள்மனம் உணர்த்தியதாலா? அன்னையின் வாழ்க்கை போன்ற வாழ்க்கை தனக்கு அமைந்ததே, அன்னையைப் போல் ஆன்மிக நெறியில் மேலோங்கும் பக்குவமும் தமக்கு வர வேண்டும் என்ற பிரார்த்தனையால் விளைந்த கண்ணீரா? இல்லை. அடிக்கடி பாடாய்ப் படுத்தும் தம் உடல் நலக் குறைவை எண்ணிப் பெருகிய கண்ணீரா? அன்னை அவரை ஊற்றுப் பார்த்தார். ஆழ்மனத்தை ஊடுருவி, முற்பிறவி வரை சென்று பார்க்கக்கூடிய கூர்மையான பார்வை அது என்பார்களே! அன்னையிடமிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது. அதிக நாள் உயிர் வாழும் தெம்பில்லாத ஓர் அன்புமலர் தம்மைச் சரணடைகிறது என்பதை அன்னை உணர்ந்தாரோ! பரிவோடு மிருணாளினி




யின் கேசத்தைத் தடவிக் கொடுத்த அன்னை தியானத்தில் ஆழ்ந்தார். குருதேவர் தம் மனத்தில் தோன்றிப் பரிந்துரைத்த மந்திரத்தை உபதேசித்தார். தீட்சை பெற்ற மிருணாளினி, மந்திரத்தை மனதில் உச்சாடனம் செய்த வாறே நெடுநேரம் அன்னை முன் அமர்ந்திருந்தார். மனம் மெல்ல மெல்ல அமைதிப் படுவது போல் தோன்றியது. அன்னையை மறுபடி நமஸ்கரித்தார். பின் வீடு வந்து சேர்ந்தார்.

ஆனால் வாழ்க்கைச் சம்பவங்கள் அவரது மன அமைதியைத் தொடர்ந்து குலைத்துக் கொண்டுதான் இருந்தன. தீட்சா மந்திரத்தை ஜபித்து வந்தாலும், மனம் அதில் ஒன்றுவது கடினமாயிருந்தது. மனக் குமுறல்கள் அடங்கவில்லை. கணவர் பரோடாவிலும், தாம் கல்கத்தாவிலுமாக வாழும் வாழ்வு சலிக்கச் செய்தது. கணவரின் தீவிர அரசியல் ஆர்வம், கடுமையான ஆன்மிகப் பித்து இவற்றையெல்லாம்விட, உறவினர்களின் பேச்சு... அதைத்தான் தாங்க இயலவில்லை. ஸ்ரீ அரவிந்தரைப் பைத்தியம் என்கிறார்களே! உலகம் போற்றும் உத்தமரான என் கணவரைப் பற்றிய இப்படிப்பட்ட பேச்சைக் கேட்கும் நிலையில் என்னை ஏன் வைத்தாய் தெய்வமே!

அப்போதுதான் அந்தச் செய்தி மிருணாளினியை எட்டியது. அரவிந்தரைக் கைது செய்து விட்டார்களாம்! மிருணாளினியின் பேதை மனம் பட்ட பாட்டுக்கு எல்லையே இல்லை. "என் மணாளர் சிறையில் என்னென்ன கஷ்டங்கள் படுகிறாரோ! ஆங்கிலேயர்கள் பொல்லாதவர்கள். அப்பழுக்கில்லாத என் கணவரைச் சிறையில் தள்ளியிருக்கிறார்களே! அவர்கள் உருப்படுவார்களா! என் கணவருக்கு ஒழுங்காகச் சாப்பாடு போடுவார்களா! நல்ல நாளிலேயே சாப்பாட்டில் ஆர்வமில்லாதவர் அவர். நல்ல துணிமணிகள் அணிவதில்கூட அக்கறையில்லாதவர். அவருக்கு இப்போது கைதிகளுக்கான உடை அல்லவா கொடுத்திருப்பார்கள்!"

விம்மிய மிருணாளினி, துயரம் தாங்காது மறுபடி அன்னையைப் புகலடைந்தார். அவர் மடியில் தலைவைத்துக் கண்ணீர் பெருக்கினார். "என் கணவர் விடுதலையாகி வருவாரா?" என மீண்டும் மீண்டும் கேட்டுக் கதறினார். அவரது தலையைப் பரிவோடு வருடிய அன்னை "மகளே! உன் கணவர் மேல் சுமத்தப்பட்டுள்ள எந்தக் குற்றச்சாட்டும் நிரூபணமாகாது. கட்டாயம் விடுதலை

அருள்வாக்கு



நம் கோபம் எதிராளியை மாற்றாது. அவனுக்கும் நம்மிடம் கோபத்தை உண்டாக்குவதுதான் அதன் பலன். இரண்டு பக்கங்களிலும் துவேஷம் வளர்ந்து கொண்டே போகும். ஒருத்தன் தன் தப்பை தானே உணர்ந்து திருந்தச் செய்யாமல், நம் கோபத்துக்குப் பயந்து சரியாக நடந்து காட்டுவதில் நமக்குப் பெருமையில்லை. இது நிலைத்தும் நிற்காது. அன்பினாலேயே பிறரை மாற்றுவதுதான் நமக்குப் பெருமை; அதுதான் நிலைத்து நிற்கும்.

ஒருத்தன் பாபம் செய்ய அவனுடைய மனசு, சந்தர்ப்பம் இரண்டும் காரணமாகின்றன. நாம் பல பாபங்களைச் செய்ய முடியாமல் சந்தர்ப்பமே நம்மைக் கட்டிப் போட்டிருக்கலாம். எனவே, ஒரு பாபியைப் பார்க்கும்போது, "அம்பிகே! இந்தப் பாபத்தை நானும்கூடச் செய்திருக்கலாம். ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் தராமல் நீ கிருபை செய்தாய். அந்தக் கிருபையை இவனுக்கும் செய்யம்மா" என்று பிரார்த்திக்க வேண்டும்.

இரண்டாவதாக, நம்மை ஒருத்தர் துவேஷிக்கிறார் என்றும் கோபம் கொள்ள வேண்டியதில்லை. நாம் எத்தனை தூஷணைக்குத் தக்கவர் என்பது நம் உள் மனசுக்குத் தெரியும். ஒருகால் நம்மைத் தூஷிக்கிறவர் நாம் செய்யாத தவற்றுக்காக நம்மைத் திட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் செய்த தவறுகள் அதைவிடப் பெரியவை என்று நம் அந்தரங்கத்துக்குத் தெரியும். நம் தவறுகளைக் கழுவிக் கொள்வதற்காக, ஒவ்வொரு நாளும் அம்பாளிடம் பச்சாதாபத்துடன் அழ வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். இந்த நிலையில் உள்ள நாம் பிறரைத் தப்பு கண்டுபிடித்துக் கோபிக்க நியாயம் ஏது?

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

அடைவார்!" என ஆறுதல் படுத்தினார். அது தீர்க்க தரிசனமா, இல்லை பொதுவான ஆறுதல் வார்த்தைகளா! அரவிந்தர் விடுதலை அடைவார் என அன்னை சொன்னது, எந்த விடுதலையைப் பற்றி? ஆன்ம விடுதலையை நோக்கியல்லவா அரவிந்தர் சிறையிலும் யோகம் செய்துவந்தார்? உடல் சிறையிலிருந்து மிருணாளினியின் ஆன்மாவும் விடுதலை பெறத் துடித்துக் கொண்டிருந்ததே!

அரவிந்தர் விடுதலையானார். பாண்டிச்சேரிக்குச் சென்றார். 'தம் ஆன்மிக வாழ்வில் இணைய விரும்பினால் மிருணாளினியும் அங்கு வந்து சேரலாம்' என அவருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் அதற்கான வாய்ப்பே நேரவில்லை. இன்ஃப்ளூயன்சா நோயால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்த மிருணாளினி, கல்கத்தாவில் 1918ல் முப்பதாவது வயதில் காலமானார். (அப்போது சாரதாதேவிக்கு வயது அறுபத்தைந்து. மிருணாளினி காலமான இரண்டாண்டுகளுக்குப் பின் அன்னை சாரதை மகாசமாதி அடைந்தார்.) மிருணாளினியின் பதினேழு ஆண்டுக் கால மண வாழ்க்கை, இவ்விதம் முடிவுக்கு வந்தது.

பரமஹம்சர், அரவிந்தர் போன்றோர் பிறக்கும்போதே அவதாரங்களாகப் பிறக்கவில்லை. சராசரி வாழ்வில் ஈடுபட்டு, பின் தங்களின் கடும் ஆன்மிக முயற்சிகளின் மூலம் தெய்வ நிலை எய்தினார்கள். மானிட நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர, இறையருளோடு அவர்கள் மேற்கொண்ட கடின உழைப்பும், செய்த சாதனைகளும் மலைப்புத் தருபவை. தம் கணவரை உலகம் போற்றும் தெய்வமாகக் கண்டு தரிசிக்கும் பேறு, அன்னை சாரதைக்குக் கிட்டியது. கணவரது சீடர்களைக் கணவர் மறைவுக்குப் பின் வழி நடத்தும் வாய்ப்புங்கூட அவருக்குக் கிட்டியது.

ஆனால் மிருணாளினிக்கு அத்தகைய பேறு ஏதும் கிட்டவில்லை. அவரது கணவர் ஸ்ரீ அரவிந்தரை உலகம் தெய்வ நிலையில் கண்டு வியப்பதற்கு வெகுகாலம் முன்னரே மிருணாளினி காலமாகி, அந்த வகையில் தெய்வமாகிவிட்டார். என்றாலும், அரவிந்தர் நிகழ்த்திய உத்தர்பாராச் சொற்பொழிவு பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கக் கூடும். இந்தியாவையே உலுக்கியதும், அரவிந்தர் இன்னார் என எல்லோருக்கும் வெளிச்சமிட்டுக் காட்டியதும், சிறையிலிருந்து வெளி வந்த பின் அரவிந்தர் நிகழ்த்திய அந்த உத்தர்பாராச் சொற்பொழிவுதான். அந்தச் சொற்பொழிவு...

(அமுதம் பெருகும்)

நீங்கள் கேட்டவை -தராசு

பாடப் புத்தகத்தில் சச்சின் வரலாமா?



• அதிசய ஆணை!



• வேப்பங்காய் உரை

● உ. குணசீலபாண்டியன், இராசபாளையம்

? பாடப்புத்தகத்தில் சச்சின் இடம் பெற்றிருக்கிறாரே... இது அவசியம்தானா?

! மிக இளம் வயதில் மிகப் பெரிய சாதனை புரிந்த சராசரி இந்தியக் குடிமகன். அவர் ஒரு கிரிக்கெட் வீரர் என்பதால் மாணவர்களுக்கு உடனடி ஈர்ப்பு. பாடத்தைப் படித்தாலோ, நல்ல வழி காட்டல்.

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? ஜனாதிபதியின் உரை உற்சாகம் அளிக்கவில்லை என்கிறாரே வெங்கையா நாயுடு...?

! பின்னே, புதிய ஆட்சி, மத நல்லிணக்கத்துக்கு அளிக்கப்பட்டுள்ள ஆதரவு; அடிப்படை வாதத்தை மக்கள் புறக்கணித்ததன் அடையாளம் என்று அவர் சொன்னது, பா.ஜ.கவுக்கு என்ன, வைட்டமின் இன்ஜெக்ஷனாகவா இருக்கும்!



● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? அரசு விளம்பரங்களில் தமது போட்டோ கூடாது என்று பிரதமர் உத்தரவிட்டுள்ளாரே...?

! சபாஷ்!

● ஜே.டி. ஆனந்தன், மதுரை - 5

? தெய்வ நம்பிக்கை மனிதனிடம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும்?

! நமது நல்ல முயற்சிகளுக்குத் துணை நிற்பான் என்று நம்பும் அளவுக்கு.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? ராஜ்யசபா துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா பார்லிமெண்ட் கேண்டீனுக்கு 38.87 லட்சம் பாக்கி வைத்துள்ளாராமே... கௌரவமான பதவியில் அமர்ந்து கொண்டு, இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ள



● நடிக ராஜா!



வாழ்நாள் பரிசு



● மணியான மண்!



● சாதாரணர் சாதனை!

லாமா...?

! அதிர்ச்சி தருகிறது. வாங்கப்பட்ட பொருள்களின் பட்டியலைப் படித்தால் அவமானம் ஏற்படுகிறது!

● ஆர். கர்ணன்,
தனக்கர்குளம் (அஞ்சல்)

? கருணாநிதியின் இப்போதைய பலம் என்ன...? பலவீனம் என்ன...?

! பலம்: மக்கள் கொட்டிக் கொடுத்த வெற்றி;

பலவீனம்: மத்தியில் தட்டிப் பறித்த பதவி.

● எம். ஆரோக்கியதாஸ்,
உத்தமபாளையம்

? தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகளின் கூட்டம் நிரம்பி வழிகிறதே... அரசு மருத்துவமனைகளில் கூட்டம் இல்லையே...?

! சென்னை, ராயப்பேட்டை மருத்துவமனையில், அறுவைச் சிகிச்சையின்போது நீக்கப்பட்ட உடல் உறுப்பு, குப்பை அள்ளும் லாரிக்கு அப்படியே அனுப்பப்பட்டிருக்கிறது. விவரங்களை (செய்தியில்) வாசித்தால் வயிற்றைக் கலக்குகிறது. இது போன்ற அலட்சியப் போக்கு நிலவுகிற அரசு மருத்துவமனைகளுக்கு மக்கள் போக விரும்புவார்களா...? மாட்டார்கள்! ஆனால், வறுமை அவர்களை அங்கேதான் கட்டாயமாக அனுப்பி வைக்கிறது.

● இரா. சக்கரபாணி,
மதுரை - 7

? ஒரு நபர், இரு தொகுதிகளில் போட்டியிட்டு, வெற்றி பெற்ற பிறகு, ஒரு தொகுதிக்கான பதவியை ராஜினாமா செய்து விடுகின்றார். அத்தொகுதியில் மறுதேர்தல் நடத்துவதற்கான செலவை அவரிடமிருந்து வசூல் செய்யச் சட்டம் கொண்டு வந்தால், வீண் செலவைத் தவிர்க்கலாம் அல்லவா...?

! அதைவிட, ஒருவர் ஒரு தொகுதிக்கு மேல் போட்டியிடுவதைத் தடுத்துச் சட்டம் கொண்டு வரலாம். ஹூம்!... தேர்தல் சீர்திருத்தங்கள்... செய்ய வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன...!

● பா. அச்சுதன், வயலூர்

? சமீபத்தில் ரசித்துப் படித்த புத்தகம்...?

! 'Celebrating Silence'. மிகப் பெரிய வாழ்வியல் உண்மைகளை, மிக எளிய ஆங்கிலத்தில் மொழிந்துள்ளார் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர்.

● ஜி.பி. வைத்யநாதஷர்மா,
திருவண்ணாமலை

? 'ஆய்த எழுத்து' படத்தில் நடிகர்



மினி கல்கி
பெருவாழ்வு வாழ்க!

படம்: யோகா

பாரதிராஜா எப்படி...?

! நடிப்பு, உச்சரிப்பு படு இயல்பு... மேக் அப்பும் அப்படியே இருந்திருக் கலாம்!

● சு. மோகன், சிதம்பரம்

? அமைச்சரவையில் இடம் பெறாத கம்யூனிஸ்டு கட்சியினர், சபாநாயகர் பொறுப்பை ஏற்பது மட்டும் சரியா...?

! ரொம்ப சரி. தேர்தலையடுத்து, மத்தியில் நிலையான ஆட்சி அமைய காங்கிரஸுக்குக் குறைந்தபட்சம் பொதுத் திட்டத்தின் அடிப்படையில் வெளியே யிருந்து ஆதரவு அளித்து வருகிறார்கள் கம்யூனிஸ்டுகள். (அமைச்சரவையில் இடம் பெற கம்யூனிஸக் கோட்பாடுகள் இடம் தராது. முரண்படும்.) சபாநாயகர் நடுநிலையாளராக இருக்க வேண்டும் என்பதால், அந்தப் பொறுப்பு அக் கட்சி யைச் சேர்ந்தவருக்கு வழங்கப்பட்ட திலும், ஏற்கப்பட்டதிலும் தவறே கிடை யாது.

● என். பாலசுப்ரமணியன், திருச்சி -2

? டைரக்டர் ஸ்ரீதருக்கு Life Time Achievement Award தரலாயில்லையா...? (கல்கியாவது செய்யக் கூடாதா...?)

! அவரது நினைவுகளைத் தொட ராகப் பிரசுரித்த வகையிலேயே அவ ருக்கு நாங்கள் அவார்டு கொடுத்தாகி விட்டது.

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை

? கறுப்புப் பணத்தை வெளிக் கொணர புதிய திட்டங்களாமே...?

! ஏற்கெனவே கறுப்புப்பணம் வைத் திருப்போருக்குச் சலுகை வழங்குகிற மாதிரியும், மன்னித்து விடுகிறது போல வும் கொண்டு வரப்பட்ட திட்டம், கடு மையான விமர்சனங்களுக்கு உள்ளா யிற்று. அதுபோல் திரும்பவும் அமைந்து விடக் கூடாது. குறைந்தபட்ச வரிகள் அதைச் செலுத்தாதவர்களுக்கு அதிக பட்ச தண்டனை என்பதே நீதி - நியா யம்.

● மா. உலகநாதன், திருநீலக்குடி

? இரயிலில் இனி டீ - காபி மண் கோப்பைகளில்தான் என லாலு ஆணையிட்டுள்ளாரே...?

! கொஞ்சம் தான் தோன்றித்தன மாகத் தோன்றினாலும், இந்த உத்தர வால், பாண்டம் செய்வோர் பல்லாயிரம் பேர் பயனடைவார்கள். பிளாஸ்டிக் காகித கோப்பைகளைக் காட்டிலும் மண்பாண்டம் சுகாதாரமானது; காலத் தில் மண்ணோடு மண்ணாகி மறைய கூடியது.

❒ ரூ 100 பரிசு பெறுபவர்:
உ. குணசீலபாண்டியன்,
10, தர்மாபுரம் தெரு,
இராசபாளையம் - 626 117

* ரூ 50 பரிசு பெறுபவர்:
லெ.நா. சிவகுமார்,
13, பாலாஜி ஃப்ளாட்ஸ்,
பழைய எண் 81/ புதியது 32,
ஆர்யகௌடா சாலை, சென்னை - 600 033

அன்பே ஆஸ்திகம்!

அமரர் கல்கி

கல்கி கடிதங்கள் தொகுப்பிலிருந்து



• திருமூலர்



உண்மையான ஆஸ்திகர்கள் அவ்வளவாக மகிழ்ச்சி கொள்ள முடியாத, ஏன், வருத்தமே கொள்ளத்தக்க சில நிகழ்ச்சிகளும் நடைபெற்றதை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

திராவிடக் கழகத் தலைவரின் உருவப்படங்களைக் கொளுத்துதல், அவரைப் போல் பொம்மைகளைச் செய்து உடைத்தல், கொடும்பாவி கட்டி இழுத்தல் போன்ற செயல்கள், ஆஸ்திகத் தன்மைக்குச் சிறிதும் பொருந்தாத அநாகரிகமான காரியங்கள்.

''அன்பே சிவம்''என்பது திருமூலரின் அருள் வாக்கு. ''அன்பே கடவுள்'' என்னும் கருத்தை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதத்தில் வலியுறுத்தியிருக்கிறது. உலகத்தில் தோன்றிய அவதார புருஷர்கள், மகான்கள் எல்லாரும் இதே கருத்தை வெவ்வேறு விதமாக வெளியிட்டிருக்கிறார்கள். எத்தனையோ பெரியோர்கள் தங்கள் செயல்கள் மூலமும் காட்டியிருக்கிறார்கள்.

ஆகையால் அன்பு நெறிக்கு மாறான செயல் எதுவும் ஆஸ்திகம் ஆக முடியாது. வாயினால் மட்டும் ஆஸ்திகம் பேசிக் கொண்டு உள்ளத்தில் நீசத்தனமான துவேஷத்தை நிரப்பி வைத்துக் கொண்டிருப்பவர்கள் தான், நாஸ்திகர்கள் மீது பழிக்குப் பழி வாங்க நினைத்து மேற்கூறியவை போன்ற செயல்கள் புரிவார்கள்.

உண்மை ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகத்தின் மீது வெறுப்பு இருக்கலாம்; ஆனால் நாஸ்திகர்கள் மீது வெறுப்பு இருக்கக் கூடாது. அந்த வெறுப்பைக் காட்டிக் கொள்ள இம்மாதிரி அருவருப்பான காரியங்களிலும் இறங்கக் கூடாது.

இவ்விதக் காரியங்கள் செய்ய வேண்டுமென்று விநாயகப் பெருமான் அவருடைய பக்த கோடிகளிடம் ஒரு நாளும் எதிர்பார்க்க மாட்டார். நாஸ்திகர்களை வேறு விதத்தில் தண்டிக்க வேண்டுமென்று கடவுள் விரும்பினால், அவரே அந்தக் காரியத்தைச் செய்து கொள்வார்.

ஆஸ்திகர்கள் தங்கள் பக்தியை வளர்த்துக் கொள்ளட்டும். ஆலயங்களில் ஆராதனை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை போன்ற காரியங்களில் மனதைச் செலுத்தட்டும். நாடெங்கும் இறைவனுடைய ஆயிரமாயிரம் திருநாமங்களும் முழங்கி ஒலிக்கும்படி செய்யட்டும்.

உருவ உடைப்பு, கொடும்பாவி இழுத்தல் முதலிய அநாகரிகமான காரியங்களை நாஸ்திகர்களுக்கே விட்டு விடுவது தான் முறை.

''அன்பே கடவுள்'' என்பதை ஆஸ்திகர்கள் ஒரு நாளும் மறந்துவிடக் கூடாது. அன்பு நெறியைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆஸ்திகர்கள் தங்களை உயர்த்திக் கொள்வது மட்டுமல்ல; நாஸ்திகர்களையும் மனம் மாறும்படி செய்வது சாத்தியமாகும். அன்பு நெறிக்கு மாறான முறைகளைக் கடைப்பிடிப்பதினால் ஆஸ்திகத்துக்கு எல்லா விதத்திலும் தீங்கே உண்டாகும்.

செய்திகள், திரிப்பது

செம்பியன்

"குட் மார்னிங், மிஸ்டர் நடராஜன்!"

"குட் மார்னிங்" என்றார் புதிய போலீஸ் கமிஷனர் - சென்னை மாநகர்!

"போலீஸ்காரங்களுக்குப் பத்துக் கட்டளைகள் பிறப்பிச்சிருக்கீங்க... பொது மக்கள்கிட்ட எப்படி நடந்துக்கணும்கிறதுக்கு... படிக்க ரொம்ப நல்லா இருந்துச்சு..."

"பழக்கத்திலயும் வரும்" என்றார் உறுதியாக.

"இப்படித்தான் எல்லா கமிஷனர்களும் பதவி ஏற்கிற அன்னிக்குச் சொல்றாங்க... போகப் போக 'பழைய குருடி, கதவைத் திறடி'ன்ற கதையா, பழைய டிராக்குக்கே நிலைமை மாறிடுது..."

"இப்ப அப்படியெல்லாம் நேராது."

"நம்பறேனுங்க... அப்புறம் டிராஃபிக் கான்ஸ்டபிள்களுக்கும் சேர்த்துப் பேசியிருக்கீங்க... அதானால சொல்றேன்..."

"சொல்லுங்க, கவனிக்கறேன்."

"டிராஃபிக் சிக்னல்ல ஆடோமாடிக் உண்டு போலீஸ்காரங்க மான்யுவலாகவும் ஆபரேட் பண்ணலாம்..."

"ஆமா, அதுக்கென்ன...?"

"தானியங்கி முறையிலே அதை சும்மா விட்டுட்டா - குறிப்பா பீக் அவர்ல - டிராஃபிக் நாலு பக்கமும் தடையில்லாம மாறி மாறிப் போகும். தங்களை சூப்பர் காப்பாக நினைச்சு, இவங்க தேவையில்லாம டிராஃபிக் ஸ்விட்சுல கை வைக்கிறாங்க...கிலோ மீட்டர் நீளத்துக்கு பஸ், கார், டூ வீலர், ஆட்டோ எல்லாம் நின்னு போவுது தேவையில்லாத தாமதம்..."

"இப்போதைக்கு உன் அதிகப் பிரசங்கத்துக்கு ரெட் சிக்னல் போடறேன்" என்று கால் பட்டனை அழுத்தினார். டூட்டி கான்ஸ்டபிள் உள்ளே எட்டிப் பார்க்க, சாதுவாக வெளியேறி ஃப்ளைட் பிடித்து... டில்லி.

பிரதமர் காரியாலயம்.

"நல்ல வேளை, சோனியாவைத் தேடி நீங்க போகாம, அவரே உங்களை வந்து பார்க்கிறதுன்னு ஏற்பாடாச்சு..."

"எனக்கே பிடிக்கலைப்பா...நான் சோனியாவைத் தேடிப் போறதுதான் நியாயம். ஆனா நடைமுறை 'புரோட்டோகால்'னு ஒண்ணு ஏற்படுத்தித் தொலைச்சிருக்கானுங்க... பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேர்ந்து மரபு உருவாகி வந்திருக்கு..."

"அதெல்லாம் தேவைதானுங்க. இல்லாட்டி தலைக்குத் தலை நாட்டாண்மைன்னு..."





"...அல்லது தடி யெடுத்தவன் தண்டல் காரன்னு ஆகிப் போகும்!"

''அட! தெரிஞ்சு வைச் சிருக்கீங்களே! அதே மாதிரி ஆயக்கட்டு உரி மைன்னு ஒண்ணு இருப்பதும் உங்களுக் குத் தெரிஞ்சிருக்கும்...''

"தெரியாம என்ன!"

''அப்ப எதுக்கு 'பருவமழை நல்லா பெய்யும், பிரச்னை இருக்காது'ன்னு சொல்லி சாமி கும்பி டறீங்க?''

"அதுல என்ன தப்பு?"

"பருவ மழை பொய்க்கும் போது, அல்லது குறையும் போது என்ன பண்றதுன்றதுதானே பிரச்னையே!"

"என்ன செய்யணும்கிறே?"

''ஒண்ணு, தமிழ்நாட்டுக்குத் தண்ணி திறந்து விடணும், அல்லது தஞ்சை விவசாயிக்கு ஏற்படற நஷ்டத்தைக் கர்நாடக அரசு ஈடுகட்டணும்.''

"ஐயோ! கோடிக்கணக்குல செலவாகுமே!"

"கோடிக் கணக்குல தமிழகத்துக்கு நஷ்டம் ஏற் படுத்தி, கர்நாடகாவுல பயிர் நிலத்தை ஏராளமா அதிகப்படுத்தி கோடிக்கணக்குல சம்பாதிக்கிறாங் கல்ல...?"

தாடியைத் தடவிக் கொண் டார் ம.மோ.சி.

"அடிப்படை விஷயத்தை ஒப்புக் கொள்ளாத போது, எத்தனை தூதுக்குழு, எத்தனை பார்வையாளர் குழு, எத்தனை நீதிமன்ற முறையீடு – தீர்ப்பு, எத்தனை நதிநீர் பங்கீடு ஆணையம் ஏற்படுத்தினாத் தான் என்ன பிரயோஜனம்?" என்றேன்.

''இருஷ்ணராஜசாகர் ரொம்புதாம். சீக்கிரம் அணை திறந்து விட்டுருவாங்க. நீ கிளம்பு'' என்றார் ம.மோ.சி.

"இப்படியே சொல்லிச் சொல்லி காலத்தைக் கடத் துங்க; ஐந்து வருஷ மானால் அடுத்த தேர்தல் வந்துடும்; அப்புறம் பார்த் துக்கலாம்'' என்று கூறி விட்டு, சோனியாஜி இல்லம் சென்றேன்.

"தேர்தல்ல ஜெயிச் சாச்சு; ஆட்சி அமைச் சாச்சு, இன்னும் இங்கேயே இருந்தா எப்படி? உங் களுக்கு வோட்டுப் போட்டு பெரிய வெற்றி களைத் தந்த வாக்காளர் களைப் போய்ப் பார்க்க வேண்டாமா? குறிப்பா தமிழ்நாட்டுக்கு வந்து ஒரு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடத்த வேண்டாமா?''

''எங்கப்பா, நேரமே யில்லை...''

''நேரத்தை ஏற்படுத் திக்குங்க; ராகுல் - பிரியங் காவுடன் வந்து சென்னை யில், மதுரையில், ரெண்டு கூட்டம் போட்டுப் பேசுங்க, இல்லாட்டி...''

"இல்லாதபோனா...?"

''இந்தத் தேர்தல்ல ஜெயலலிதாவுக்கு நடந்தது, நாளைக்கு உங்களுக்கும் நடக்கலாம்'' என்று கூறி விட்டு, சென்னைக்கு ரிடர்ன் ஃப்ளைட் பிடித் தேன்.

கோட்டை. முதல் வர் அறை.

"கூவம் அடையாறு நதி

• நடராஜன்



மருந்து தயாரிக்கும் லதா ரஜினி!

Sugar fighter - எதை எதிர்த்துப் போராட இது? யெஸ்... நீங்கள் நினைப்பது சரி! இளைஞர்கள் முதல் வயோதிகர் வரை படாதபாடு படுத்தும் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் இயற்கை மருந்து தான் இது. இதைத் தயாரிப்பவர் லதா ரஜினிகாந்த்!

"கடந்த இருபத்தைந்து வருடங்களாக மேடம் இயற்கை உணவு வகைகளையும், ரசாயன உரம் போட்டு பயிரிடாத காய்கறி, கனிகளையும் சாப்பிடும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார். தனக்கு வரும் சின்ன உபாதைகளுக்குக் கூட மூலிகை மருந்துகளை உபயோகிக்கும் வழக்கம் உள்ளவர். அவர், யாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்' என்ற நோக்கில் பெரிய அளவில் இயற்கை உண களையும், மூலிகை மருந் களையும் தயாரிக்க, ஏ.ஆர்.எ ஹோம் புராடக்ட்ஸ் என்ற நி வனத்தைத் துவங்கிவிட்டார் என்கிறார்கள் லதா மேடத்தின் ஆஷ்ரம் பள்ளி நிர்வாகிகள்.

இவர்களுடைய தயாரி களைச் சமீபத்தில் காஞ்சி பெரியவர் ஸ்ரீ ஜயேந்திர பார்த்து மிகவும் பாராட்டினா "ஒவ்வொரு பொருளும் எப்படி தயாரிக்கப்படுகின்றன என்பதை ஆர்வமுடன் கேட்டறிந்தார் என்கிறார் நிர்வாகி சஞ்சய் "நாங்கள் ஆயுர்வேதக் கல்லூ வைத்திருக்கிறோம். உங்க நோக்கமும் எங்கள் நோக்கமு ஒன்றாக இருக்கிறது. இருவரு இணைந்து மனித குலத்துக்கு பாடுபடுவோம்" என்று சொல் யிருக்கிறார் ஸ்ரீ ஜயேந்திரர்.

நல்ல கூட்டணி!

- கௌ

படம் : ராஜ



களில் மேல் மட்டத்தில் அணைகள் கட்டி, நீர் தேக்கி, சென்னையின் குடிநீர். பஞ்சத்தைப் போக்க திட்டம் போடுறதா கேள்வி..."

"ஆமா, நல்ல யோசனைதானே...? சுலபமா நிறைவேற்றலாம்... செலவும் கம்மி..."

"மேல் பகுதியில் அணைகள் கட்டி விடலாம். ஆனால் இந்த நதிகளின் முகத்துவாரப் பகுதிகளில்தான் சென்னை நகரின் பாதாளச் சாக்கடைகள் வந்து சேர்கின்றன. அங்கே தண்ணீர் இல்லாமப் போச்சுன்னா என்ன கதி? ஏற்கெனவே கூவத்தின் துர்நாற்றத்தைச் சகிக்க முடியலை..."

"என்ன செய்யணும்கிறே?"

"ஸீயரேஜ் டிரீட்மெண்ட் பிளாண்ட் நிறுவி, சாக்கடை நீர் சுத்திகரிக்கப்படணும். சுத்திகரிக்கப்பட்ட நீர், சென்னை மாநகர தோட்டங்களுக்குப் போகணும். வண்டல் பகுதி இயற்கை எருவாக மூட்டை கட்டப்பட்டு வயல் வரப்புகளுக்கு அனுப்பப்படணும். ஜப்பானில் அப்படித்தான் நடக்குது..."

"ஐயோ! ரொம்பச் செலவாகுமே எப்படி சமாளிப்பேன்? ஏற்கெனவே அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தின் போது நியமிக்கப்பட்ட தற்காலி ஊழியர்களை இன்னும் வீட்டுக்கு அனுப்ப முடியாம, மாசம் ஆறுகோடி ரூபாய் தண்டத்துக்கு அழுது கிட்டு ருக்கேன்!"

"அப்ப ஒண்ணு செய்யுங்க.. சென்னை நகரவாசி ஒவ்வொருவருக்கும் மாசம் ஒரு சென்ட் பாட்டில் வாங்கிக் கொடுத் துடுங்க..."

"முதல்ல உன் மூக்குக்கு ஒரு கிளிப் போடறேன்; துர்நாற்றமே தெரியாது என்று கூறிய ஜெ., மேஜை மீதிருந்த ஒரு பிரும்மாண்டமான ஸ்பிரிங் கிளிப்பை கையிலெடுத்தார். அப்புறம் அங்கே ஏன் நிற்கிறேன்!

விசாரணை

நீலவண்ணன் எம்.எல்.ஏவாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன், ரேஷன் அரிசி தான் வாங்கிச் சாப்பிட்டார். இப்போது பாசுமதி அரிசி சாப்பிடுகிறார்.

எம்.எல்.ஏ. ஆனதுமே, ரேஷன் கடை பற்றிய புகாரை அவரிடம் யாரோ கொடுத்தார்கள். இந்தப் புகார் மனு பற்றி விசாரித்து ஆவன செய்தால், நீலவண்ணனின் மதிப்பு உயரும்.

ஆனால் விசாரிக்கத் தடங்கல் இருந்தது. பழைய ரேஷன் கடைக்குப் போவதில் உள்ள சங்கடம். அவருடைய அக்கா லட்சுமி இன்றும் அதே ரேஷன் கடையில்தான் ரேஷன் பொருள்களை வாங்குகிறாள்.

ஒரு யோசனையோடு தம் டாடா சுமோ வண்டியில் நீலவண்ணன் அக்கா வீட்டுக்குப் போனார்.

"என் வீட்டுக்கு வர இப்பத்தான் வழி தெரிஞ்சதாப்பா?" என்று அக்கா அலுத்துக் கொண்டாள்.

"இதுதானே அக்காம்மா வேணாங்கிறது. தலைக்கு மேலே. இப்பவும் ஒரு வேலையாத்தான் உங்கிட்டே வந்திருக்கேன்."

"என்ன வேலை?"

"ரேஷன்லே நீ அரிசி வாங்கிட்டியா?"

"வாங்கிட்டேன்."

"அந்த அரிசியைக் காட்டு பார்க்கலாம்."

அரிசி வெண்மையாய் ஒரு தூசு துரும்பில்லாமல் திகழ்ந்தது.

"நல்ல அரிசிதான் போடறாங்களா? அருமையா இருக்கே."

"ஆமாம்பா. நல்ல அரிசிதான்!"

"பின்னே புழுத்த அரிசி போடறாங்கன்னு புகார் எழுதிக் கொடுத்திருக்கிறானே ஒருத்தன்."


"அதுவா? நான் உன் அக்கான்னு ரேஷன்லே நல்ல அரிசி போடுறாங்க. மீதி எல்லாருக்கும் நல்ல அரிசி இல்லே. தூசு, தும்பு, குருணை எல்லாம் இருக்கு. மனுஷன் சாப்பிடுவானா அதை? ஆமாம். இன்னும் எத்தனை வருஷம் எம்.எல்.ஏவா இருப்பே?"

"அஞ்சு வருஷம். ஏங்க்கா கேக்கறே?"

"இல்லே. அது வரைக்கும் நல்ல அரிசியா சாப்பிடலாமேன்னுட்டுத்தான்!"

அதற்குமேல் புகாரை விசாரிக்க நீலவண்ணனுக்கு விருப்பமில்லை. புகார் கடிதத்தைக் கிழித்தெறிந்தார்.

ஆ.செல்வநாயகி



தெரிஞ்சுக்க மாமே!



— புதுப்பட்டி பரியமுத்து

காலேஜ் ஓபனாயாச்சு மாமே! புச்சா இந்த காம்பஸாண்ட வந்தா மண்டைல பல்ப் எரியற அளவுக்கு மேட்டருக்கீது. த்தோடா.... நான் படிப்பைச் சொல்லலை, இந்த மேட்டரைப் படி கண்ணு!

- வகுப்பறையில் ஏரோப்ளேன் விடலாம்.
- வகுப்பறையை விட கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் வெளியே என்ற ஞானோதயம்!
- பரீட்சைக்கு முதல் நாள் இரவு நைட்ஷோ சினிமா பார்க்கலாம்.
- எவ்வளவு லேட்டாக க்ளாஸுக்குப் போனாலும் சட்டுன்னு வரும் உறக்கம்.
- அழுக்கு ஜீன்ஸைத் தவிர எதை மாட்டினாலும் "என்ன மச்சி, பர்த்டேயா?" என்ற கமெண்ட்!
- ஒண்ணுமே படிக்காமல் சுபாலென்று டெஸ்டில் பாஸாகி முதல் ஐம்பதில் இடம்.
- கெட்ட பையனோடெல்லாம் சகவாசம் கூடாது என்று பெற்றோர் சொன்ன சாமுத்ரிகா லட்சணங்களெல்லாம் தன்னிடமே இருப்பது!
- காலேஜ் காம்பஸில் இருக்கும் ஒவ்வொரு ஹைதர் அலி கடிகாரமும் காண்பிக்கும் நேரம் வேறு வேறு.
- ஞாயிறன்று தான் ஜாலி என்பது எவ்வளவு தவறான கருத்து.
- கல்லூரிப் பேராசிரியர்கள் சூப்பர் ஸ்டார் போல உங்களுக்கு அவரைத் தெரியும். அவர்களுக்கு உங்களைத் தெரியாது.
- வெளிச்சம், கூச்சல், பயங்கரப் புழுக்கம் ரூம்மேட்டின் குறட்டை, நடுவே ஹாய்யாக உறக்கம்
- கூடப் படிக்கும் ஒவ்வொரு பெண்ணும் தேவதை ரேஞ்ச்.
- வெறும் சினிமாவில் தான் இப்பேர்ப்பட்ட காரெக்டர் என்று நினைத்தவர்களெல்லாம் கல்லூரி வளாகத்தில்...
- நம்முடைய ட்ரஸ்ஸை நாம் போட்டுக் கொள்ளவே முடியாது.
- விடியற்காலை, சூரியோதயம் என்றால் என்ன





கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)

8 பக்கங்கள்
20, ஜூன் 2004 இதழுடன் இலவச இணைப்பு

சி.ஐ.பி

இதுதான் செம ஹாட் மச்சி!

–அரசியல் ஆசையில் சுசித்ரா

காலையில் எழுந்தவுடன் சோம்பலை மிர்ச்சி ஸ்டுடியோவில்தான் முறிக்கிறார் சுசித்ரா. பல வருடங்களுக்கு முன்பு 'மெட்ரோ ப்ரியா' கிளப்பிய புயலை மீண்டும் உருவாக்கியிருக்கிறார். ரேடியோ ஜாக்கி, பாடகி, ஆங்கில எழுத்தாளர், நடிகை.. என நீளுகிறது இவரது அடையாளங்கள். சி.ஐ.பி (Chennai's important person) பகுதிக்காக அவருடன் கலந்தோம்.



க்ளிக்: முகில்

● பாடறவங்க அதிகமா பேச மாட்டாங்க. ஆனா நீங்க...

நான் முதல்ல பாடகிதான். அப்புறம் உங்க கேள்விலையே மறுக்கறேன். ரேடியோ மிர்ச்சியில நான் பண்ற நாலு மணி நேர ப்ரோக்ராமில அரைமணி நேரம்தான் பேசறேன். ஆனா கிளப்.எம். லாலே பேசிக்கிட்டே இருக்காங்க என்கிற மாதிரி இங்க அதிகமாகவே இருக்கு.

● டீ.விலைத் தொடர்ந்து 'தமிழ்க் கொலை' ரேடியோவிலும் தொடர்வது பற்றி?

மிர்ச்சியில அப்படி கிடையாது. வி.ஜே. ஸ்டைலில் நுனி நாக்கு தமிழ் பேசற நிறைய பெண்கள் இன்டர்வியூக்கு வந்திருக்காங்க. ஆனா நல்ல தமிழ் உச்சரிப்புள்ள ஆட்களைத்தான் செலக்ட் பண்ணியிருக்காங்க! நானே தமிழ்க் கொலை செஞ்சிருந்தா, ஒரு அறுபது சதவிகிதம் பேர்களாவது வேற ஸ்டேஷனுக்கு மாறியிருப்பாங்களே!

● மே மாதம் 98-ல் மேஜர் ஆன' பின்பு பாடிய பாடல்கள்?

ஒற்றன், ஜெய்க்குப் பிறகு மன்மதன், ஏய், தகதிமிதா இன்னும் சில பாடல்கள். ஆனா, எது எது படத்துல வரும்னு தெரியாது.

● தமிழில் எப்பொழுது சிறுகதை எழுதுவதாக உத்தேசம்?

'ஆத்துல' பேசற தமிழிலிருந்து, நான் இவ்வளவு தூரம் மாறினதே பெரிய விஷயம். கேரளாவில் வளர்ந்ததால் தமிழ் அவ்வளவு எழுதப் படிக்க வராது. அதோடு தமிழுக்கென்று எழுத்து நடை எனக்கு வரும்னு தெரியலை.

● பின்னணிக் குரல் கொடுக்கும் ஐடியா உண்டா?

தேனும் பாலும் கலந்த இனிமையான குரல் எனக்குக் கிடையாது. 'நந்திதாதாஸ்' மாதிரியான நடிகைகளுக்குத்தான் அது செட்டாகும். ஆனால் பார்த்திபனின் உதவியாளர் கிரீஷ் இயக்கும் 'ப்ரைட்ஸ் வான்டட்' படத்தில் நடிக்கும் மும்பை நடிகைக்கு ஆங்கிலத்தில் குரல் கொடுத்துள்ளேன்.

● ரஜினி வாய்ஸ் எடுபடாத நிலையில் சுச்சியின் வாய்ஸ் மக்களிடம் எடுபட்டிருக்கே!

ஆஹா... இப்படியெல்லாம் கேட்டு வேலைக்கு உலை வைச்சிடாதீங்கப்பா. பட், ரஜினியை மீட் பண்ணினால் 'ஐக்குபாய்' ஸ்கிரீன்ப்லேயில் வொர்க் பண்ண வாய்ப்புக் கேட்பேன்.


● 'ஆய்த எழுத்து' மாதிரி அரசியலுக்கு வர விருப்ப முண்டா?

ரொம்ப ரொம்ப ஆர்வமா இருக்கேன். தேங்க்ஸ், முதன்முதலா இந்தக் கேள்வியைக் கேட்டதுக்கு. இது மணிரத்னம் படத்தினால் எழுந்த ஆர்வம் கிடையாது. ஆனா ரொம்ப நாளாகவே அதை நான் யோசிச்சிட்டு இருக்கேன். வெளியேயிருந்து அரசியலை சும்மா குத்தம் சொல்றதைவிட, அதையே ஒரு கேரியரா எடுக்கத் தயாராயிட்டேன். யெஸ்.

(தானைத் தலைவி சுசித்ரா.. வாழ்க!)


எ.ச.நு. கண்ணன்

கார்ட்டூன் கார்னர்



- கதிரவன்

உள்ளே...



மனிதா உன் மனதைக் கீறி...

உச்சிதனை

"**வி**தை போடு மரமாகும், அவ மானம், படுதோல்வி எல்லாமே உர மாகும்!" என்ற இரு வரிகளை ஆட்டோ கிராஃபில் பாடி எல்லார் மனங்களிலும் குடியேறிவிட்டவர் கோமகன்! 'ராகப்பிரியா' என்ற முழுக்க முழுக்க பார்வை யற்றவர்களைக் கொண்ட இசைக் குழுவை ('ஒவ்வொரு பூக்களுமே' பாடலில் வருபவர்கள்) நடத்தி வரும் அவர் பேசிய போது,

"91-ல் 12 பேரோட ராகப்பிரியாவைத் தொடங்கினோம். இப்ப 8 பாடகர்கள் உட்பட 22 பேர் இருக்கோம். ஆயிரம் நிகழ்ச்சிகளைக் கடந்த முதல் பார்வையற்றோர் குழு நாங்க தான். 99 - அக்டோபர் 2ல் 16 மணி நேரம் தொடர்ந்து SPB தலைமை யில இசை நிகழ்ச்சி நடத்தி, லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்ல இடம் பிடிச்சோம். ஆனால் கின்னஸ்ல முடியல. 50 மணி நேரம் தொடர் நிகழ்ச்சி நடத்



துற திட்டம் இருக்கு. ஸ்பான்சர்ஸ் கிடைக் கம். தமிழ், தெலுங்கு, மலை யாளம், கன்னடம், ஹிந்தி, சில ஆங்கிலப் பாடல்கள் உட்பட, 1000க்கும் மேற்பட்ட பாடல்களை நோட்ஸ் இல்லாம பாடு றதுதான் எங்க ஸ்பெஷாலிட்டி! இப்ப பல கல்யாண வீடு கள்ல எங்கள் இசை ஒலிச்சிட்டிருக்கு. ஒரு படத்துக்கு இசை யமைக்க ம் என்பது என் கனவாக இருந்தாலும், எங்க குழு வுல இருக்க யாருக்காவது சினிமாவுல பின்னணி பாடுற வாய்ப்பு கிடைக்க ம்கிறதுதான் என் ஆசை. என் எல்லா வெற்றிகளுக்கும் மூல காரணம் என் கண்ணாக செயல்படுகிற என் காதல் மனைவி அனிதாதான்" என்றவரிடம் "ஒவ்வொரு பூக்களுமே..." பாடல் அனுபவத்தைக் கேட்டோம்.

"சேரன் சார் முதல்ல பீச் மணல்ல நாங்க ஏழெட்டுப் பேர் உட்கார்ந்து பாடுற மாதிரியும், சிநேகா இடையில வந்து சேர்ந்து பாட, மக்கள் கூட்டம் கூட, ஆயிரக்கணக்கில் வருவதாக, சிநேகா எங்ககிட்ட அதைக் கொடுத்திட்டுப் போகிற மாதிரியும் சிச்சுவேஷன் சொன்னாரு. ஆனா என் மனைவி, சேரன்கிட்ட, 'காசி' படத்துல விக்ரம் பாடுறதும், இந்த சிச்சுவேஷனும் பார்வையில்லாதவங்க பாடி பிச்சையெடுக்கிற மாதிரிதான் வருது! ஏன் அவங்க ஸ்டேஜ் - ஷோ பண்றதுபோல பண்ணக் கூடாதுன்னு கேட்டாள். 'ஷூட்டிங்குக்காக 15,000 ரூபாய் காசிட் பிரேஷன்ல கட்டிட்டேன்'னு சேரன் சொல்லிட்டுப் போயிட் டாரு. ஆனா மூணு நாளைக்கப்புறம் ஸ்டேஜ் - ஷோவா சிச்சுவேஷனை மாத்தி ஷூட்டிங் ஆரம்பிச்சாங்க. இரண் டாவது நாள் லஞ்ச்-பிரேக். நாங்க சில பாடல்கள் அங்க இருக்கிறவங்களுக்காகப் பாடினோம். சேரன் சார் அதுல மயங்கி, நானும் இரண்டு வரிகள் பாடுற மாதிரி சீனை மாத் தினாரு. இப்ப பா. விஜய்யின் அந்த இரண்டு வரிகள் என்னை எல்லா மக்களின் மனசுக்கும் கொண்டு போயிடுச்சு!" என்றார் புன்னகையுடன்.

என்ன... கோமகன் கச்சேரி கேட்கணும்னு காது நச்சரிக் குதோ... வர்ற ஜூன் 27 மாலையில, காமராஜர் அரங்கத்துல சித்ரா, ஹரிணி, கார்த்திக், சிநேகாகூடச் சேர்ந்து கலக்கப் போறாரு! டோண்ட் மிஸ் இட்!

கிளிக் + ச முகில்

"நரம்பு தளர்வதற்குள் ஜெயிப்பேன்"



தமது எழுத்துப்பணி, அலுவலகப் பணி இவற்றிற்கிடையே சமுதாயப் பணியையும் அமைப்பு ரீதியாகச் செய்துவரும் கபிலன் வைரமுத்து தங்களது Triple-S அமைப்பு குறித்து நம்மிடையே வெளிப் படையாகவும், மிகுந்த உற்சாகத்துடனும் பேசி னார்.

இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமிய மக்களின் கொள்கைகளான சத்தியம், சமாதானம், சகோதரத்துவம் இம்மூன்றையும் குறிக்கும் வகையில் Triple-S எனப் பெயரிட் டுள்ளதாகக் கூறும் அவர், இந்த இயக்கத்திற்கு பெயரிட்ட கணத்திலிருந்தே எதிர்ப்புகள் துவங்கி விட்டதாக வருத்தத்துடன் கூறுகிறார்.

"இளைஞர்களைத் தரமான அரசியலுக்குத் தயாராக்கும் தளமாக Triple-S விளங்குமென்றும் கூறுகிறார். அதற்கு இப்பொழுது உழைக்கத் துவங்கினால், நரம்பு தளரும் முன்னர் அத்தகைய தளத்தை அமைத்துவிட இயலும் என்பது அவரது நம்பிக்கை. ஆகவே Triple-Sல் "முதல் தலைமுறை அரசியலில் கடும் வாய்ப்புகள் அதிகம் இல்லை" என்று கூறும் போது கபிலனின் கொள்கைத் தெளிவு மீது நமக்கு ஒரு நம்பிக்கைக் கீற்று தென்படுகிறது.

"அரசியல் என்பது தனிமனித முகங்களால் அடையாளம் காணப்படாமல் அதன் கொள்கைகளால் அடையாளம் காணப்பட வேண்டும்" என்று கூறும்



கபிலன், "இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்ற சமுதாயத்தின் அழைப்பை, இளைஞர்களிடமிருந்து நல்ல அரசியல் வர வேண்டும் என மாற்றிக் கொள்ள வேண்டும்" என கோரிக்கையும் விடுக்கிறார்.

இயக்கத்தின் எதிர்காலத்திட்டம் பற்றிக் கூறுகையில், சட்டங்கள் பற்றிய புத்தகமொன்றை வெளியிட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகையை, குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர்த் தொட்டிகள் அமைத்துத் தர இருப்பதாகக் கூறினார். மேன்மேலும் மக்கள் பணியாற்ற பல்வேறு திட்டங்கள் கைவசம் இருப்பதாகவும், அவை ஒவ்வொன்றாக செயல்வடிவம் பெறும் என்றும், அதற்கு மீடியாக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் கூறி முடித்தார்.


கபிலனின் புதிய பாதை நிச்சயம் வெற்றிப் பாதையாக இருக்கும் என்பதை அவரது எச்சரிக்கை உணர்வுடன் கூடிய நிதானமான வார்த்தைகள் தெளிவாக்கி விட்டன.

ச இரா. முத்துக்குமார்


மூளைக்கு வேலை

கீழே படத்தில் அங்கங்கே கிடக்கும் ஆறு துண்டுகளை அழகாய் சேர்த்தால் ஒரு வடிவம் கொண்டு வரலாம்... எப்படி? அதுதான் உங்க வேலை! என்ன ஆரம்பிச் சாச்சா...

விடை... ஆறாம் பக்கம் அமர்ந்திருக்கு தேடி.



அட! சென்னை ஒளிர்கிறது!



அட்சய திருதியையின் பொழுது நகைகள் வாங்க மிஸ் பண்ணியவர்களுக்கு, மற்றுமொரு தங்கமான வாய்ப்பு. அண்ணாசாலை ஸ்ரீசக்தி பாதம்ஸ் அருகிலுள்ள பூம்புகார் நிறுவனத்தில் 'ஜுவல் எக்ஸ்போ 2004' எனும் தங்கநகை கண்காட்சிக்கு வந்து பாருங்க. அசந்து போயிருவீங்க. ஜெய்ப்பூர், ஹைதராபாத், பெங்களூர் என பல இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட நவரத்தினக் கற்கள், ராசிக்கற்கள், செயற்கை வைரங்கள், அமெரிக்கன் வைரங்கள், முத்து - வெள்ளி நகைகள் என



அத்தனையும் ஒரே ரேஞ்ப் பார்க்கும்போது, ஆமா அட, இந்தியா ஒளிர்கிறது என ஒப்புக் கொள்வீர்கள். ஜூன் 19ம் தேதி வரையுள்ள இக் கண்காட்சியிலுள்ள நகைகளுக்கு 10% தள்ளுபடியும் உண்டு. (நவரத்ன மாலையொன்றின் விலை கேட்டோம். பதில் - 80,000 ரூபாய் என்று வந்தது. ஆனால் அதன் அழகின் முன்பு காசெல்லாம் தூசுதான்.)

- ச.ந. கண்ணன்

நங்கநல்லூர் ஹீரோஸ்

சில ஆண்டுகளுக்கு முன்புவரை நள்ளிரவுக் கொள்ளைகளுக்குப் 'புகழ்' பெற்ற நங்கநல்லூர் லட்சுமி நகர், இன்றைக்கு முற்றிலும் மாறிவிட்டது. இதற்குக் காரணம் அப்பகுதி மக்கள் அமைத்துள்ள அசோசியேஷனும் நைட் பெட்ரோலிங் குழுவும்தானாம். அந்த டீமின் 'செயல் வீரர்களில்' இளைஞர் முதல் ரிட்டையர்டு அதிகாரிகள் வரை உள்ள



னராம். அவர்களே மாதிரி காவல் துறையாக மாறி தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனராம். இதுவரை கிட்டத்தட்ட ஏழு செயின் திருட்டுக்களைக் கண்டுபிடித்து மீட்டுத் தந்துள்ளதாகக் கூறும் அவர்கள், ஒரு வங்கித் திருட்டையும் முறியடித்துள்ளனராம்.

இந்தத் திருட்டுகள் நடந்ததற்குக் காரணம், போதிய அளவில் காவல்துறை அதிகாரிகள் இல்லை என்பதும் அவர்களது குற்றச்சாட்டு. இதற்குத் தீர்வாக, ஒன்று VIPக்களின் பந்தோபஸ்திற்கு தனிப்படை அமைக்க வேண்டும் அல்லது இரவு நேர ரோந்துப் படை ஒன்றை தனியாக அமைக்க வேண்டும் என்பது இவர்களின் வேண்டுகோள்.

(அதெல்லாம் நடக்குமாங்க! 'திருடனாய்ப் பார்த்து...' பாட்டுக் கோட்டையார் வரிகள்தான் இதற்குத் தீர்வு)

கிளிக் + ச. கலை

ப்ளாக் கேட்ஸின் கிரேப்ஸ் கனவுகள்!

அம்மா எப்போது ஹைதராபாத் செல்வார் என அமைச்சர்களோடு சேர்ந்து கறுப்புப்பூனை படையினரும், இதர பாதுகாவலர்களும் ஆர்வத்துடன் உள்ளனர். காரணம், அம்மா ஒவ்வொரு முறையும் திரும்பும்போது பெட்டி பெட்டியாக தோட்டத்து திராட்சைகள் அவர்களுக்குக் கிடைக்குமாம். எனவே 'ருசி' கண்ட பூனைகளாக கறுப்புப்பூனைகள் சப்புக் கொட்டி காத்துக்கிடக்கின்றன.

'உதயநிதி'யும் ஆரம்பிச்சாச்சு!

தேர்தல் நேரத்துல 'எதிர்வாய்ஸ்' கொடுத்தும், ஐக்குபாயின் பஞ்ச் டயலாக் விளம்பரம் மூலமும், தி.மு.க.வை ரஜினி வெறுப்பேற்ற, தமது வாரிசு உதயநிதி மூலம் திருமண அழைப்பை ரஜினிக்கு அனுப்பி பதிலடி கொடுத்தார் ஸ்டாலின். இது குறித்து வருத்தப்பட்டு பேட்டியளித்த ரஜினிக்கு, மீண்டும் தம் வாரிசு மூலம் "நாங்க எல்லாம் முறையா செஞ்சோம். ரஜினி வீட்டில் உள்ள வேலையாட்கள்தான் முறை தவறி நடந்துகிட்டாங்க!" என பதில் அறிக்கை கொடுத்து மேலும் 'முறைப்பை' கூட்டியுள்ளார்!

(ஓ.கே... உதயநிதியும் அறிக்கை விட ஆரம்பிச்சாச்சு!)



டாஸ்மாக் வார்

'டாஸ்மாக்'கில் ஒரு புதுப் பிரச்னை தலையெடுத்துள்ளது. ஏற்கெனவே 'டாஸ்மாக்'கிற்கு சரக்கு சப்ளை செய்து வரும் மிடாஸ்க்கு நிறுவனம் தற்போது புது பிராண்டுகளை அறிமுகப்படுத்தி, அவற்றையும் 'டாஸ்மாக்' மூலமாகவே விற்பனை செய்ய அனுமதி வாங்கிவிட்டதாம். அதிர்ச்சியடைந்த மற்ற நிறுவனங்கள் மேற்படி கம்பெனி என்ன 'டாஸ்மாக்'கின் monopoly யா? என பிரச்னை எழுப்புகிறார்களாம்!

(விடுங்கப்பா... எல்லாம் 'குடிமக்கள்' நலனுக்காகத்தான்!)

புலியை அனுப்பும் கலைஞர்!

பிரஸ் மீட் ஒன்றில் காஷ்மீர் விவகாரம் குறித்த கேள்விக்கு, கலைஞர் ஒரு வரியில் பதிலளிக்க, ஒரு பெண் நிருபர் குறுக்கிட்டு, 'ஒரு லைன் பத்தாது'ன்னு சொல்ல, 'ஒரு லயன் பத்தாதுன்னா, ஒரு டைகரை அனுப்புகிறேன்' என கலைஞர் நகைக்க, அந்த நிருபர் அசடு வழிந்தார்.

(இனி தமிழ்நாட்டில் எல்லாரும் புலி பற்றிப் பேசலாமா?)

அணித் தலைவராகிறார் சச்சின்!

அணிக்கு புது ரத்தம் பாய்ச்ச, சச்சினைத் தலைவராக்க முடிவு செய்துள்ளதாம் தலைமை! எந்த அணின்னு கேட்கறீங்களா? நம்ம காங்கிரஸ் இளைஞர் அணிதான்! அணித் தலைவராகப் போகிறவர் சச்சின் பைலட் (S/o ராஜேஷ் பைலட்) இவருக்குப் போட்டி... ஜோதிர் ஆதித்ய சிந்தியா S/o மாதவ்ராவ் சிந்தியா).

(வாரிசுகளுக்காக உருவாக்கப்பட்ட இளைஞரணியிலேயே வாரிசுப் போட்டியா?)



வணக்கத்திற்குரிய ரேவதி

நடிகை ரேவதி தற்பொழுது சென்னையில் நடைபெறுகின்ற அநேக விழாக்களில் கலந்து கொள்கிறாராம். கருத்தரங்கிலிருந்து செல்போன் சர்வீஸ் சென்டர் திறப்பு விழா வரை, எல்லா வகை புரோகிராம்களையும் மாய்ந்து மாய்ந்து கவர் பண்ணுகிறாராம். வரவேற்பு ஓகோவாம். (ஒருவேளை 'வணக்கத்திற்குரிய' பதவியைக் குறி வைக்கிறாரோ?)

ச. கலை

டாக்கீஸ் டாக்

எனக்கு தமிழ்நாட்டு மாப்பிள்ளை!





இழுத்துப் போர்த்தி நடித்தாலும் தமிழ் சினிமாவில் நீடித்திருக்க முடியும் என்பதற்கு உதாரணம் ஸ்நேகா. நம் பக்கத்து வீட்டுப் பெண் மாதிரி சென்னை சுடிதாரில் ஜொலித்தவர் படபடவென நம்மிடம் பேசினார்.

"பார்த்திபன் கனவு'க்குப் பிறகு இனி நல்ல கேரக்டர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனா ஏனோ அப்படி நடக்கலை. 'ஆட்டோகிராஃப்'க்கும் பிறகு 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்', 'கவசம்', 'போஸ்', 'அது'ன்னு கைநிறைய படங்கள். என்னுடைய பொறுமைக்குப் பலன் கிடைச்சிருக்கு.

கமலோட ஜோடியா நடிச்சாலும் முத்தக் காட்சிகள் எதுவும் அதில் கிடையாது. சேரன் படத்துல நடிக்கும்போதுகூட முத்தக்காட்சிகளிலெல்லாம் நடிக்க மாட்டேன் என்று கூறித்தான் 'ஆட்டோகிராஃப்பில் நடித்தேன்.

அடடா, நாம பேசாம தமிழ் தெரியாத மும்பை நடிகையாக இங்க வந்திருந்தா, நிறைய சான்ஸ் கிடைச்சிருக்குமேன்னு நான் என்னைக்கும் நினைச்சதில்லை. தமிழ்ப் பெண்ணா இருக்கறதுக்காக பெருமைப்படறேன். நான் மும்பையில் பிறந்து ஹிந்தி படித்து வளர்ந்தவள். எனக்கு தமிழில் பேசத்தான் பிடிக்கும். ஆனால் இங்கேயே பிறந்து தமிழ் படத்தில் நடித்து தமிழ் பேசத் தெரியலைன்னு சில நடிகைகள் சொல்றதுதான் எப்படின்னு தெரியலை. எனக்கு தமிழ்நாட்டு கலாசாரம் ரொம்பப் பிடிக்கும். இந்த மக்கள் என்னை அவங்க வீட்டுப் பெண்ணா நினைக்கறாங்க. என் ஃபோட்டோ இல்லாத போட்டோ ஸ்டுடியோக்களே இங்கு கிடையாது. அதனால தமிழ் தெரிஞ்சதால பட வாய்ப்புகளை இழந்தேன் என்றால் போகட்டும். அப்படிப்பட்ட படங்கள் எனக்கு வேண்டாம்.

நான் அமெரிக்கா போய் மாப்பிள்ளை பிடிச்சிட்டு வருவேன்னு யாரும் நினைக்க வேண்டாம். எனக்கு தமிழ்நாட்டு மாப்பிள்ளைதான். ஆயுசு முழுக்க தமிழ்நாட்டுலேயே இருக்கத்தான் ஆசைப்படறேன். இங்க இருக்கிற சந்தோஷம் எங்கேயும் கிடைக்காது.

ஸ்ரீகாந்தோட மூணாவது முறையா ஜோடி சேர்ந்து 'போஸ்' பண்றேன். நல்லவேளை, இந்தமுறை பெரிசா கிசுகிசு எதுவும் வரலை. ஆனா பத்திரிகைகள்தான் எங்க இரண்டு பேருக்குமிடையே ஏதாவது நடக்குதான்னு ரொம்ப ஆர்வமா இருக்காங்க. நான் விபத்தில அடிபட்டு ஹாஸ்பிடல்ல கிடந்த மூணாவது நாள் புதுசா கிசுகிசு எழுதறாங்க. இதை விடுங்க. ஸ்ரீகாந்த் மேட்டரெல்லாம் ரொம்ப சாதாரணம். ஆனா என் பெண்மையை இழிவு படுத்தற மாதிரியெல்லாம் எழுதினதுதான் தாங்க முடியலை. இப்படி சில கோபங்கள் இருந்தாலும், என்னை ப்ரமோட் பண்றதும் அவங்கதான். படிக்கும்போது என் ஃப்ரெண்ட்செல்லாம் லவ் பண்ணாங்க. நான் பண்ணலை. ஆனா காதலிக்க நினைக்கும்போது நான் நடிகையாயிட்டேன். இப்போ யாரையாவது பார்த்துச் சிரிச்சாலே அது செய்தியாயிடும்.

'ஆட்டோகிராஃப்'புல சேரனை உயர்த்தற மாதிரி நிஜ வாழ்க்கையில் என்னால் அப்படிப் பண்ண முடியாது. காரணம் நான் ஒரு நடிகை. எங்க வாழ்க்கையே வேற. ஒரு சாதாரணப் பெண் வேண்டுமானால் 'திவ்யா' கேரக்டர் மாதிரி வாழ நினைக்கலாம். மழையில நனையறது, பீச்சுக்குப் போறது, சிக்கன் சாப்பிடறது போன்ற சாதாரண விஷயங்களையே என்னால பண்ண முடியலையே. சமீபத்துல அக்கா பையனுக்கு காது குத்தினோம். என்னால கோவிலுக்குள்ள போக முடியலை. காருக்குள்ளேயே இருக்க வேண்டியதாப் போச்சு. இதுதாங்க நடிகைங்களோட வாழ்க்கை.

- சரு. கண்ணன்







க்ளிப்பிங்ஸ்!

- "நான் அ.தி.மு.க.காரன் என்பதால், விஜய் அவரது படங்களில் என்னை நடிக்க விடுவதில்லை. அப்படியென்றால் அவர் தி.மு.க.வா?" என பார்ப்பவர்களிடமெல்லாம் விஜய்யைப் பற்றி குற்றம் சாட்டுகிறார் ராதாரவி!
- 'ஆய்த எழுத்து' படத்தில் பாரதிராஜாவுக்கு கறுப்புச்சட்டை அணிவித்ததோடு க்ளைமாக்ஸில் அவரை ஒதுக்கிவிட்டு, சூர்யா சட்டசபைக்குள் நுழைவது போல காட்சியமைத்ததற்கு மணிரத்னம் மீது ஒருசாரார் கடுங்கோபத்தில் உள்ளனர்.
- சிறிது ஓய்வுக்குப் பிறகு மீண்டும் இளையராஜா - வைரமுத்து கூட்டணியைப் புதுப்பிக்க சில அன்பு உள்ளங்கள் முயற்சி செய்து வருகின்றன.

- 'நெருக்கமான காட்சிகளா? ஐயோ!' என்றிருந்த மீரா ஜாஸ்மினும், சிங்கிள் ஹீரோயினாக மட்டுமே நடிப்பேன் என பிடிவாதம் செய்த த்ரிஷாவும், தமிழில் நடிக்க மாட்டேன் என முகம் திருப்பிய ஈஷா தியோலும் தங்களது விதிகளைத் தளர்த்தியதோடு சொந்தக் குரலிலும் பேசியுள்ளனர். எல்லாம் 'மணிரத்னம்' என்கிற மரியாதைக்காக மட்டும்தானாம். பாரப்பா!

தன்ராஜ் பிள்ளைக்கு ரெட் கார்டு!

அரசியலுக்கு நிகராக தன்ராஜ் பிள்ளையின் விவகாரம் ஹாக்கி வட்டாரத்தில் சூடு பிடித்துள்ளது. நிக. இந்தியன் ஹாக்கி ஃபெடரேஷனில் செயலாளராக இருந்த தமிழர் ஜோதி குமரன், இன்று ஏதென்ஸ் செல்லும் ஒலிம்பிக் டீமின் செயலாளர் + பொருளாளராக நியமிக்கப் பட்டுள்ளார். எழும்பூர் ஹாக்கி ஸ்டேடியத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். தன்ராஜ் பிள்ளை விவகாரம் பற்றி சூடு பறக்கப் பேசினார்.



"திருநெல்வேலியைச் சேர்ந்த நான் சிறு வயதிலிருந்து ஹாக்கியில் ஈடுபாடு இருந்ததால், நேஷனல் லெவல் வரைக்கும் விளையாடினேன். பின்பு நிர்வாகத் துறையில் படிப்படியாக வளர்ந்து, 1994ல் IHFன் செயலாளராக நியமிக்கப் பட்டு, இன்று ஒலிம்பிக் செல்லும் இந்திய டீமின் செயலாளராகவும், பொருளாளராகவும் உயர்வு பெற்றுள்ளேன்.

2001-ல் ஜூனியர் வேர்ல்ட் கப் சாம்பியன், மற்றும் u -16, u - 18, u - 21 மூன்றின் ஆசிய சாம்பியன் என, ஆசியாவில் நெ.1 அணி என்ற பெருமை நமக்குத்தான். கையில் சமீப காலமாக சிக்காமலிருப்பது ஒலிம்பிக் வெற்றி மட்டும்தான்.

ஏதென்ஸில்தான் முதன் முதலாக ஒலிம்பிக் நடந்தது. இப்பொழுது மீண்டும் அங்கு நடைபெறும் சமயத்தில் எனக்கு அளிக்கப்பட்ட இப் பதவியின் பணிகள், முன்கூட்டியே அங்கு சென்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதுதான். சுமார் தொண்ணூறு இந்திய வீரர்களைக் கண்காணிக்கும் பொறுப்பான பதவிதான் எனக்குக் கிடைத்துள்ளது.

தன்ராஜ் பிள்ளை விவகாரத்தை பத்திரிகைகளும், முன்னாள் ப்ளேயர்ஸும் தவறாகக் கையாண்டு விட்டார்கள். எங்கேயுமே அவரை ட்ராப் செய்வதாக அறிவிக்கப்படவேயில்லை. கில்லும், கோச்சும் அவரை ஓரங் கட்டுவதாகக் கூறுவது தவறு. ஃபிட்னஸ்தான் இதில் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று. இவ் விஷயத்தில் தன்ராஜும் ஒன்றுதான், புதிதாகச் சேர்ந்த சந்தீப் மைக்கேலும் ஒன்றுதான். தகுதியான பதினாறு வீரர்களைதான் IHF தேர்வு செய்ய முடியும்.

98ல் ஏஷியன் கேம்ஸில் வெற்றி வாகை சூடி, தன்ராஜ் பிள்ளை இந்தியா திரும்பியபோது அவரை வரவேற்கவில்லை என்று பத்திரிகைகள் எழுதுவது மிகத் தவறு. பாங்காக்கிலிருந்து டெல்லி வர வேண்டிய விமானம், அதிகாலை இரண்டு மணியளவில் பனிமூட்டம் காரணமாக மும்பையில் இறங்கியது யார் தவறு? அர்த்த ராத்திரியில் யார் வந்து ரிசீவ் பண்ணுவார்கள்? அடுத்தநாளே தாஜ் ஹோட்டலில் பாராட்டு விழா நடத்தி, ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் கொடுத்தோமே? தமிழரான அவர் தொடர்ந்து நான்காவது ஒலிம்பிக்ஸில் ஆட வேண்டுமென்பது எங்களுக்கும் ஆசைதான். ஆனால் அவரும் அதற்குத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டாமா?

சில பேர் அவர் பதினைந்து நிமிஷம் விளையாடினாலும் தூள் கிளப்பி விடுவார் என்று சொல்கிறார்கள். ஆனால் எழுபது நிமிடத்திற்கு மேல் ஆடக்கூடிய ஃபிட்னஸ் இருந்தால்தான், அந்தப் பதினைந்து நிமிடமும் ஒழுங்காக விளையாட முடியும்.

இப்பொழுது தினமும் நான் கோச்சிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். பிள்ளையின் ஃபிட்னஸ் லெவல், இங்கேயும் மற்றும் தற்பொழுது ட்ரெயினிங்கிற்காக யு.எஸ். சென்ற இடத்திலும் டெஸ்ட் செய்து பார்த்ததில், அவர் Recovery and Endurance (அதாவது அட்டாக் செய்து திரும்பி வந்து போவது) இன்னமும் இம்ப்ரூவ் செய்ய வேண்டும் என்கிற ரிசல்ட் வந்துள்ளது. அடுத்ததாக ஹாலந்திலும், ஜெர்மனியிலும் நடக்கவிருக்கும் போட்டிகளின் மூலம், பிள்ளை மற்றும் யார் யார் ஃபிட்னஸ் லெவலில் பின் தங்கியிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்து விடும். இதற்குப் பிறகுதான் பதினாறு பேர் கொண்ட ஹாக்கி டீம் ஏதென்ஸுக்குத் தேர்வாகும். ஸோ, பிள்ளைக்கு இன்னமும் சில சான்ஸ்கள் இருக்கின்றன.



• ஜோதி குமரன்

பெனால்டி கார்னர் ஸ்பெஷலிஸ்ட் ஜுக்ராஜ் சிங், விபத்தில் ஏற்பட்ட காயத்தால் இம்முறை அவரால் ஒலிம்பிக்கில் விளையாட முடியாது. இதுதான் நமக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு.

அடுத்ததாக டில்லியில் காமன்வெல்த் கேம்ஸ் நடக்கவுள்ளது. இதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளை வைத்து இந்தியாவுக்கு 2016ல் ஒலிம்பிக்கை ஏற்று நடத்த ஒரு பொன்னான வாய்ப்பு கிடைக்கலாம்" என்றார் நம்பிக்கையுடன்.

(நடக்கும் களேபரங்களையெல்லாம் பார்க்கும்பொழுது எந்த ரெஃப்ரியும் வேண்டாம். இந்தியன் ஹாக்கி ஃபெடரேஷனே தன்ராஜுக்கு ரெட் கார்ட் கொடுத்து ஹாக்கியிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் போலிருக்கிறது. அதையும்தான் பார்த்து விடுவோமே?)

சந். கண்ணன்

ஆடுகளம்

தூள் க்ளிக்

க்ளிக்: முகில்



வாசகர்களும் தாங்கள் எடுத்த தூள் க்ளிக்குகளை சென்னை ஸ்கேஜுக்கு அனுப்பலாம். 'தூள்'-ஆ இருந்தா 'துட்டு' உண்டு ஜிகோ!

பக்தி ஜங்ஷன்

சுபிட்ச மண்டலி

"டேய் குழந்தே, இந்தா ஸ்வீட்"

பையன் கைநீட்டாமல் நிமிர்ந்து பார்த்தான். பக்கத்து ஃபிளாட்டுக்கு புதிதாக வந்திருக்கும் பெரியவர்.

"வேண்டாம் மாமா. தெரியாதவா கிட்ட வாங்கிச் சாப்பிடக் கூடாது. அப்பா சொல்லியிருக்கா"

"சந்தோஷம்" - பெரியவர் உள்ளே போய்விட்டார்.

மறுநாள் காலை - பையன் காயத்ரி ஜபம் பண்ணிக் கொண்டிருந்தான். பெரியவர் வந்தார். "என்ன பண்ணறே?"

"காயத்ரி ஜபம்."



"அதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா?" - பையன் விழித்தான்.


"என்ன, தெரியாதவங்க தர்ற ஸ்வீட் வேணாம். சரி. தெரியாத மந்திரம் சொல்லிப் போட்டுக்கற பூணூல் மட்டும் வேணுமா?"

சற்றுத் தள்ளி பேப்பர் படித்துக் கொண்டிருந்த பையனின் அப்பா எழுந்து வந்தார்.

"ஸார், இவனுக்கு மட்டுமில்ல, எனக்கும் இன்னும் இங்க பல பேருக்கும் கூட மந்திரமோ, ஜபமோ, அர்த்தம் தெரியாது - ரொட்டீனா பண்ணறோம். உங்களுக்குத் தெரியுமா? சொல்லித் தர முடியுமா?"

"முடியும், வாங்கோ"

குஜராத் அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆபீசில், வேலை பார்த்து ரிடையர் ஆகி, சென்னைக்கு வந்து சேர்ந்த ராஜாமணி ஐயரிடம் இப்படி ஒன்றிரண்டு பேராகச் சேர்ந்து வேதம் படிக்கவும், ஸஹஸ்ரநாம பாராயணம் பண்ணவும் ஆரம்பித்து, இன்று 53 பேர் கொண்ட ஸஹஸ்ரநாம பாராயண மண்டலியாக புழுதிவாக்கத்தில் உருவெடுத்திருக்கிறது. அனைவருமே சென்னையில் பெரும் நிறுவனங்களில் உயர் பொறுப்புகளிலிருப்பவர்கள். அத்தனைபேருக்கும் வேதம், ஸஹஸ்ரநாமம், ருத்ரம், உபநிஷத் என்று சொல்லித் தரும் ராஜாமணி ஐயர் இதற்காக நிர்ணயித்த ஃபீஸ், யார் தம் வீட்டில் வேத கானம் ஒலிக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டாலும் இன, மொழி, பேதமின்றி அத்தனை பேரும் அந்த வீட்டில் சென்று பாராயணம் பண்ண வேண்டும், இலவசமாக. தற்போது பாராயணம் 170ஐத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது.



• ராஜாமணி ஐயர்

வெறும் வேத பாராயணத்துடன் நிற்கவில்லை மண்டலி. சிவானந்த சரஸ்வதி இல்லம், உதவும் உள்ளங்கள் போன்ற ஆதரவற்றோர் காப்பில்லங்களுக்கு அவ்வப்போது சென்று, உணவு, உடை, பணம், எல்லாவற்றையும் விட, அவர்களுடன் இணைந்து ஆறுதலாகப் பழகி, ஆன்மிகம் பற்றிப் பேசி உதவுகிறார்கள். இன்னும் கோயில் திருப்பணி, சமூக சேவைகள் என்று திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஜூன் 25, 2004 "யாராச்சும் மெட்ராஸ் பக்கம் போய் மழை கிழைன்னு பெய்ஞ்சீங்களோ, தொலைச்சுடுவேன். எல்லாரிலும் உள்ளே போட்டுடுவேன். இங்க, தண்ணியில்லாத காடுதான்" - வருண பகவான் மேகங்களை மிரட்டி வைத்த மாதிரி, வானம் சுத்தமாயிருந்தது. நங்கநல்லூர் குருவாயூரப்பன் கோயில் மண்டபத்தில் ஆல் இந்தியா விஷ்ணுஸஹஸ்ரநாம கல்சரல் ஃபெடரேஷனுடன் மற்ற மண்டலிகளையும் இணைத்துக் கொண்டு, பெரிய அளவில் உக்கிரமாக ஜபம் நடக்கிறது. மண்டபத்தை, கோயிலை, வானத்தை நிரப்பிய ஜப கோஷம், வருண பகவானையே இழுத்து வந்து அந்த இடத்தில் மழை பொழிய வைத்தது. அந்தத் தேதியில் அதற்கு முன் குறைந்தது பத்து வருடங்களுக்கு மழை பெய்தது கிடையாது என்பதும், அன்றைக்கு பழுதான அளவுக்குக்கூட காற்றழுத்த மண்டலம் கிடையாது என்பதும், சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் இன்னும் தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்திருக்கிற உண்மை. சமீபத்தில் ஆஞ்சநேயருக்கு 1008 இளநீர் அபிஷேகம் நடத்தி பாராயணம் பண்ணின அடுத்த இரண்டு நாட்களும் மழை!

வீராணமும், எல்லர் அபோடைடும் சாதிக்க முடியாததை, எலக்ட்ரானிக் ஒலி அலைவரிசைகளை மீறி வானத்தில் ஊடுருவி வேத கோஷங்கள் சாதிக்கும். சென்னைக்கும், தமிழ்நாட்டுக்கும் சுபிட்சமும் மழையும் கொண்டு வரும். நம்புங்கள்!

- வீ

படம், தகவல்: வி.கே. மூர்த்தி

கறுப்பு வெள்ளையின் கலர்ஃபுல் செஞ்சுரி


ஒரு மனிதர் பிறந்து நூறு ஆண்டுகள் கழித்து அவரின் புகழ் கொண்டாடப்படுதல் அரிது. அப்படிப்பட்ட விழாதான் மறைந்த பிலே இயக்குனர் கே. சுப்ரமணியம் அவர்களின் வாரிசுகள் நடத்திய அவரின் நூற்றாண்டு விழா. திரையுலகமும் கலைத்துறையும் பெருந்திரளாக கலந்து கொண்ட கலர்ஃபுல் விழாவில் சுதந்தரத்திற்கு முன்பு ஆங்கிலேயர்களுக்கு எதிராக படங்களை எடுத்து மக்களிடம் தாய்ப்பற்றை வளர்த்த பெருமை கே. சுப்பிரமணியம் அவர்களையே சாரும் என அனைவருமே புகழ் பாடினர். "கேமரா போல நாட்டை ஆளுபவர்களை விமர்சிக்கும் தைரியத்தில் ஒரு சதவீதமாவது எனக்கிருந்தால் வாழும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக நினைத்துக் கொள்வேன்" என்றார் விழாவுக்கு வந்திருந்த கமல்.



ச. எழில்

க்ளிக் : மீடியா ராமு

ப்ரெய்ன் பாயிண்ட் விடை



எழுத்தாணி

துணையெழுத்து என்ற தொடர் மூலமாக வாசகர் பலரை வசியப்படுத்தியுள்ள எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனுடன் ஒரு சிறு உரையாடல்.


"இங்கிலீஷ்காரன்தான் இன்னும் இங்கே சைக்கிள் ஓட்றான்!"

கே: 'அட்சரம்' பத்திரிகை வாயிலாக மொழி பெயர்ப்பை ஊக்குவித்து வருகிறீர்கள். நீங்களும் அதில் ஈடுபடுகிறீர்களா?

ப: இல்லை. ஒரு புத்தகத்தை மொழி பெயர்க்க மூல நூல்கள் அனைத்தையும் படிக்க வேண்டும். ஒரு மொழி பெயர்ப்பு செய்ய இரண்டு ஆண்டுகள் ஆகி விடுகிறது.

கே: இலக்கியத்தில் வேறு என்ன செய்ய விரும்புகிறீர்கள்?

ப: சொன்னால் சிரிப்பீர்கள். (சிரிக்கிறார்) தமிழில் காமிக்ஸ் எழுதுவது என் நீண்ட நாள் விருப்பம். லூயி கரோலின் 'ஆலிஸ் இன் வொண்டர்லேண்ட்' போன்ற புத்தகங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும்.



கே: தங்களது சமகால கலைஞர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தற்கால எழுத்தாளர்களை மட்டும் என்னால் சம கால கலைஞர்களாகப் பார்க்க இயலாது. ஆண்டாளின் பாடலைக் கேட்கும்பொழுது அவரை என் சம காலத்தவராக உணர முடிகிறது. புறநானூற்று மாந்தர் ஒவ்வொருவரும் என் சம காலத்தவராக மாறி விடுகிறார்கள். அதனால் காலம், நூற்றாண்டு போன்ற பிரிவுகளில் எனக்குப் பிடிப்பு இருப்பதில்லை.

கே: தாங்கள் தற்போது எழுதி வரும் புத்தகங்கள்..."

ப: மடாலயம் பற்றிய நாவல் ஒன்றை எழுதி வருகிறேன். அதற்காக புத்தரையும் அவரது வாழ்வு தொடர்பான ஆய்வு ஒன்றையும் செய்து வருகிறேன். உலகத் திரைப் படங்கள், இயக்குநர்கள் பற்றி நண்பர்களுடன் சேர்ந்து ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

கே: சினிமாத் துறையில் ஓர் இலக்கியவாதி பரிச்சிட முடியுமா?

ப: ஓர் எழுத்தாளன் சினிமாத் துறையில் சுதாசிரியராகத்தான் இருக்க முடியும். வசனங்களின் வாயிலாக செழுமையை வெளிக்காட்ட முடியாது.

கே: தற்காலிகக் கவிதைகளைப் பற்றி...

ப: இப்பொழுதுள்ள கவிஞர்கள் தங்களுக்கென்று ஒரு மொழி, ஒரு உலகம் என நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு மரபு ஒரு சுமையாக உள்ளது என்று நினைக்கிறேன்.

கே: தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது பற்றி...

ப: வரவேற்கிறேன். உலக அளவில் தமிழைக் கொண்டு செல்ல, தமிழ் இலக்கியங்களைப் பரந்த அளவில் அறிமுகப்படுத்த இது உதவும். நாம் பல காலமாகப் பயன்படுத்தும் மிதிவண்டியின் உதிரிப் பாகங்களுக்கு டயர், ட்யூப், ஸ்போக்ஸ் என ஆங்கில வார்த்தைகளைத்தான் வைத்துள்ளோம். இப்படி இங்கிலீஷ்காரன்தான் இன்னும் இங்கே சைக்கிள் ஓட்டிக் கொண்டு இருக்கிறான். வார்த்தைகள், இலக்கியம் மட்டுமின்றி, எந்த வொரு துறையிலும் அதன் முக்கிய முன்னோடிகளைப் பற்றி புத்தகங்கள் தமிழில் இல்லை. இது இனிமேலாவது கவனிக்கப்பட வேண்டும்.

க்ளிக் + ச: மருதன்

[illegible]

இத்தாலி சென்னையில் உள்ளது!

இப்பொழுதுதான் இத்தாலியைப் பற்றிய சர்ச்சைகள் ஓய்ந்திருக்கின்றன. இந்த நேரம் பார்த்து மறுபடியும் இத்தாலியை இந்தியாவிற்குள், அதிலும் சென்னைக்குள் ஒருவர் இழுத்து வந்திருக்கிறார்.

'லா தெரஸா' இதுதான் அந்த ரெஸ்டாரெண்டின் பெயர். பெயர் என்னவோ வாயில் நுழையாததுபோல் தோன்றினாலும், பரிமாறப்படும் மெனுக்கள் கட்டாயம் வாயில் நுழைந்து விடும் என்கிறார் செஃப் ராஜ்.

"அப்படியே இத்தாலி விருந்து உணவு வகைகளை அள்ளி விடாமல், சென்னையின் ருசிக்கேற்ப பல புதுமையான மாறுதல்களைச் செய்திருக்கிறோம். சாலட், சாட் வகைகள், சூப் என்று தொடங்கி, பல வித வித்தியாசமான அனுபவங்கள் இங்கே காத்திருக்கின்றன" என்கிறார் அவர்.



ச: மருதன்

[illegible]

ஞாயிறன்று நாவை சுண்டி இழுக்கும் விழா ஒன்று நடந்தது. அது எம்.ஜி.ஆர். இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் நடத்திய டேஸ்ட் ஆஃப் இந்தியா எனும் உணவுத் திருவிழாதான்.

விழாவின் நோக்கம் கேட்டரிங் கோர்ஸும் பிற புரொபசனல் கோர்ஸ் போல் மரியாதை பெறவும், அங்கீகாரம் பெறவும் ஏற்படுத்த பதான்.

ஸ்பெஷல்
கெஸ்ட்
மல்லிகா
பத்ரிநாத் பத்து
டிபன்
வழங்கின ர்,
"கேட்டர் ;
கோர்ஸ் ஸ
டையவரை
படிக்க வ ச்சா
பொண்ணு
கொடுப்ப ங்
களான்னு
பெற்றோர் ன்
பயப்படுற ங்க!
நளபாகத்த நாட
மரியாதை யப்
புரிஞ்சுக்கே ங்க!"
என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் இன்ஸ்டிடியூட்டின் முதல்வர்.

விழாவின் இறுதியில் பரிமாறப்பட்ட சைவ, அசைவ ஐயிட்டங்கள் சூப்பரப்பு!

ச: வித்யன்



தியேட்டர்களெல்லாம் இடிக்கப்பட்டு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸாக, கல்யாண மண்டபங்களாக மாறி வரும் நேரத்தில், ஷாப்பிங் போகணுமா, விதவிதமான உணவு வகைகள் சாப்பிடணுமா, குழந்தைகளை குஷிப்படுத்தணுமா, வீட்டில் ஃபங்ஷனா, படமும் பார்க்க ஆசையா- இது எல்லாமே அபிராமி மால் வளாகத்தில் சாத்தியமாகிறது. ஆச்சரியம்! நகைக் கடையும், ஏடிஎம் சென்டரும் கூட இருக்கிறது. ஒரே கூரையின் கீழ் பொழுது

தியேட்டருக்கு கூட்டம் வருகிறது!

போக்கும், அத்தியாவசியத் தேவைகளும் பூர்த்தியாகின்றன. கூரைக்கு மேலே ட்ரைவ் இன் ரெஸ்டாரண்ட். கார்களை மேல்தளத்திற்கு ஓட்டிச் சென்று வானுக்குக் கீழே சாப்பிடணுமாம். (நிலாச் சோறு!)

'அபிராமி தியேட்டர் இப்படி அட்டகாசமாக மாறும் என எதிர்பார்க்கவில்லை' என 'அபிராமி' ராமநாதன் அவர்களிடம் கேட்டோம். "இதே ஸ்பீடில் நிலைக்க விரும்புவதால் மக்களுக்கு ஏற்றவாறு இம்மாதிரியான மாறுதல்களைச் செய்ய வேண்டியுள்ளது. 'மால்' செயல்படத் துவங்கிய பிறகு அபிராமி தியேட்டருக்கு வரும் கூட்டம் 15% கூடியிருக்கிறது. அடுத்ததாக இந்தியாவிலேயே முதன்முறையாக இம் மாத இறுதியில், ப்ரொஜக்டர்கள் உதவியின்றி கம்ப்யூட்டர் டிஸ்க் மூலம் டிஜிடல் முறையில் படங்களை திரையிட உள்ளோம். இதன்மூலம் திருட்டுவிசிடியை ஒழிக்க முடியும்" என்றார் தெம்புடன். உலகம் முழுவதும் திரையரங்குகள் நாளுக்கு நாள் புதுச்சட்டை அணிந்து வரும் வேளையில், அபிராமியும் மில்லினியம் ஸ்டைலில் மாறி பளிச்சிடுவது சென்னைக்கே பெருமையான விஷயம்.

தினம் தினம் விதமான வேடிக்கை நிகழ்ச்சிகளும், கேம் ஷோக்களும் நடத்தி, குழந்தைகளின் புது தீம் பார்க்காகவும் கலக்கிக் கொண்டிருக்கிறது அபிராமி மால்.

- எழில்

கேம்பஸ் கடலை!

ஸ்மைல் ப்ளீஸ்!

'ஏப்ரல் மே'யிலே பசுமையில்லே' என்பதெல்லாம் போயே போச்சு. அண்ணா யூனிவர்சிட்டிக்குள் வந்து பார்த்தால்தான்



* கேம்பஸ் கடலைக்கு முதல் டோணி நாங்கதானா!

தெரிகிறது. காலண்டர் போல வருடத்திற்கு 12 மாதங்களும் ஸ்டூடண்ட்ஸ் வருகையால் தன்னை இளமையாக வைத்துக் கொண்டிருக்கிறது அது.

காலேஜ் ரோட்டில் கால்தடங்கள் இல்லை. வெகேஷன் முடியாததால் வகுப்பறைகளும் காலி. கான்டீன் மட்டும் கமகம வாசத்தோடு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. யூனிவர்சிட்டியின் எத்தனை மாணவர்களின் வாய்க்கும், கைக்கும் சண்டை நடக்கும் 'புகழ் பெற்ற' இடமிது. (ஸ்பெஷல் மசாலா தோசை - ரூ 5.50!)

சந்தோஷ், சரண்யா, ரவிசங்கர், நித்யா, வித்யா பாலா, எம்.சி.எஸ் படிக்கும் இவர்களுக்கெல்லாம் மாத இறுதி வரை க்ளாஸ் கிடையாது. ஆனால் கான்டீனில் கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். "ஃப்ரெண்ட்ஸைப் பார்க்கணும் போலிருந்தது. அதான் சொல்லி வைச்சு வந்துட்டோம்." பில்கேட்ஸ் கம்பெனிக்கு ஒத்தாசையாக இருக்க இப்போதிருந்தே ரெடியாகி விட்டார்கள். "எந்தக் கம்பெனி நிறைய துட்டை வெட்டுறானோ அங்க போயி ஒட்டுவோம்" என்கின்றனர் டாலர் ட்ரீம்ஸ்களுடன்!

கவிதையில்லாத காலேஜ் கேம்பஸா? "கண்ணே, நீ ஓட்டப்பந்தய வீராங்கனையாமே, எங்கே என்னிடம் ஓடிவா பார்ப்போம்" வாசித்தார் சந்தோஷ். (அண்ணாவில் ஏராளமான பெண் அத்லெட்கள் உண்டாமே!)

அண்ணா சிலையின் முன்பு ராஜா ராமன், ஜெயலக்ஷ்மி, ஸ்ரீகதா, ராஜேஷ் ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள். எம்.எஸ்சிக்குப் பருவ காலம் முடிந்து இறுதி உபசரிப்புகளுக்கு வந்திருந்தார்கள். ராஜாராம் ஒரு மடை திறந்த வெள்ளம். "நான் நியூ காலேஜில டிகிரி முடிச்சேன். அப்பெல்லாம் பஸ்ஸுக்கு மேலேதான் டிராவல் பண்ணுவேன். இங்க வந்த பிறகு ஆளே மாறிட்டேன். இங்க ஸீட் கிடைச்சா போதும். எந்தக் கோர்ஸ் வேண்டுமானாலும் படிக்கலாம். இப்போ எங்களுக்கு ப்ளேஸ்மெண்ட் கிடைக்கிற மாதிரி இருக்கு" என்றார்.

சந்தித்தவர்களையெல்லாம் 'க்ளிக்' செய்தோம். சிரமமில்லை. கேஷுவலாக அட்டென்ஷனில் நிற்காமல் கலகலப்பாக போஸ் கொடுத்தார்கள். 'ஸ்மைல் ப்ளீஸ்' அவசியமில்லாமல் போனது. க்ளிக்: முகில் - எழில்

போஸ்ட் கார்ட் Poll

மக்கள் மத்தியில் சூப்பர் ஸ்டாரின் வாய்ஸ் இனி வருங்காலத்தில் எடுபடுமா?

○ நிச்சயமாக!

○ சான்ஸே இல்லை!

○ ஜக்குபாவைப் பொறுத்தது!

இந்த மூன்றில் உங்க பதில் எதுன்னு போஸ்ட்கார்டுல தட்டி விடுங்க... ரிசல்ட் அடுத்த வாரம்.

முகவரி: போஸ்ட் கார்ட் Poll, சென்னை ஸ்கேன், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered as TN/PMG(CCR)/572/03-05 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 396/03-05 *
Registered as a Newspaper in Srilanka Supplement to the Kalki issue Dated 20.6.2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka



சரபோஜி மன்னர்களின் நெசவுக்கலைக்கு புத்துயிரூட்டினோம்.
தேசிய விருது பெற்றோம்.



வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பணம்

கி.பி. 18–19ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட சரபோஜி அரசவம்சத்தின் மகாராணிகளை அலங்கரித்த ஆடைகளை நெய்தவர்கள் கோடலி கருப்பூர் நெசவுக் கலைஞர்கள். காலப்போக்கில் மறைந்து விட்ட இக்கலைக்கு புத்துயிரூட்டி போத்தீஸ் உருவாக்கியுள்ள புடவைக்கு மத்திய அரசின் நெசவுக்கலைக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

பெருமை மிக்க இவ்விருதை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

போத்தீஸ்

அழகிய ஜவுளிகளின் ஆலயம்

சென்னை ❖ திருநெல்வேலி ❖ ஸ்ரீவில்லிபுத்தூர்

தேசிய விருது பெற்றுள்ள புடவை போத்தீஸ் ஷோருமின்
முதல் மாடியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.